## ஓரெழுத்து ஒரு மொழி

- ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவது ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.
- உயிர் எழுத்துகள் வரிசையில் ஆறு எழுத்துகளும், மகர வரிசையில் ஆறு எழுத்துகளும், த, ப, நகர வரிசைகளில் ஐந்து ஐந்து எழுத்துகளும். க, ச, வகர வரிசைகளில் நான்கு எழுத்துகளும், யகர வரிசையில் ஒரு எழுத்தும் ஆக மொத்தம் நாற்பது நெடில் ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் என்றார் நன்னூலார். நொ, து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு என்றார்.

**நன்னூலார் கருத்து:**

- பதம் என்பதன் இலக்கணத்தை வரையறை செய்யும்போது, எழுத்துத் தனித்துப் பொருள் தரின் அல்லது தொடர்ந்து நின்று பொருள் தரின் அது 'பதம்' எனப்படும் என்று நன்னூல் விளக்கியதைக் கண்டோம்.
- அவ்வாறு ஓர்எழுத்து ஒருமொழியாக அமையும் தமிழ் எழுத்துகள் எத்தனை என்பதை நன்னூல் பட்டியலிட்டுக் காட்டுகின்றது. அவற்றை,
- **உயிர் ம வில் ஆறும், தபநவில் ஐந்தும் கவசவில் நாலும், யவ்வில் ஒன்றும், ஆகும் நெடில், நொ,து ஆம் குறில் இரண்டோடு ஓர் எழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின** என்னும் நூற்பாவின் (128) வழி நன்னூல் விளக்குகிறது.

| | |
|---|---|
| உயிர் எழுத்து | ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ |
| மகர வரிசை | மா, மீ, மூ, மே, மே, மோ |
| தகர வரிசை | தா, தீ, தூ, தே, தை |
| பகர வரிசை | பா, பூ, பே, பை, போ |
| நகர வரிசை | நா, நீ, நே, நை, நோ |
| ககர வரிசை | கா, கூ, கை, கோ |
| சகர வரிசை | சா, சீ, சே, சோ |
| வகர வரிசை | வா, வீ, வை, வெள |
| யகர வரிசை | யா |
| குறில் எழுத்து | நொ, து |

தொல்காப்பியருக்கு நெடிதுநாள் பின்னே தோன்றிய நன்னூலார் நொ, து என்னும் உயிர்மெய் எழுத்துகளும் பொருளுடைய ஓர் எழுத்து மொழி என்பார்.

**பூ-யா சொற்கள்:**

- "பூ" என்பது ஓரெழுத்து ஒரு மொழி. "கா" என்பதும் ஓரெழுத்து ஒரு மொழி. இவை இரண்டையும் இணைத்து "பூங்கா" எனக் கலைச்சொல் ஆக்கி வைத்துள்ளனர்.
- யா என்பது வினா. யாது, யாவர், யாவன், யாங்கு, யார், யாவை என்றெல்லாம் வினாவுவதற்கு முன் வந்து நிற்கும் எழுத்து "யா" தானே!

**ஆ சொல்:**

- ஆ, மா, நீ, மீ, பீ, ஊ, சே, தே இவ்வாறான ஓரெழுத்து ஒரு மொழிகளும் உள்ளன. பூங்கா இணைந்தது போல ஆ, மா என்பவை இணைந்து ஆமா என்னும் கலைச்சொல் வடிவம் கொண்டமை பண்டைக் காலத்திலேயே உண்டு. காட்டுப் பசுவுக்கு 'ஆமா' என்று பெயர்.

**மா சொல்:**

- மா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழிகளுள் ஒன்று. நாட்டிலுள்ள பெருமக்கள் பெரிதும் கூடும் அவையை மாநாடு என்கிறோம். பல குறு நிலங்களை உள்ளடக்கிய பெருநிலத்தை மாநிலம் என்கிறோம். மா என்பது விலங்கையும் குறிக்கும். அரிமா, பரிமா, நரிமா, வரிமா, கரிமா என்றெல்லாம் வந்து விலங்கினப் பெயராகி நிற்கின்றது.

**ஈ-காரச் சொல்:**

- ஈ என்பது பொதுப்பெயர் ஓயாது ஒலி செய்யும் ஒலிக்குறிப்பைக் காட்டி நிற்கிறது. மாட்டு ஈ, தேன் ஈ எனப் பகுத்து வழங்கும் வழக்கம் உள்ளது. ஈ என்பது ஈகை என்னும் பொருளில் வழங்குதல் வெளிப்படை. ஈ என்று பல்லைக் காட்டாதே என்று அறிவுரை கூறுவதும் உண்டு.

**கால மாற்றத்தில் கரைந்தவை:**

- இன்னொரு வகையாகவும் பார்க்கலாம். ஆன் என்பது ஆ ஆகியது; மான் என்பது மா ஆகியது; கோன் என்பது கோ ஆகியது; தேன் என்பது தே ஆகியது; பேய் என்பது பே ஆகியது இவையெல்லாம் கால வெள்ளத்தில் கரைந்து தேய்ந்தவை.

**ஏகாரச் சொல்:**

- எட்டத்தில் போகிற ஒருவனை ஏய் என அழைத்தனர். ஏற் என்பது என்னோடு கூடு, பொருந்து, சேர் என்னும் பொருளை உடையது. ஏய் என்பது ஏ என வழக்கில் ஊன்றிவிட்டது. அம்மை ஏவு என்பர். ஏவுதல் என்பது "அம்பு விடுதல்" ஏவும் அம்பு" ஏ என்றாகியது. அம்பு விரைந்து செல்வது போலச் சென்று உரிய கடமை புரிபவன் ஏவலன் எனப்பட்டான். அம்பு விடும் கலை ஏகலை என்றது தமிழ். அதில் வல்லவனை ஏகலைவன் என்று பாராட்டியது.

- தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிச் சொற்களின் பெருக்கம் நம் மொழியின் பழமை, உயிரோட்டம், பெருவழக்கு என்பனவற்றை கையில் கனியாகக் காட்டும்.
- நன்னூல் என்னும் இலக்கண நூல் எழுதிய பவணந்தி முனிவர் தமிழில் நாற்பத்திரண்டு ஓரெழுத்து ஒருமொழிகள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் நொ, து ஆகிய இரணடு சொற்களைத் தவிர ஏனைய நாற்பது சொற்களும் நெடில் எழுத்துகளாக அமைந்தவை ஆகும்.

**புத்தக ஓரெழுத்து ஒரு மொழி:**

| ஓரெழுத்து ஒரு மொழி | பொருள் |
|---|---|
| ஆ | பசு |
| ஈ | கொடு |
| ஊ | இறைச்சி |
| ஏ | அம்பு |
| ஐ | தலைவன் |
| ஓ | மதகுநீர் தாங்கும் பலகை |
| கா | சோலை |
| கூ | பூமி |
| கை | ஒழுக்கம் |
| கோ | அரசன் |
| சா | இறந்துபோ |
| சீ | இகழ்ச்சி |
| சே | உயர்வு |
| சோ | மதில் |
| தா | கொடு |
| தீ | நெருப்பு |
| தூ | தூய்மை |
| தே | கடவுள் |
| தை | தைத்தல |
| நா | நாவு |
| நீ | முன்னிலை ஒருமை |
| நே | அன்பு |
| நை | இழிவு |
| நோ | வறுமை |
| பா | பாடல் |

| | |
|---|---|
| பூ | மலர் |
| பே | மேகம் |
| பை | இளமை |
| போ | செல் |
| மா | மாமரம் |
| மீ | வான் |
| மு | மூப்பு |
| மே | அன்பு |
| மை | அஞ்சனம் |
| மோ | முகத்தல் |
| யா | அகலம் |
| வா | அழைத்தல் |
| வீ | மலர் |
| வை | புல் |
| வெள | கவர் |
| நொ | நோய் |
| து | உண் |

**மற்ற ஓரெழுத்து ஒரு மொழிச் சொற்கள்:**

| |
|---|
| அ - சுட்டெழுத்து, எட்டு, சிவன், விஷ்ணு, பிரம்மா, அழகு |
| ஆ - பசு(ஆவு), ஆன்மா, இரக்கம், நினைவு, ஆச்சாமரம் |
| இ - சுட்டெழுத்து, இரண்டில் ஒரு பங்கு அரை என்பதின் தமிழ் வடிவம். |
| ஈ - பறக்கும் ஈ, தா, குகை, தேனீ, கொடு. |
| உ - சிவன், ஆச்சரியம், சுட்டெழுத்து, இரண்டு என்பதின் தமிழ் வடிவம் |
| ஊ - இறைச்சி, உணவு, ஊன், தசை |
| எ - வினா எழுத்து, ஏழு என்பதின் தமிழ் வடிவம் |
| ஏ - அம்பு, உயர்ச்சிமிகுதி |
| ஐ - அழகு, உயர்வு, உரிமை, தலைவன், இறைவன், தந்தை, ஐந்து, வியப்பு, மேன்மை |
| ஒ - மதகு, (நீர் தாங்கும் பலகை), வினா |
| ஓ — வினா, இரக்கம், வியப்பு, உயர்வு |
| ஔ - பூமி, ஆனந்தம் |
| க - வியங்கோள் விகுதி |
| கா - காத்தல், சோலை, காகம், |
| கி - இரைச்சல் ஒலி |

| |
|---|
| கு - குவளயம் |
| கூ - பூமி, கூவுதல், உலகம் |
| கை - உறுப்பு, கரம் |
| கோ - அரசன், தந்தை, இறைவன் |
| அரசன், தலைவன், பூமி, மலை, நீர், எருது, |
| கௌ - கொள்ளு, தீங்கு |
| சா - இறத்தல், சாக்காடு, மரணம், பேய், சாதல், |
| சீ - லட்சுமி, இகழ்ச்சி, வெறுப்புச் சொல், திருமகள் |
| சு - விரட்டுதல், சுகம், மங்கலம் |
| சே - காலை, எருது, அழிஞ்சில் மரம் |
| சை - அறுவறுப்பு ஒலி, கைப்பொருள் |
| சோ - மதில், அரண், உமை |
| ஞா - பொருத்து, கட்டு |
| தா - கொடு, கேட்பது |
| தீ - நெருப்பு, தீமை |
| து - உண், கெடு, பிரிவு, உணவு, பறவை இறகு. |
| தூ - வெண்மை, தூய்மை |
| தே - கடவுள், நாயகன், தெய்வம் |
| தை - தமிழ்மாதம், தைத்தல், பொருத்து |
| நா - நான், நாக்கு |
| நி - இன்பம், அதிகம், விருப்பம் |
| நீ - முன்னிலை ஒருமை, நீக்குதல், நின்னை |
| நு - யானை, ஆபரணம், அணி |
| நே - அன்பு, அருள், நேயம் |
| நை - வருந்து, நைதல் |
| நொ – நோவு, நோய், நொண்டி, துன்பம் |
| நோ - துன்பப்படுதல், நோவு, வருத்தம் |
| நௌ - மரக்கலம் |
| ப - நூறு |
| பா - பாட்டு, கவிதை, நிழல், அழகு |
| பூ - மலர் |
| பே - மேகம், நுரை, அழகு, அச்சம் |
| பை - கைப்பை, பாம்புப் படம், பசுமை, உறை |
| போ - செல், ஏவல் |

| | |
|---|---|
| ம - சந்திரன், எமன் |
| மா - பெரிய, சிறந்த, உயர்ந்த, மாமரம், குதிரை, பெருமை, மாம்பழம் |
| மீ - மேலே, உயர்ச்சி, உச்சி, ஆகாயம், உயரம், மேலே, |
| மூ - மூப்பு, முதுமை, மூன்று |
| மே - மேல், மேன்மை, மாதம் |
| மை - கண்மை (கருமை), அஞ்சனம், இருள், கருநிறம் |
| மோ - மோதல், முகர்தல் |
| ய - தமிழ் எழுத்து என்பதின் வடிவம் |
| யா - ஒரு வகை மரம், யாவை, இல்லை, அகலம் |
| வ - நாலில் ஒரு பங்கு "கால்" என்பதன் தமிழ் வடிவம் |
| வா - வருக, ஏவல், அழைத்தல் |
| வி - அறிவு, நிச்சயம், ஆகாயம் |
| பறவை, கண், விசும்பு, |
| வீ - மலர், அழிவு, பறவை, கொல்லுதல், அழித்தல் |
| வே - வேம்பு, உளவு |
| வை - வைக்கவும், கூர்மை, வைக்கோல், வைதல், வைத்தல் |
| வௌ - வவ்வுதல், கௌவுதல், கொள்ளை அடித்தல் |
| நே — அன்பு, நேயம் |
| நொ - நொண்டி, துன்பம், |
| நோ - நோவு, வருத்தம் |
| ள - தமிழெழுத்து நூறு என்பதன் வடிவம் |
| ளு - நான்கில் மூன்று பகுதி, முக்கால் என்பதன் வடிவம் |
| று - எட்டில் ஒரு பகுதி அரைக்கால் எனபதன் வடிவம். |

1. **நிலவையும் சந்திரனையும் குறிக்கும் வேறு சொல்: மதி அம்புலி, திங்கள்**

**சந்திரன் வேறு பெயர்கள்:**

- அம்புலி
- அம்புலியம்மான்
- அருச்சிகன்
- அமதி
- அமுதகிரணன்
- அமிர்தகிரணன்
- அத்திநவநீதகம்
- அமுதககதிரோன்
- அதிசாந்திரன்
- அமுதகிரணன்
- அந்திகாவலன்
- அமுதசம்பூதன்
- அந்திகோன்
- அரிச்சிகன்

- அம்புலிமான்
- அமுதசம்பூதனம்
- அம்போசன்
- அரிணாங்கன்
- அல்லோன்

**நிலவின் வேறு பெயர்கள்:**

- ஆலோன்
- ஆத்திரேயன்
- ஆம்பல்

**சந்திரனின் மறு பெயர்கள்:**

- இமகரன்
- இரவோன்
- இராக்கதிர்
- இராமன்
- இந்து
- இராவோன்
- இமகிரணன்
- இருபிறப்பாளன்
- இரவன்
- இருபிறப்பு

2. **வயலையும் கழனியையும் குறிக்கும் வேறு சொல்:**

**வயலுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள்:**

- தோப்பு
- தோட்டம்
- காடு
- கழனி
- சேறு
- செய்
- பண்ணை
- பழனம்
- மருதநிலம்
- வெளி
- களம்
- கொல்லை காடு

**3. தீயையும் அனலையும் குறிக்கும் வேறு சொல்**

- நெருப்பு
- தனல்
- அக்கினி
- அரி
- கனல்
- சுடர்
- தழல்
- அங்கி
- வன்னி
- கனலி
- ஆரல்
- எரி
- வசு
- அங்காரகன்
- எழுநா
- அழல்
- இறை
- காட்டுத் தீ
- காட்டெரி
- தாவம்
- வரையனல்
- தீபம்
- தீவிகை

**4. குழந்தையையும் மகவையும் குறிக்கும் வேறு சொல்**

- சிசு
- மகவு
- மழலை
- குழவி
- கைக்குழந்தை

**5. களிப்பையும் மகிழ்ச்சியையும் குறிக்கும் வேறு சொல்**

- சந்தோசம்
- களிப்பு
- ஆனந்தம்
- இன்பம்
- குதூகலம்
- உவகை
- எக்களிப்பு
- புளகம்
- புளகிதம்

**6. வேளாண்மையையும் விவசாயத்தையும் குறிக்கும் வேறு சொல்**

- உழவு
- கமம்
- உபகாரம்
- உதவி
- கொடை

**7. அழகையும் கவினையும் குறிக்கும் வேறு சொல்**

- கவர்ச்சி
- ஈர்ப்பு
- முழுமை
- எழில்
- பொழிவு

**8. உண்மையையும், மெய்மையையும் குறிக்கும் வேறு சொல்**

- வாய்மை
- நேர்மை
- உள்ள தன்மை
- சத்தியம்
- பொய்யல்லாதது
- நியாயம்

**9. உலகத்தையும் ஞாலத்தையும் குறிக்கும் வேறு சொல்.**

- உகம்
- குவலயம்
- குவவு
- ஞாலம்
- பார்
- பொழில்
- புடவி
- பூழில்
- பொறை
- நீரகம்
- கிடக்கை
- மண்ணுலகு
- மண்ணகம்
- இருநிலம்

- வையம்
- அவனி
- மேதினி
- தரணி
- அகிலம்
- காசினி

**10.மேகத்தையும் காரையும் குறிக்கும் வேறு சொல்**

- மஞ்சு
- முகில்
- கொண்டல்
- எழில்
- வள்ளல்
- கொண்மூ
- தளி
- பம்மு

**காடு வேறு பெயர்கள்:**

- கா
- கால்
- கான்
- கானகம்
- கணையம்
- அடவி
- அரண்
- அரில்
- அறல்
- அழுவம்
- ஆரண்
- இயவு
- இயம்பு
- தில்லம்
- பழவம்
- பதுக்கை
- புரவு
- பொதி
- பொழில்
- பொச்சை
- பொற்றை
- வனம்
- வல்லை
- விடர்
- வியல்
- மிளை
- முளி
- முதை
- முளரி
- சுரம்

**ஒரு சொல் இரு பொருள்:**

பெரும்புலவர் ஒருவர் விருந்துண்ணச் சென்றார். விருந்து முடிந்ததும், அவர் பருகுவதற்குப் பால் வழங்கப்பட்டது. அந்தப் பாலில் ஒரு சிற்றெறும்பு கிடந்தது. அதனைக் கண்டதும் அவர்,"பாற்கடலில் சீனிவாசன் பள்ளி கொள்கிறான்" என்றார். அவர் கூறியதன் பொருள் விளங்காமல், அருகிலிருந்தவர்கள்

வியப்புடன் நோக்கினர். அதற்கு அப்பெரும்புலவர், 'சீனி (சருக்கரை) யின் வாசத்தை அறிவது எறும்புதானே! அதனால், எறும்பைச் சீனிவாசன் என்று கூறலாமல்லவா! இந்தப் பாலில் எறும்பு இருப்பதைப் பாருங்கள். அதைச் சுட்டவே, "பாற்கடலில் சீனிவாசன் பள்ளி கொள்கிறான் என்று கூறினேன்" என விளக்கம் தந்தார்.

**பாற்கடலில் சீனிவாசன் - இருபொருள்**

- திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள இறைவன்.
- சீனியின் வாசம் அறியும் எறும்பு.

## பல பொருள் தரும் ஒரு சொல்லைக் கூறுக & ஒரு பொருள் தரும் பல சொற்கள்

### ஒரு சொல் குறித்த பல பொருள்கள்:

ஒரு சொல் ஒரு பொருளைக் குறிப்பதும் உண்டு; பல பொருளைக் குறிப்பதும் உண்டு.

**(எ-டு:)**

| | |
|---|---|
| மரம் | ஒரு பொருள் குறித்தது |
| தாமம் | மலர் மாலை, அச்சம், இடம், உடல், ஒழுங்கு, கயிறு, ஒளித்தொகுதி, கொன்றை மரம், நகரம், பறவைகளின் கழுத்து ஆரம், பூ, பெருமை, போர்க்களம், மணிகள் கோத்த அணிகலன், மலை, மாலை, தலைப்பின்னல் வகையில் ஒன்று, யானை, விருப்பம், வீடு எனப் பல பொருள் குறித்தது. |

- இவ்வாறு, பல பொருள் குறித்த சொல் ஒரு தொடரில் வரும் பொழுது எவ்வாறு பொருள் கொள்வது என்பதற்குச் சான்றோர்கள் வழிகாட்டியுள்ளனர். பல பொருள் குறித்த சொல்லை ஒரு தொடரில் பயன்படுத்தும் பொழுது, வினை, சார்பு, இனம், இடம் என்பனவற்றைக் குறிக்கும் சொற்களைச் சேர்த்துச் சொல்லி அதன் பொருளைத் தெளிவுபடுத்துதல் மரபு.
- மா என்னும் சொல் மாமரத்திற்கும் வண்டிற்கும் குதிரைக்கும் இலக்குமிக்கும் பொதுவான பல பொருள் ஒரு சொல்.

இப்பொருள்களுள்,

**(எ-டு:)**

| | |
|---|---|
| மா **காய்த்தது** | மரம் என்பதைக் காய்த்தது என்னும் **வினை** காட்டுகிறது. |
| மா மொய்த்த **மலர்** | வண்டு என்பதை மலர் என்னும் **சார்பு** காட்டுகிறது. |
| மா, **யானை, தேர், காலாள்** | குதிரை என்பதை யானை, தேர்,காலாள் என்னும் **இனம்** காட்டுகிறது. |
| மா தங்கும் **திருமால்** | இலக்குமி என்பதைத் தங்கும் இடமாகிய திருமால் (இன் மார்பு) என்னும் **இடம்** காட்டுகிறது. |

- இவ்வாறு இல்லாமல் மா ஏறினான், மா யாது என்றால் மா என்பதன் பொருள் விளங்காது. அதனை விளக்குவதற்காக மா என்பதனோடு மேலே குறிப்பிட்டவாறு வேறுபடுத்திக் காட்டும் சிறப்புச் சொல்லையும் அறிஞர் சேர்த்துச் சொல்வது மரபு ஆகும்.

**வினைசார்பு இனம் இடம் மேவி விளங்காப்**
**பலபொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்பெடுத்தே- (நன்னூல்-390)**

**பல பொருள் குறித்த ஒரு சொல்:**

| பல பொருள் | ஒரு சொல் |
|---|---|
| கா, கால், கான், கானகம், அடவி, அரண், ஆரணி, புரவு, பொற்றை, பொழில், தில்லம், அழுவம், இயவு, பழவம், முளரி, வல்லை, விடர், வியல், வனம், முதை, மிளை, இறும்பு, சுரம், பொச்சை, பொதி, முளி, அரில், அறல், பதுக்கை, கணையம். | காடு |
| புணரி, ஆழி, சாகரம், சமுத்திரம், பௌவம், வேலை, முந்நீர், நீராழி, பெருநீர் | கடல் |
| கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, பஃறி, ஓடம் | கப்பல் |
| ஓர் எண் (6), இயற்கையாக இருகரைகளுக்கு இடையில் நீர் ஓடும் பரப்பு, வழி, தணி | ஆறு |
| கயம், வேழம், களிறு, பிளிறு, களபம், மாதங்கம், கைம்மா, வாரணம், அஞ்சனாவதி, அத்தி, அத்தினி, அரசுவா, அல்லியன், அனுபமை, ஆனை, இபம், இரதி, குஞ்சரம், வல்விலங்கு, கரி, அஞ்சனம். | யானை |
| மணம், காவல், விரைவாக, கூர்மையான, வாசனை, காவல், கடி(த்தல்), சிறப்பு, களிப்பு, அச்சம் | கடி |
| உறு, தவ, நனி | மிகுதி |
| ஓவு, ஓவியம், ஓவம், சித்திரம், படம், படாம், வட்டிகைச்செய்தி | ஓவியம் |
| கண்ணுள் வினைஞர், ஓவியப் புலவர், ஓவமாக்கள், கிளவி வல்லோன், சித்திரக்காரர், வித்தகர் | ஓவியம் வரைபவர் |
| எழுதெழில் அம்பலம், எழுத்துநிலை மண்டபம், சித்திர அம்பலம், சித்திரக்கூடம், சித்திரமாடம், சித்திரமண்டபம், சித்திர சபை | ஓவியக் கூடம் |
| இரக்கம், கருணை, தயவு, கிருபை, அபயம். | அருள் |
| அகம், இல், இல்லம், உறையுள், கிருகம், மனை. | வீடு |
| ஞானம், மதி, உணர்வு, உரம், மேதை, விவேகம் | அறிவு |
| ஆகாரம், உண்டி, போஜனம், ஊன், அடிசில், தீனி. | உணவு |

| | |
|---|---|
| பங்கயம், கமலம், அம்புயம், முளரி, புண்டரிகம், சரோருகம், மரை, பூ, தாவுகின்ற மான். | தாமரை |
| திருமால், அரிதல், சிங்கம், வண்டு | அரி |
| விடம், ஒரு மரம், மழைநீர், அம்புக்கூடு | ஆலம் |
| கழுத்து, ஆபத்து, நிலப்பெரும் பிரிவு | கண்டம் |
| பாத்திரம்,கப்பல், ஆபரணம். | கலம் |
| அம்பு, அசையும்பொருள், பூமாலை | சரம் |
| பனை. நா, பூமி | தாலம் |
| அரசன், இடம், கணவன் | பதி |
| பூமி, கற்பாறை, பார்த்தல் | பார் |
| சங்கு, புற்று, வளைதல். | வளை |
| அழகு, நகை, வரிசை, அணிகலன், உடுத்து, அலங்காரம், ஆபரணம். ஒழுங்கு, படைப்பிரிவு, அணிதல், | அணி |
| உள்ளம், வீடு, இடம் | அகம் |
| கணை, மூங்கில், நீர், மேகம் | அம்பு |
| நாடகசாலை, சபை, போர்க்களம் | அரங்கம் |
| சோறு, ஒருவகைப் பறவை | அன்னம் |
| வீடு, மனம், உட்பகுதி | அகம் |
| ஒலி, பாம்பு | அரவம் |
| கடல் அலை, திரி | அலை |
| படுக்கை, தடுத்தல், தழுவு | அணை |
| நீங்கு, விளக்கு ஏற்றும் தானம் | அகல் |
| சொல், அடி, திரை, வீட்டின் பகுதி | அறை |
| கீழ்ப்பகுதி, பாதம், அடித்தல் | அடி |
| வல்லமை, திறமை | ஆற்றல் |
| மாலை, சந்தனம் | ஆரம் |
| ஒருவகை விலங்கு, ஆடுதல் | ஆடு |
| கண்ணாடி, தமிழ்மாதம், கூத்தாடி | ஆடி |
| எண், நதி, வழி | ஆறு |
| உயிர், நீராவி, உயிரெழுத்து | ஆவி |
| ஆலமரம், நஞ்சு,கடல்,கலப்பை | ஆலம் |
| புகழ், இணங்கு, பண் | இசை |
| பூவிதழ், உதடு | இதழ் |
| தாக்கு, வானிடி, முழக்கம், உறுதிச்சொல். | இடி |

| | |
|---|---|
| கடவுள், நீர் இறைத்தல் | இறை |
| ஒலிசெய், உணவு | இரை |
| கொடு, பறவை, இரத்தல், அழிவு | ஈ |
| எரு, ஞானம், மதில், வலிமை | உரம் |
| எரு, ஞானம், மதில், வலிமை | உரம் |
| உடுத்து, விண்மீன், ஒடக்கோல், அகமி | உடு |
| சொல், தேய் | உரை |
| மேலுறை, வசி | உறை |
| ஆடை, ஒருவித இசைக்கருவி | உடுக்கை |
| பருத்தல், ஊதுகருவி, குளிர்க்காற்று | ஊதை |
| அன்னம், நீர்நாய், புளியமரம் | எகினம் |
| காளை, ஆண் சிங்கம், மேலே செல் | ஏறு |
| பாத்திரம், பன்றி | ஏனம் |
| நீர் இறைக்கும் கருவி, உயர்வு | ஏற்றம் |
| சந்தேகம், பிச்சை | ஐயம் |
| கூந்தல்,ஓதுபவன், ஓந்தி | ஓதி |
| ஆடை, கல்வி, கலைத்தல் | கலை |
| நீக்கு, பயிருக்குக் கேடான புல் | களை |
| காவல், காப்பு, கூர்மை, விரைவு | கடி |
| கரும்பு, மூங்கில் | கழை |
| பாவகை, சனி, துன்பம், வறுமை | கலி |
| யானை, சாட்சி, அடுப்புக்கரி | கரி |
| பாறைக்கல், படி, தோண்டு | கல் |
| குரங்கு, கவிஞர், பாடல் | கவி |
| தூண், நடுக்கம் | கம்பம் |
| கலம், நாவாய் | கப்பல் |
| காப்பாற்று, சோலை, காவடி, பூப்பெட்டி | கா |
| பெருங்காயம், புண், உடல், நிலைபேறு | காயம் |
| கருமை, மேகம் | கார் |
| மரக்கிளை, உறவு | கிளை |
| குடித்தல், குடும்பம், குடிப்பழக்கம் | குடி |
| குழந்தை, சேய், குழவிக்கல் | குழவி |
| கைக்குடை, தோண்டு | குடை |
| சேர், உடம்பு, பறவைக்கூடு | கூடு |

| | |
|---|---|
| கிரகம், புறம்கூறுதல் | கோள் |
| சங்கு, கூட்டம் | சங்கம் |
| வழி, வெப்பம் | சுரம் |
| படை, தானை, கிழங்கு | சேனை |
| கிள்ளி, வளவன், அபயன் | சோழன் |
| பாதம், முயற்சி, காகிதம் | தாள் |
| அலை, வெற்றிலை | திரை |
| திங்கள், மாதம், கிழமை, மதி, பிறை, நிலவு, நிலா, அம்புலி | சந்திரன் |
| உயர்ந்த அழகு, செல்வம், மேன்மை, இலக்குமி, மரியாதை அடை. | திரு |
| அலை, விளக்குத் திரி | திரி |
| துண்டு செய், ஆடை | துணி |
| தைத்தல், மாதம் | தை |
| பெண், தைத்தல் | தையல் |
| சிரிப்பு, அணிகலன் | நகை |
| கயிறு, வெட்கம், வட்டத்தின் நடுவில் வரையும் கோடு | நாண் |
| விரும்பு, தேசம் | நாடு |
| பாம்பு, துத்தநாகம் | நாகம் |
| வாசி, படிக்கட்டு, அளக்கும் கருவி | படி |
| கல்விக்கூடம், படுக்கை, தொழுமிடம் | பள்ளி |
| பணிவு, அணிகலன் | பணி |
| உலகம், காண் | பார் |
| மேகம், பெருங்காற்று | புயல் |
| தவறு, உயிர் தப்புதல் | பிழை |
| பெண் யானை, பிடித்துக்கொள் | பிடி |
| அறிவு, நிலா | மதி |
| சோம்பல், இற | மடி |
| வீரம், பாவம் | மறம் |
| திருமணம், கலத்தல் | மணம் |
| பெரிய, விலங்கு, மாமரம் | மா |
| பொழுது, தார் | மாலை |
| குற்றம், தீது | மாசு |
| தலை, செய்துமுடி, கட்டு | முடி |
| உண்மை, உடம்பு | மெய் |

| | |
|---|---|
| மலை, தீட்டு, எல்லை | வரை |
| வலிமை, நோவு | வலி |
| யானை, கோழி, கடல், சங்கு | வாரணம் |
| பதில், காளை | விடை |
| புலி, வேங்கைமரம் | வேங்கை |
| யானை, கரும்பு | வேழம் |
| ஞாயிறு, பகலவன், கதிரவன், ஆதவன், பரிதி, அருக்கன், வெய்யோன், அனலி, இரவி | சூரியன் |
| ஆகாயம், வான், விசும்பு, விண்ணகம், விண் | வானம் |
| தீ, அக்கினி, அழல்,தழல், கனல் | நெருப்பு |
| கவி, கவிதை, செய்யுள், பா, பாடல்,கீதம் | பாட்டு |
| ஏடு, நூல், இழை, பனுவல் | புத்தகம் |
| உலகம்,புவி,பார், வையகம், அகிலம், தரணி, குவலயம் | பூமி |
| துயில், உறக்கம், துஞ்சல், தூக்கம் | நித்திரை |
| தேகம், உடம்பு, சரீரம், மேனி, யாக்கை | உடல் |
| தொனி, சத்தம், அரவம், ஓசை, ஆரவாரம் | ஒலி |
| கதிரவன், வெளிச்சம், விளக்கு. | ஒளி |
| கோபம். சீற்றம், காய்தல், முனிதல் | சினம் |
| மனையாள், இல்லாள், தலைவி, கிழத்தி | மனைவி |
| மெய், சத்தியம், வாய்மை | உண்மை |
| சிரம், உச்சி | தலை |
| சர்ப்பம், அரவம், பணி | பாம்பு |
| மகவு, சேய், பிள்ளை, குழவி, சிசு. மழலை | குழந்தை |
| புன்னகை, நகைப்பு, முறுவல் | சிரிப்பு |
| மன்னன், வேந்தன், கோன், கோ | அரசன் |
| காடு, ஆரணியம், கானகம், அடவி | வனம் |
| ஆவல், விருப்பம், அவா | ஆசை |
| பழனம், கழனி, கமம் | வயல் |
| சமர், அமர், போர், யுத்தம் | சண்டை |
| அன்னம், சாதம், அடிசில், உணவு, ஊன், ஆகாரம், சாப்பாடு. | சோறு |
| குருதி, உதிரம், சோரி, கறை | இரத்தம் |
| அசுவம், துரகம், புரவி, மா,பரி | குதிரை |
| தண்ணீர், புனல், சலம், அப்பு | நீர் |
| அபராதம், குற்றம், தண்டம் | தண்டனை |

| | |
|---|---|
| எழில், வனப்பு, கவின், வடிவு, அணி | அழகு |
| இல்லம், மனை, அகம், உறையுள் | வீடு |
| சியம், கேசரி, மடங்கல், அரி | சிங்கம் |

மனித நேயம் வளர்ப்போம் • மானுடம் மீட்போம் • சைதை சா. துரைசாமியின் மனித நேய அறக்கட்டளை

## பொருந்தாச்சொல்லை கண்டறிக

- பொருந்தாச் சொல் என்பது கொடுக்கப்பட்டுள்ள நான்கு சொற்களில் ஏதேனும் ஒன்று மட்டும் பிற மூன்று சொற்களிலிருந்து வேறுபட்டிருக்கும். இப்பகுதி மிகவும் எளிமையானது. வினாக்கள் இலக்கணக்குறிப்பு, திணைவகைகள், நால் தொகுப்பு போன்றவற்றிலிருந்தும் கேட்கப்படும்.

**எ.கா:**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | a) பகுதி | b) விகுதி | c) இடைநிலை | **d) எதுகை** |
| 2) | a) குட்டி | b) கன்று | c) குஞ்சு | **d) குழந்தை** |
| 3) | a) பரணி | b) உலா | c) கோவை | **d) பழமொழி** |
| 4) | a) அன்னம் | b) கிளி | **c) புலி** | d) மயில் |
| 5) | a) கருமை | b) வெண்மை | c) செம்மை | **d) தாய்மை** |
| 6) | a) அவா | **b) நட்பு** | c) அழுக்காறு | d) வெகுளி |
| 7) | **a) நெற்பயிர்** | b) தென்னை | c) பனை | d) ஆலமரம் |
| 8) | a) வெட்சி | b) வஞ்சி | **c) குறிஞ்சி** | d) தும்பை |
| 9) | a) ஆன்றோர் | b) சான்றோர் | c) பெரியோர் | **d) கயவர்** |
| 10) | a) புகார்க்காண்டம் | b) வஞ்சிக்காண்டம் | **c) பால காண்டம்** | d) மதுரைக்காண்டம் |
| 11) | a) அர்ச்சுனன் | b) தருமன் | **c) ராமன்** | d) சகாதேவன் |
| 12) | a) குறிஞ்சி | b) முல்லை | **c) சாதாரி** | d) நெய்தல் |
| 13) | a) பழமொழி | b) நாலடியார் | **c) பெருங்கதை** | d) திருக்குறள் |

**மற்றவைகள்:**

**இருவினை:**

- நல்வினை
- தீவினை

**இருதிணை:**

- உயர்திணை
- அஃறினை

**மூவிடம்:**

- தன்மை
- முன்னிலை
- படர்க்கை

**அரசருக்குரிய பத்து:**

- படை
- களிறு
- தார்
- குடை
- முரசு
- மாலை
- கொடி
- புரவி
- தேர்
- செங்கோல்

**இராசிகள் பன்னிரெண்டு:**

- மேடம்(மேஷம்)
- துலாம்
- இடம் (ரிஷபம்)
- விருச்சிகம்
- மிதுனம்
- தனுசு
- கடகம்
- மகரம்
- சிம்மம் (சிங்கம்)
- கும்பம்
- கன்னி
- மீனம்

**அட்டமங்கலம்:**

- சாமரம்
- கண்ணாடி
- முரசு
- கொடி
- நிறைகுடம்
- தோட்டி
- விளக்கு
- இணைக்கயல்

**அகத்தியர் மாணக்கர் பன்னிருவர்:**

- செம்பூட்சேஎய்
- தூரலிங்கர்
- வையாபிகர்
- வாய்பியர்
- அதங்கோட்டாசான்
- பனம்பாரனார்
- அவிநயர்
- கழாரம்பர்
- காக்கை பாடினியார்
- நற்றத்தார்
- தொல்காப்பியர்
- வாமனர்

**ஐம்பொறி:**

- மெய்
- வாய்
- மூக்கு
- கண்
- காது

**அகத்திணைகள் ஏழு வகை:**

- குறிஞ்சி
- முல்லை
- மருதம்
- நெய்தல்
- பாலை
- கைக்கிளை
- பெருந்திணை

**புறத்திணைகள் பன்னிரு வகை:**

- வெட்சி
- கரந்தை
- வஞ்சி
- காஞ்சி
- உழிஞை
- நொச்சி
- தும்பை
- வாகை
- பாடாண்
- பொதுவியல்
- கைக்கிளை
- பெருந்திணை

**பருவங்கள் பத்து வகை:**

- காப்பு
- செங்கீரை
- தால்
- சப்பாணி
- முத்தம்
- வருகை
- அம்புலி
- சிறுபறை
- சிற்றில் சிதைத்தல்
- சிறு தேருருட்டல்

**இலக்கணம் ஐந்து:**

- எழுத்து
- சொல்
- பொருள்
- யாப்பு
- அணி

**நாற்றிசை:**

- கிழக்கு
- மேற்கு
- வடக்கு
- தெற்கு

**ஐம்பெரும் பூதங்கள்:**

- நிலம்
- நீர்
- காற்று
- அக்னி
- வானம்

**எண்பேராயம்:**

- கரணத்தியலவர்
- கருமகாரர்
- சுனகச்சுற்றம்
- கடைகாப்பாளர்
- நகரமாந்தர்
- படைத்தலைவர்
- யானைவீரர்
- இவுளிமறவர்

**ஐம்பெருங்குரவர்:**

- அரசன்
- குரு
- தந்தை
- தேசிகன்
- மூத்தோன்

**ஐஞ்சிறுங்காப்பியங்கள்:**

- நாககுமாரகாவியம்
- உதயணகுமார காவியம்
- யசோதர காவியம்
- சூளாமணி
- நீலகேசி

**ஐம்பெருங்காப்பியங்கள்:**

- சீவகசிந்தாமணி
- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- வளையாபதி
- குண்டலகேசி

**செம்மொழி இலக்கியங்கள்:**

- தொல்காப்பியம்
- பத்துப்பாட்டு
- எட்டுத்தொகை
- சிலப்பதிகாரம்
- பதினெண்கீழ்க்கணக்கு
- மணிமேகலை
- இறையனார் அகப்பொருள்
- முத்தொள்ளாயிரம்

**எட்டுத்தொகை நூல்கள்:**

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

**பத்துப்பாட்டு நூல்கள்:**

- திருமுருகாற்றுப்படை
- பெருநாராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

**பதினெண் கீழ்கணக்கு நூல்கள்:**

- நாலடியார்
- நாண்மடிக்கடிகை
- இன்னாநாற்பது
- இனியவை நாற்பது
- கார்நாற்பது
- களவழிநாற்பது
- ஐந்திணைஐம்பது
- ஐந்திணையெழுபது
- திணைமொழி
- திணைமாலை நூற்றைம்பது
- திருக்குறள்
- கைந்நிலை ஐம்பது
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி

**ஈசன் குணம்:**

- வரம்பில் ஞானம்
- வரம்பில் காட்சி
- வலம்பிலின்பம்
- வரம்பிலாற்றல்
- நாமமமின்மை
- கோத்திரமின்மை
- ஆயுளின்மை
- இடையூறின்மை

**முத்தமிழ்:**

- இயல்
- இசை
- நாடகம்

**முக்கனி:**

- மா
- பலா
- வாழை

**முப்பால்:**

- அறம்
- பொருள்
- இன்பம்

**ஐம்பால்:**

- ஆண் பால்
- பெண் பால்
- பலர் பால்
- ஒன்றன் பால்
- பலவின் பால்

**ஐம்புலன்:**

- தொடுஉணர்வு
- உண்ணல்
- உயிரத்தல்
- காணல்
- கேட்டல்

**நானிலம்:**

- குறிஞ்சி
- முல்லை
- மருதம்
- நெய்தல்

**ஐந்திணைகள்:**

- குறிஞ்சி
- முல்லை
- மருதம்
- நெய்தல்
- பாலை

**அகப்பொருள் திணை விளக்கம்:**

- குறிஞ்சி – மலை மலை சார்ந்த இடம்
- முல்லை – காடு காடு சார்ந்த இடம்
- மருதம் – வயல் வயல் சார்ந்த இடம்
- நெய்தல் – கடல் கடல் சார்ந்த இடம்
- பாலை – மணல் மணல் சார்ந்த இடம்

**சிறுபொழுது ஆறு:**

- மாலை
- யாமம்
- வைகறை

- விடியல் (காலை)
- நண்பகல்
- ஏற்பாடு

**பெரும்பொழுது ஆறு:**

- கார்
- கூதிர்
- முன்பனி
- பின்பனி
- இளவேனில்
- முதுவேனில்

**பாவகை ஐந்து:**

- வெண்பா
- ஆசிரியப்பா
- கலிப்பா
- வஞ்சிப்பா
- மருட்பா

**ஐவகைத் தாயார்:**

- பாராட்டுந்தாய்
- ஊட்டுந்தாய்
- முலைத்தாய்
- கைத்தாய்
- செவிலித்தாய்

**ஐம்பெருங்குழு:**

- அரசர்
- அமைச்சர்
- புரோகிதர்
- ஒற்றர்

- தூதுவர்

**அறுசுவை:**

- கைப்பு
- இனிப்பு(தித்திப்பு)
- புளிப்பு
- உவர்ப்பு
- துவர்ப்பு
- கார்ப்பு

**நவரத்தினங்கள்:**

- கோமேதகம்
- நீலம்
- பவளம்
- புட்பராகம்
- மரகதம்
- மாணிக்கம்
- முத்து
- வைடூரியம்
- வைரம்

**மலரின் ஏழுவகை:**

- அரும்பு
- மொட்டு
- முகை
- மலர்
- அலர்
- வீ
- செம்மல்

**ஐம்புலன்கள்:**

- சுவை
- ஒளி
- ஊறு
- ஓசை
- நாற்றம்

**ஏழிசை:**

- குதல்
- துத்தம்
- கைக்கிளை
- உழை
- கிளி
- விளரி
- தாரம்

**கடையெழு வள்ளல்கள்:**

- பாரி
- ஆய் அண்டிரன்
- எழினி
- நள்ளி
- மலையன்
- பேகன்
- காரி

**உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற இடங்கள்:**

- கோலாம்பூர்
- சென்னை
- பாரிஸ்
- யாழ்ப்பாணம்

- மதுரை
- மொரீசியஸ்
- தஞ்சாவூர்

**பருவ பேதை (மங்கை) எழுவர் – (வயது):**

- பேதை (5-7)
- பெதும்பை (8-11)
- மங்கை (12-13)
- மடந்தை (14-19)
- அரிவை (20-25)
- தெரிவை (26-31
- பேரிளம் பெண் (32-40)

**தொல்காப்பியரின் பொருளதிகாரம்:**

பொருளதிகாரம் ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை,

1. அகத்திணையியல்
2. புறத்திணையியல்
3. களவியல்
4. கற்பியல்
5. பொருளியல்
6. மெய்ப்பாட்டியல்
7. உவமவியல்
8. செய்யுளியல்
9. மரபியல் என்று ஒன்பது இயல்களாகும்.

**தொல்காப்பியர் கூறும் திணைப்பாகுபாடு:**

திணைகளை அகம், புறம் என்று பிரித்த தொல்காப்பியர், அகத்திணையை ஏழு பிரிவுகளாகப் பிரிப்பார். அவை

1. குறிஞ்சி
2. முல்லை
3. மருதம்
4. நெய்தல்

5. பாலை
6. கைக்கிளை
7. பெருந்திணை

எனப் பெயரிடப்பட்டன. தொல்காப்பிய அகத்திணையியலின் முதல் நூற்பா அகத்திணையைப் பற்றிக் கூறும் போது, கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப என்கிறது. திணை என்றால் ஒழுக்கம் என்று பொருள்படும். அகமாவது ஓர் ஆணும், ஒரு பெண்ணும் தமக்குள்ளே கண்டு, காதல் கொண்டு ஒன்றுபடுதல்; சில காரணங்களால் பிரிதல்; பிரிந்து தனித்திருத்தல்; அத்தனிமைக்கு இரங்குதல்; சில நேரங்களில் பிணக்குக் கொள்ளுதல் என ஐந்துவகை அன்பு உரிப்பொருளைக் கொண்டுள்ளது. இவற்றைக் கூடல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பர். இவை குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் எனவும் குறிப்பிடப்படுகின்றன.

**முப்பொருள்கள்:**

தொல்காப்பியர் அகத்திணையியலைக் கூறும்போது, அவற்றிற்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றை விளக்கியுரைக்கின்றார்.

**முதற்பொருள்:**

முதற்பொருள் என்பது உலகம் தோன்றிய காலம் முதல் இருக்கும் நிலமும் பொழுதும் ஆகும்.

முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே என்று தொல்காப்பிய நூற்பா கூறும். நிலத்தைப் பற்றிக் கூறும்போது நிலத்தோடு தொடர்புடைய தெய்வங்களையும் இணைத்துக் கூறுகின்றார்.

**மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்**

**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**

**வருணன் மேய பெருமணல் உலகமும்**

**முல்லை, குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**

**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே(அகத்.5)**

என்றுரைக்கின்றார், தொல்காப்பியர். முல்லை நிலத்தை 'மாயோன் மேய காடுறை உலகம்' என்றார். காடும், காட்டைச் சார்ந்த இடமும் என்று கூறி, அக்காட்டிற்கு உரிய தெய்வமாகத் திருமாலை மாயோன் என்ற பெயரில் குறிப்பிடுகின்றார். குறிஞ்சி நிலத்தை மலையும், மலையைச் சார்ந்த இடமும் என்று கூறி, அம்மலைக்கு உரிய தெய்வமாக முருகனைக் கூறுகிறார். 'வேந்தன் மேய தீம்புனல் உலகம்' எனக் கூறுவது வயலும் வயலைச் சார்ந்த இடமுமாகிய மருத நிலத்தையே ஆகும். இந்திரனுக்கு வேந்தன் என்று பெயரிடப் பட்டுள்ளது.

இந்திரனே வயலும் வயலைச் சார்ந்த இடத்திற்குக் கடவுளாகும். 'வருணன் மேய பெருமணல் உலகமும்' என்று கூறுவது மணல் மிகுந்திருக்கக் கூடிய கடலும், கடல் சார்ந்த இடமும் ஆகும். இந்த நிலத்திற்குக் கடவுளாக வருணன் உரைக்கப்படுகிறான். பாலைத் திணை என்பது பாலைவனப் பகுதியாகும். இதற்கான தெய்வத்தைத் தொல்காப்பியர் கூறவில்லை. தமிழ்நாட்டில் பாலைநிலம் இல்லாதது ஒரு காரணமாக இருக்கலாம். பாலை என்ற நிலம் எவ்வாறு உருவாகிறது என்பதைக் காலத்தால் சற்றுப் பிற்பட்ட சிலப்பதிகாரம் தான் சொல்கிறது. முல்லை, குறிஞ்சி ஆகிய நிலங்கள் நீண்ட காலம் மழை பொழியாமல் காய்ந்து போய் இருப்பின் அது பாலை நிலமாக மாறும் என்பதை

**முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
**நல்லியல்பு இழந்து நடுங்கு துயர்உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்**
**(காடுகாண் காதை, 64-66)**

என்று கூறுகிறது. இப்பாலை நிலத்திற்குக் கடவுள் கொற்றவை எனத், தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய இளம்பூரணர் கூறுகிறார். நிலங்களுக்கு இடமும், கடவுளும் கூறிய தொல்காப்பியர் அந்நிலங்களுக்குரிய காதல் ஒழுக்கங்களுக்கு ஏற்ற வண்ணம் பெரும் பொழுது, சிறுபொழுதுகளைக் கூறுகிறார். பெரும்பொழுது என்றால் ஓர் ஆண்டை இரண்டிரண்டு மாதங்களாக - ஆறு பிரிவுகளாகப் பிரித்து அமைத்துக் கொள்வதாகும்.

**இவை**

1. கார்காலம்
2. கூதிர்காலம்
3. முன்பனிக் காலம்
4. பின்பனிக் காலம்
5. இளவேனிற் காலம்
6. முதுவேனிற் காலம்

என ஆறுவகைப்படும். சிறுபொழுது என்பது ஒரு நாளை ஆறு பிரிவுகளாகப் பிரித்துக் கணக்கிடப்படும் காலமாகும். இது

1. வைகறை
2. விடியல்
3. நண்பகல்
4. எற்பாடு (பிற்பகல்)
5. மாலை
6. யாமம் (நள்ளிரவு)

எனப் பிரிக்கப்படும். (எற்பாடு - எற்பாடாவது பகற்பொழுதின் பிற்கூறு - இளம்பூரணர் உரை, தொல்.பொருள். 10)

**கருப்பொருள்;**

மேலே குறித்த நிலம் முதலிய இடத்தாலும் காலம் முதலியவற்றாலும் தோற்றம் கொள்ளும் பொருள்களைக் கருப்பொருள் என்று குறிப்பிடுவர். அவை தேவர் என்றும், மக்கள் என்றும், விலங்கு என்றும் பலவாறு பகுக்கப்படும். அங்கு வாழும் மக்கள் உண்ணுகின்ற உணவு, செய்கின்ற தொழில் இவையும் கருப்பொருளாகும். ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வங்கள், உணவு வகைகள், மரங்கள், பறவைகள், செய்தொழில்கள், யாழ் போன்ற இசைக் கருவிகள் எல்லாம் கருப்பொருள் என்பதில் அடங்கும்.

**உரிப்பொருள்:**

மக்களுக்கு உரிய பொருள் உரிப்பொருள் எனப்படும். இதனை ஒழுக்கம் என்பர். இது அக வாழ்க்கைக்கும் புறவாழ்க்கைக்கும் உரியது. புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பவற்றோடு கைக்கிளை, பெருந்திணை ஆகியவை சேர்ந்து ஏழும் அகத்திணைக்குரிய உரிப்பொருள்களாகக் கொள்ளப்படும்.

- வெட்சி
- வஞ்சி
- உழிஞை
- தும்பை
- வாகை
- காஞ்சி
- பாடாண்

ஆகிய ஏழும் புறத்திணைக்கு உரியனவாகும்.

**அகத்திணைகளுக்கு உரிய புறத்திணைகள்:**

அகப்பொருளில் கூறப்பட்ட முதற்பொருளும், கருப்பொருளும் புறப்பொருள் இலக்கியத்திற்கும் பொருந்துவனவாகும். ஒவ்வொரு புறத்திணையும் ஓர் அகத்திணையோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. அவை கீழ்க்காணுமாறு தொடர்புபடும் எனத் தொல்காப்பியர் கூறுவார்.

| அகத்திணை | புறத்திணை |
|---|---|
| குறிஞ்சி | வெட்சி |
| முல்லை | வஞ்சி |
| மருதம் | உழிஞை |

| | |
|---|---|
| நெய்தல் | தும்பை |
| பாலை | வாகை |
| கைக்கிளை | பாடாண் |

**அகத்திணையியலும் அன்பின் ஐந்திணைகளும்:**

அகத்திணை அன்பின் ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை எனப்படும். அன்பின் ஐந்திணைகளாகிய முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றைக் காணலாம்.

**குறிஞ்சித் திணை:**

**முதற்பொருள்:**

**நிலம்** - மலையும் மலையைச் சார்ந்த இடமும்

**பொழுது** - அ) பெரும்பொழுது – கூதிர்காலமும், முன்பனிக்காலமும், ஆ) சிறு பொழுது - யாமம்

**கருப்பொருள்கள்:**

- தெய்வம் - சேயோன்
- உணவு - ஐவன நெல் (மலை நெல்), தினை, மூங்கிலரிசி, கிழங்கு
- விலங்கு - புலி, யானை, கரடி, பன்றி
- மரம் - அகில், ஆரம், தேக்கு, வேங்கை
- பறவை - கிளி, மயில்
- பறை - முருகியம், தொண்டகப் பறை
- தொழில் - தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல், தினை விதைத்தல், வேட்டையாடுதல்
- யாழ் - குறிஞ்சி யாழ்
- பண் - குறிஞ்சிப் பண்
- ஊர் - சிறுகுடி, குறிச்சி
- நீர் - அருவி நீர், சுனை நீர்
- மலர் - காந்தள், வேங்கை, குறிஞ்சி

**உரிப்பொருள்:**

புணர்தலும் புணர்தல் நிமித்தமும் (நிமித்தம் = காரணம்)

**முல்லைத் திணை:**

**முதற்பொருள்:**

**நிலம்** - காடும் காட்டைச் சார்ந்த இடமும்

**பொழுது** - அ) பெரும்பொழுது: கார்காலம், ஆ) சிறுபொழுது: மாலை

**கருப்பொருள்கள்:**

- தெய்வம் - மாயோன்
- உணவு - வரகு, சாமை
- விலங்கு - மான், முயல்ம்
- மரம் - தோன்றி, காயா, பிடவம், குருந்தம்
- பறவை - காட்டுக்கோழி, சேவல்
- பறை - ஏறுகோட் பறை
- தொழில் - ஆநிரை மேய்த்தல், ஏறு தழுவல்
- யாழ் - முல்லை யாழ்
- பண் - குறிஞ்சிப் பண்
- ஊர் - பாடி, சேரி
- நீர் - குறுஞ்சுனை, கான்யாறு
- மலர் - முல்லை, குல்லை, தோன்றி, பிடவம்

**உரிப்பொருள்:**

இருத்தலும் இருத்தல் நிமித்தமும்.

**மருதத் திணை:**

**முதற்பொருள்:**

**நிலம்** - வயலும் வயல்சார்ந்த இடமும்

**பொழுது** - அ) பெரும் பொழுது - ஆண்டு முழுதும், ஆ) சிறுபொழுது - வைகறை, விடியல்

**கருப்பொருள்கள்:**

- தெய்வம் - இந்திரன் (வேந்தன்)
- உணவு - செந்நெல், கரும்பு
- விலங்கு - எருமை, நீர்நாய்

- மரம் - வஞ்சி, காஞ்சி, மருதம்
- பறவை - தாரா, நீர்க்கோழி
- பறை - மணமுழவு, நெல்லரி கிணை
- தொழில் - விதைத்தல், விளைத்தல்
- யாழ் - மருத யாழ்
- பண் - மருதப் பண்
- ஊர் - ஊர்கள்
- நீர் - ஆற்றுநீர், பொய்கை நீர்
- மலர் - தாமரை, கழுநீர்

**உரிப்பொருள்:**

ஊடலும் ஊடல் நிமித்தமும்.

**நெய்தல் திணை:**

முதற்பொருள்

**நிலம்** - கடலும் கடல் சார்ந்த இடமும்

**பொழுது** - அ) பெரும் பொழுது - ஆண்டு முழுதும், ஆ) சிறுபொழுது - எற்பாடு

**கருப்பொருள்கள்:**

- தெய்வம் - வருணன்
- உணவு - மீன், உப்பு
- விலங்கு - உமண்பகடு (உப்பு வாணிகனின் மூட்டை சுமக்கும் எருது), சுறா
- மரம் - புன்னை, ஞாழல், கண்டல்
- பறவை - அன்றில், அன்னம்
- பறை - மீன்கோட் பறை
- தொழில் - மீன் பிடித்தல், மீன் உலர்த்தல், உப்பு விளைவித்தல், நாவாய் ஓட்டல்
- யாழ் - நெய்தல் யாழ்
- பண் - நெய்தல் பண்
- ஊர் - பட்டினம், பாக்கம்

- நீர் - உவர்க்குழி (ஊற்றுநீர்), மணற்கிணறு
- மலர் - நெய்தல், கைதை (தாழை)

**உரிப்பொருள்:**

இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

பாலைத் திணை

முதற்பொருள்

**நிலம் -** பாலை நிலம்

**பொழுது -** அ) பெரும்பொழுது - வேனிற் காலம், பின்பனிக் காலம், ஆ) சிறுபொழுது - நண்பகல்

**கருப்பொருள்கள்:**

- தெய்வம் — கொற்றவை
- உணவு - வழிப்போக்கரிடம் திருடிய உணவு
- விலங்கு - யானை, புலி, செந்நாய்
- மரம் - இருப்பை, உழிஞை
- பறவை - கழுகு, பருந்து, புறா
- பறை - சூறை கோட் பறை
- தொழில் - வழிப்பறி, சூறையாடல்
- யாழ் - பாலை யாழ்
- பண் - பாலைப் பண்
- ஊர் - பறந்தலை
- நீர் - கூவல் (கிணறு, குழி)
- மலர் - மரா, குரா

**உரிப்பொருள்:**

பிரிதலும் பிரிதல் நிமித்தமும்.

இவ்வாறு வரும் திணைக் கருப்பொருள்கள் தத்தம் திணையில் இடம்பெறுவதுடன் பிற திணையிலும் இடம் பெறுவதுண்டு. அதற்குத் திணை மயக்கம் என்று பெயர்.

## அகர வரிசையின்படிச் சொற்களைச் சீர் செய்தல்

- முதலில் உயிர் எழுத்தை அ, ஆ, ..........என வரிசைப்படுத்த வேண்டும்.
- பிறகு முதல் எழுத்தை ஒட்டி மெய்யெழுத்து இருந்தால், அதனை வரிசைப்படுத்த வேண்டும்.
- எந்த காரணத்தைக் கொண்டும் க, ங, ச, ஞ என வரிசைப்டுத்தக் கூடாது.
- உயிர்மெய் எழுத்துக்களை க, கா, கி, கீ என வரிசைப்படுத்த வேண்டும்.
- முதல் எழுத்து ஒன்றாக இருந்து இரண்டாம் எழுத்து மெய்யெழுத்து இருந்தால், அதனை முதன்மையாகக் கொண்டு வரிசைப்படுத்த வேண்டும்.

  **(எ.கா)** பட்டம், படம், பறவை, ...........
- பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும், உயிரோடு இணைந்த க், ங், ச், ஞ், த், ந், ப், ம், ய், வ் ஆகிய பத்து எழுத்துக்களும் மொழி முதல் எழுத்துக்களாக வரும்.
- உயிர் எழுத்து பன்னிரண்டு மற்றும் மெய்யெழுத்து பதினெட்டு மொத்தம் முப்பது எழுத்துக்கள் முதலெழுத்துக்கள் எனப்படும்.
- உயிர்மெய் எழுத்து தோன்றுவதற்கு இந்த எழுத்து முதன்மையாக அமைகிறது.
- உயிர் எழுத்தில் தொடங்கும் வரிசையில் இருந்தால், அதனை அ, ஆ, இ, ....... என்ற வரிசையில் வரிசைப்படுத்த வேண்டும்.

  **(எ.கா)** இனியவர், ஈண்டு, உயர்வு, ஊடல்
- ஒரே வர்க்கத்தில் அமைந்த எழுத்துக்களைக் கொண்டு அகர வரிசைப்படுத்த ச, சா, சி, சீ, ........சௌ என்ற வரிசையில் வரிசைப்படுத்த வேண்டும்.

  (எ.கா)

  1. சங்கு, சுக்கு, சேறு, சொல், சோறு, சௌக்கியம்
  2. தந்தம், தாமரை, திரும்பு, தீர்வு, துயரம், தூரல்
- ‘க’ முதல் ‘ன’ வரை எழுத்துக்களைக் கொண்டு கீழ்க்கண்டவாறு அகர வரிசைப்படுத்த வேண்டும்.
- குறிப்பு, தன்மை, முன்னிலை, வெளிப்பாடு
- ஆண்டு, நாள், மாதம், வாரம்
- சில நேரங்களில் அகர வரிசையில் முதல் எழுத்து ஒன்றாக இருக்கும். நாம் இரண்டாம், மூன்றாம் எழுத்தைக் கொண்டு அகர வரிசைப்படுத்த வேண்டும்.

  (எ.கா)

1. சக்கரம், சங்கமம், சங்கு, சாலை
2. இங்கே, இந்தியா, இலை, இவ்வூர்
3. எங்கே, எருது, எழில், எழுத்து
4. பங்கு, பஞ்சு, பண்பு, பன்னீர்

- அதிகமாக இரண்டாம் எழுத்தைக் கொண்டு அகர வரிசைப்படுத்துதல் அமையலாம்

**(எ.கா)** கக்குதல், கக்குவான், கஞ்சி, கற்கண்டு

**கீழே கொடுக்கப்பட்டுள்ள தமிழ் எழுத்துக்களை வரிசைப்படுத்தி நினைவில் கொள்ள வேண்டும்:**

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஃ<br>13 | அ<br>1 | ஆ<br>2 | இ<br>3 | ஈ<br>4 | உ<br>5 | ஊ<br>6 | எ<br>7 | ஏ<br>8 | ஐ<br>9 | ஒ<br>10 | ஓ<br>11 | ஔ<br>12 |
| க்<br>14 | க<br>15 | கா<br>16 | கி<br>17 | கீ<br>18 | கு<br>19 | கூ<br>20 | கெ<br>21 | கே<br>22 | கை<br>23 | கொ<br>24 | கோ<br>25 | கௌ<br>26 |
| ங்<br>27 | ங<br>28 | ஙா<br>29 | ஙி<br>30 | ஙீ<br>31 | ஙு<br>32 | ஙூ<br>33 | ஙெ<br>34 | ஙே<br>35 | ஙை<br>36 | ஙொ<br>37 | ஙோ<br>38 | ஙௌ<br>39 |
| ச்<br>40 | ச<br>41 | சா<br>42 | சி<br>43 | சீ<br>44 | சு<br>45 | சூ<br>46 | செ<br>47 | சே<br>48 | சை<br>49 | சொ<br>50 | சோ<br>51 | சௌ<br>52 |
| ஞ்<br>53 | ஞ<br>54 | ஞா<br>55 | ஞி<br>56 | ஞீ<br>57 | ஞு<br>58 | ஞூ<br>59 | ஞெ<br>60 | ஞே<br>61 | ஞை<br>62 | ஞொ<br>63 | ஞோ<br>64 | ஞௌ<br>65 |
| ட்<br>66 | ட<br>67 | டா<br>68 | டி<br>69 | டீ<br>70 | டு<br>71 | டூ<br>72 | டெ<br>73 | டே<br>74 | டை<br>75 | டொ<br>76 | டோ<br>77 | டௌ<br>78 |
| ண்<br>79 | ண<br>80 | ணா<br>81 | ணி<br>82 | ணீ<br>83 | ணு<br>84 | ணூ<br>85 | ணெ<br>86 | ணே<br>87 | ணை<br>88 | ணொ<br>89 | ணோ<br>90 | ணௌ<br>91 |
| த்<br>92 | த<br>93 | தா<br>94 | தி<br>95 | தீ<br>96 | து<br>97 | தூ<br>98 | தெ<br>99 | தே<br>100 | தை<br>101 | தொ<br>102 | தோ<br>103 | தௌ<br>104 |
| ந்<br>105 | ந<br>106 | நா<br>107 | நி<br>108 | நீ<br>109 | நு<br>110 | நூ<br>111 | நெ<br>112 | நே<br>113 | நை<br>114 | நொ<br>115 | நோ<br>116 | நௌ<br>117 |
| ப்<br>118 | ப<br>119 | பா<br>120 | பி<br>121 | பீ<br>122 | பு<br>123 | பூ<br>124 | பெ<br>125 | பே<br>126 | பை<br>127 | பொ<br>128 | போ<br>129 | பௌ<br>130 |
| ம்<br>131 | ம<br>132 | மா<br>133 | மி<br>134 | மீ<br>135 | மு<br>136 | மூ<br>137 | மெ<br>138 | மே<br>139 | மை<br>140 | மொ<br>141 | மோ<br>142 | மௌ<br>143 |
| ய்<br>144 | ய<br>145 | யா<br>146 | யி<br>147 | யீ<br>148 | யு<br>149 | யூ<br>150 | யெ<br>151 | யே<br>152 | யை<br>153 | யொ<br>154 | யோ<br>155 | யௌ<br>156 |
| ர்<br>157 | ர<br>158 | ரா<br>159 | ரி<br>160 | ரீ<br>161 | ரு<br>162 | ரூ<br>163 | ரெ<br>164 | ரே<br>165 | ரை<br>166 | ரொ<br>167 | ரோ<br>168 | ரௌ<br>169 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ல்<br>170 | ல<br>171 | லா<br>172 | லி<br>173 | லீ<br>174 | லு<br>175 | லூ<br>176 | லெ<br>177 | லே<br>178 | லை<br>179 | லொ<br>180 | லோ<br>181 | லௌ<br>182 |
| வ்<br>183 | வ<br>184 | வா<br>185 | வி<br>186 | வீ<br>187 | வு<br>188 | வூ<br>189 | வெ<br>190 | வே<br>191 | வை<br>192 | வொ<br>193 | வோ<br>194 | வௌ<br>195 |
| ழ்<br>196 | ழ<br>197 | ழா<br>198 | ழி<br>199 | ழீ<br>200 | ழு<br>201 | ழூ<br>202 | ழெ<br>203 | ழே<br>204 | ழை<br>205 | ழொ<br>206 | ழோ<br>207 | ழௌ<br>208 |
| ள்<br>209 | ள<br>210 | ளா<br>211 | ளி<br>212 | ளீ<br>213 | ளு<br>214 | ளூ<br>215 | ளெ<br>216 | ளே<br>217 | ளை<br>218 | ளொ<br>219 | ளோ<br>220 | ளௌ<br>221 |
| ற்<br>222 | ற<br>223 | றா<br>224 | றி<br>225 | றீ<br>226 | று<br>227 | றூ<br>228 | றெ<br>229 | றே<br>230 | றை<br>231 | றொ<br>232 | றோ<br>233 | றௌ<br>234 |
| ன்<br>235 | ன<br>236 | னா<br>237 | னி<br>238 | னீ<br>239 | னு<br>240 | னூ<br>241 | னெ<br>242 | னே<br>243 | னை<br>244 | னொ<br>245 | னோ<br>246 | னௌ<br>247 |

**எ.கா.**

1. **பாரதி, பாரம், பா, பாலை, பானை, பாறை**
   விடை: பா, பாரதி, பாரம், பாலை, பாறை, பானை.
2. **பசு, பகடு, நெய், நேர்மை, நொச்சி, நோய், பகடு, பசு**
   விடை: நெய், நேர்மை, நொச்சி, நோய், பகடு, பசு
3. **நாகம், நிச்சயம், நறுமணம், நுரை, நூல், நீக்கம்**
   விடை: நறுமணம், நாகம், நிச்சயம், நீக்கல், நுரை, நூல்
4. **தருப்பை, தந்தை, தமிழ், தகழ், தந்தை, தமிழ், தடாகம்**
   விடை: தகடு, தகழி, தாடகம், தந்தை, தமிழ், கருப்பை
5. **சூரியன், சினேகம், சீதை, காட்சி, சந்திரன், சுமை**
   விடை: சந்திரன், சாட்சி, சினேகம், சீதை, சுமை, சூரியன்
6. **ஏகலைவர், ஐந்து, ஒருமை, ஏகாதசி, ஐக்கியம்**
   விடை: ஏகலைவர், ஏகாதசி, ஐக்கியம், ஐந்து, ஒருமை
7. **அந்தணர், ஆக்கம், உணவு, ஆடவர், இசை, இலக்குமி, உணவு**
   விடை: அந்தணர், ஆக்கம், ஆடவர், இசை, இலக்குமி, உணவு
8. **உயிர், உபாயம், உதயம், உடுக்கை, உண்மை, உபகாரம்**
   விடை: உடுக்கை, உண்மை, உதயம், உபகாரம், உபாயம், உயிர்
9. **குலம், கூகை, காந்தம், கேடகம், கோழி, வெளிறு**
   விடை: குலம், கூகை, காந்தம், கேடகம், கோழி, வெளிறு
10. **கணிதம், கூம்பு, கட்டழகு, கரடி, கலவை, காடு**
    விடை: கட்டழகு, கணிதம், கம்பு, கரடி, கலவை, காடு

## ஒரு பொருட்பன்மொழி

- ஒரே பொருளைத் தரும் இரு சொற்கள் தொடர்ந்து வருவது ஒரு பொருட்பன்மொழி எனப்படும்.
- ஓங்கி உயர்ந்து நின்றான் என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம் இதில் ஓங்கி, உயர்ந்து என்ற இரண்டு சொல்லும் உயரமான என்ற ஒரே பொருளைத் தருகிறது. வார்த்தை அழகினைச் சேர்க்க சேர்ந்து வருகிறது இதையே ஒருபொருள்பன்மொழி என்கிறோம்.
- திருமால் குன்றம் உயர்ந்தோங்கி நிற்கிறது.
- அந்த ஏழைக் குழந்தையின் கண்கள் குழித் தாழ்ந்து காணப்படுகிறது.
- இந்த இரண்டு தொடர்களிலும் ஒருபொருளைத்தரும் இரு சொற்கள் உள்ளன. முதல் தொடரில் உயர்ந்தோங்கி என்னும் வாக்கியம் உயர்ந்த என்ற பொருளினையும், இரண்டாவது தொடரில் குழிதாழ்ந்த என்ற சொல் தாழ்ந்த என்ற பொருளினையும் தருகிறது. உயர்ந்து என்றாலும் ஓங்கி என்றாலும் ஒரே பொருள்தான். அதேபோல் குழி என்றாலும் தாழ்ந்த என்றாலும் ஒரே பொருள்தான்.
- இவ்வாறு ஒரே பொருளை தரும் இருசொற்கள் சேர்ந்து வருவது ஒருபொருட்பன்மொழி ஆகும்.
- மீமிசைஞாயிறு.
- நடுமையம் போன்றவை இன்னும் சில உதாரணங்கள் ஆகும்.

**இலக்கியங்களில் ஒரு பொருட் பன்மொழிகள்:**

**ஒருபொருட் பன்மொழிகள்: ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொற்கள் ஒருபொருட் பன்மொழியாகும்.**

இதை, "ஒரு பொருள் இரு சொல்! என்று (இளம்பூரணர் உரை, ப.391) தொல்காப்பியரும், ஒரு பொருள் பல பெயர்"? என்று (காண்டிகையுரை.. ப.109) பவணந்தி முனிவரும் குறிக்கின்றனர்.

ஒருபொருள் இருசொற் பிரிவில வரையார் (தொல்.சொல்.453), ஒரு பொருண்மேற் கிடந்த இருசொற் பிரிவின்றி நின்றன என தொல்காப்பியம் சுட்டுகிறது. இந்த நூற்பாவிற்கு இளம்பூரணர் கீழ்க்காணும் வகையில் எடுத்துக்காட்டு தந்து விளக்கியுரைக்கிறார்.

**எ.காட்டு: வையைக் கிறைவன் வயங்குதார் மாணகலறந்**

**தையலா யின்றுநீ நல்குதி நல்குதி நல்காயேற்**

**கூடலார் கோவொடு நீயும் படுதியே**

**நாடறியக் கவ்வை யொருங்கு**

வையக்கு இறை எனப்பட்டானும், கோ எனப்பட்டானும் அவனாதலான், அவ்விருசொல்லும் ஒருபொருட்கண்மேலே நின்றன; பிறபொருட்குப் பிரியா, அங்ஙனம் நிற்பன அமையும் என்பதாம்.

அதேபோல்,

**ஒருபொருட் பல்பெயர் பிரிவில் வரையார் (நன்னூல்.397)**

ஒரு பொருளின்மேல் பல பெயர்களைக் கூறும் அப்பொருளினின்றும் பிரிதல் இல்லாதவைகளைப் புலவர்கள் நீக்காமல் ஏற்றுக் கொள்வர்.

**எ.காட்டு:**

**ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான்;**

**பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி. வந்தான்**

இவை பிரிவு இல்லாமல்..பல பெயர்களும் ஒரு பொருளின்மேற் சென்று கேட்பவர்க்குச் சொல்லுவோன் குறித்த சத்தன், பெருவழுதி என்ற பொருளை விளக்கின.

**பகை இயல்பாயிலி படைக்கை மறவன்**

**எழுத்து உணர்வில்லோன் இலக்கண நிறைகடல்.** எனவரின், பகை இயல்பாகவே இல்லாதவனைப் படைக்கை. மறவன் என்றலும், எழுத்துணர்வு இல்லாதவனை இலக்கண நிறைகடல்- என்று கூறுதலும் இயலாமையின் பிரிந்து வழு ஆகும்.

**ஒருபொருள் பன்மொழி சிறப்பி னின்வழா (நன்னூல்.396)**

ஒரு பொருளைக் குறித்துவரும் பலசொற்கள் அவ்வாறு வருவதற்கு ஒரு குறிப்பிடத்தக்க காரணம் இல்லையானும் சிறந்து நிற்பதால் அவை வழு என்று நீக்கப்படமாட்டா என நன்னூல் குறிப்பிடுகின்றது. ஒருபொருளைக் குறிப்பதற்கு ஒரு சொல் பயன்படுத்துதல் போதுமானதெனினும் செவிக்கு இன்பம் தந்து நிற்கும் வகையில் ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்களைப் பயன்படுத்துவதும் உண்டு. இது வழுவன்று என நன்னூல் குறிப்பிடுகின்றது. **எ.காட்டு: மீமிசை ஞாயிறு, புனிற்றிளங்கன்று, நாகிளங் கமுகு, உயர்ந்தோங்கு பெருவரை, குழிந்தாழ்ந்த கண்.**

கீழ்க்கணக்கு நூல்களில் பல்வேறு ஒருபொருட் பன்மொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. அவற்றுள் யானையைக் குறிக்கும் வகையில் அதிகளவில் ஒருபொருட் பன்மொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- **யானை** (நாலடி.3, 21, நான்மணி.56, இன்.நாற்.23, இனி.நாற்.1, 5, கள.நாற்.2, 11, 13, 14, 15, 21,-22, 27, 30, 31, 37, 38, 40 திணை.ஐஐம்.1, 6, ஐந்.எழு.35, திணைமாலை.2, 11, 14 திரிக.19, பழமொ.17, இன்னி.29, ஏலா.12, 41, 49)

- **களிறு** (நான்மணி.12, கார்.நாற்.13, 24, கள.நாற்.1, 10, ஐந்.ஐம்.32, திணை.ஐம்.6, ஐந்.எழு.12, திணைமாலை. 3, திரிக.46, சிறுப.60, கைந்.16, ஏலா.11)
- **வேழம்** (இன்.நாற்.31, ஐந்.ஐம்.16, திணைமாலை.25, கைந்.6, 9, 16)
- **குஞ்சரம்** (இன்.நாற்.14, கார்.நாற்.12, கள.நாற்.16, 25, ஐந்.எழு.29)
- **பிடி** (ஐந்.ஐம்.32, 36, ஐந்.எழு.35, கைந்.18)
- **மருப்பு** (கள.நாற்.19, கைந்.9)
- **வாரணம்** (நான்மணி.25)
- **சிற்றாளி** (திணைமாலை.42)
- **நாகம்** (திணைமாலை.13, 117)
- இவ்வாறாக பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் யானையைக் குறிப்பதற்காக மட்டும்ஒன்பது ஒருபொருட் பன்மொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் பெண் யானையைக் குறிக்கும் வகையில் பிடி என்ற சொல்லும், யானை குட்டியைக் குறிக்கும் விதமாக,'சிற்றாளி' என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. கீழ்க்கணக்கு நூல்களில், யானை என்ற ஒருபொருட்பன்மொழி அதிகபட்சமாக 31 பாடல்களிலும், 'களிறு' என்ற ஒருபொருட்பன்மொழி 13 பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன.
- யானை என்ற ஒருபொருட் பன்மொழிக்கு அடுத்த எண்ணிக்கையில் குதிரையைக் குறிக்கும் வகையில் எட்டு ஒருபொருட் பன்மொழிகள் கீழ்க்கணக்கு நூல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- **பாய்மா** (நான்மணி.18)
- **பரிமா** (நான்மணி.56, ஐந்.ஐம்.50)
- **மா** (நான்மணி.73, கள.நற்.16, 33, 36)
- **புரவி** (இன்.நாற்.10, 16, 39, திணைமாலை.53)
- **கலிமா** (இன்.நாற்.29; கார்.நாற்.22, திரிக.46)
- **கடுமான்** (கார்.நாற்.10, ஐந்.எழு.57)
- **விரியுளை மான்** (திணைமாலை.113)
- **குதிரை** (ஏலா.49)
- மேற்கண்ட எட்டு சொற்கள் குதிரையைக் குறிக்கும் வகையில் ஒருபொருட் பன்மொழிகளாக உள்ளன. இதில் திணைமாலை நூற்றைம்பதில், 'விரியுளை'

என்ற அடை பயின்று வந்து, பரந்த பிடரி மயிரினையுடைய (மான்) குதிரை' எனப் பொருள்படும் வகையில் கையாளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

- மூன்றாவதாக அரசர் மற்றும் மானைக் குறிக்கும் வகையில் ஏழு ஒருபொருட் பன்மொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன;
- **மன்னவர்** (நான்மணி.66,.62)
- **மன்னர்** (நான்மணி.87, இன்.நாற்.14, 23, 39,இனி.நாற்.9), 16, 34,கார்.நாற்.20, திணைமாலை.4, ஏலா.59)
- **வேந்தன்**: (இன்.நாற்.3, இனி.நாற்.33, 36, கார்.நாற்.20, 37, திரி.50, 98, 100)
- **வேந்து** (இன்.நாற்.14, 23, சிறுப.4)
- **வேந்தர்** (கார்.நாற்.13, கள.நாற்.16)
- **அரசன்** (இன்.நாற்.6, கள.நாற்.35, திரிக.13)
- **அரசர்** (கள.நாற்.3/, ஆசார.80, 83, ஏலா.57)
- மேற்கண்ட ஏழு சொற்கள் அரசனைக் குறிக்கும் வகையில் கீழ்க்கணக்கு நூல்களில் ஒருபொருட் பன்மொழியாக கையாளப்பட்டுள்ளன.
- **பிணைமா** (ஐந்.ஐம்.38)
- **கலைமா** (ஐந். ஐம்.38)
- **மான்** (ஐந். ஐம்.13, திணை.ஐம்.7, 19, கைந்.59)
- **மடமான்** (ஐந்.எழு.1, கைந்.1)
- **மா** (கைந்.24)
- **மரையான்** (ஐஐந்.எழு.10)
- **மரை** (திணைமாலை.1) ஆகிய ஏழு சொற்கள் மானைக் குறிக்கும் ஒருபொருட் பன்மொழிகளாக உள்ளன. இதில் ஆண் மானைக் குறிப்பதற்கு, 'கலைமா' எனவும் பெண் மானைக் குறிப்பதற்கு, 'பிணைமா' எனவும், ஆண் மானைக் குறிப்பதற்கு ஒருபொருட் பன்மொழிகளும், இளமையான கவரி மானைக் குறிப்பதற்கு, 'மடமா' என அடையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- **உரவுநீர்** (நாலடி.175)
- **பௌவம்** (கார்.நாற்.17, கள.நார்.3)
- **கடல்** (கார்.நாற்.33, 37, கள.நாற்.9, 18, ஐந்.ஐம்.43, 44, 50)
- **முந்நீர்** (ஐந்.எழு.56,, திணைமாலை.15, 17, 104, கைந்.51)
- **விரிநீர்** (குறள்.13)

- **ஓதநீர்** (திணைமாலை.37) ஆகிய ஆறு சொற்களும் கடலைக் குறிக்க வந்துள்ள ஒருபொருட் பன்மொழிகளாகும்.
- சிங்கத்தைக் குறிக்க,
- **அரிமா**(நாலடி.141, கள.நாற்.35)
- **சீயம்** (ஆசார.64)
- ரத்தத்தைக் குறிக்க,
- **உதிரம்** (ஐந்.ஐம்.20, 31)
- **குருதி** (கள.நாற்.1, 293; 5, 11, 12, 4/4, 17, 18, 20, 27, 30, திணை.ஐம்.8)
- நாரையைக் குறிக்க,
- **குருகு** (ஐந்.ஐம்.24, கைந்.59, 60)
- **கொக்கு** (கைந்.46, 55) ஆகிய ஒருபொருட் பன்மொழிகள் கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெற்றுள்ளன.
- **கதிர்** (கார்.நாற்.2)
- **ஞாயிறு** (நாலடி.7, கள.நாற்.1, திணைமாலை.94, பழமொ.33) ஆகிய இரண்டும் சூரியனைக் குறிப்பதற்காக வந்த ஒருபொருட் பன்மொழிகளாக உள்ளன.
- **மயில்** (கார்.நாற்.12, 16, கள.நாற்.29, திணை.லஐம்.49, ஐந்.எழு.19, திணைமாலை.3, 107, கைந்.36)
- **மஞ்ஞை** (கார்.நாற்.4, ஐந்.ஐம்.2, ஐந்.எழு.16, கைந்.11) என இரண்டு சொற்கள் மயிலைக் குறிக்கும் ஒருபொருட் பன்மொழிகளாகும்.
- அதே போல மீனைக் குறிக்க,
- **மீன்** (கைந்.55, 56)
- **கயல்** (கைந்.38, ஏலா.14)
- **நான்மறையோன்** (ஆசார.61)
- **அந்தணர்** (நான்மணி.35, 87, இன்.நாற்.2, இனி.நாற்.6, 24, ஆசார.92)
- **பார்ப்பான்** (நான்மணி.55, இன்.நாற்.3, 22, திரிக.42, 70, ஆசார.15, 31, 47, 64, 90, பழமொ.36, சிறுப.8, ஏலா.54)ஆகிய மூன்று சொற்கள் அந்தணரைக் குறிக்கும் ஒருபொருட் பன்மொழிகளாகும்.
- **வானம்** (கார்.நாற்.3, 6, 23, 30,கள.நாற்.25, ஐந்.ஐம்.5, 8)

- **விசும்பு** (இனி.நாற்.10, கள.நாற்.4, 6, 26)இந்த இரண்டு சொற்களானது வானத்தைக்- குறிப்பதற்காக... வந்துள்ள ஒருபொருட் பன்மொழிகளாக உள்ளன.
- **புலி** (இன்.நார்.31, களநாற்.16,பழமொ.71)
- **வேங்கை** (கள.நாற்.16, ஐந்.ஐம்.16 31," கைந்.16)
- **குயவரி** (திணைமாலை.25) என மூன்று சொற்களும் புலியைக் குறிப்பதற்காக வந்துள்ள ஒருபொருட்பன்மொழிகளாகும்.
- **செற்றம்** (இன்.நாற்.38)
- **சினம்** (இனி.நாற்.377 கர். நாற்:38) கள.நாற்.15, 21, 30, 40)
- **கோபம்** (கார்நாற்5) ஆகிய மூன்று சொற்கள் கோபத்தைக் குறிக்கும் ஒருபொருட் பன்மொழிகளாக உள்ளன.
- **குழவி** (நான்மணி.25, இன்.நாற்.36, இனி.நாற்.13, 15)
- **மழலை** (இனி.நாற்.15, கைந்.41)
- **பாலகன்** (ஐந்.ஐம்.25) என மூன்று சொற்கள் குழந்தையைக் குறிப்பதற்காக இடம்பெற்றுள்ள ஒருபொருட்பன்மொழிகளாகும்.
- **மந்தி** (திணை.லம்.2, ஐந்.எழு.4, திணைமாலை.10, கைந்.3, 6)
- **கடுவன்** (திணை.லம்.10, ஐந்.எழு.11, கைந்.7)
- **முசு** (ஐந்.எழு.9, கைந்.4) என மூன்று சொற்களும் கீழ்க்கணக்கு நூல்களில் குரங்கைக் குறிப்பதற்காக வந்துள்ள ஒருபொருட் பன்மொழிகளாக உள்ளன.
- **எழிலி** (நாலடி.192, இன்.நாற்.36, கார்.நாற்.33, திணை.ஐம்.26)
- **கார்** (கார்.நாற்.31, 32, ஐந்.ஐம்.1, 3, 4)
- **மஞ்சி** (ஐந். ஐம்.17)
- **மேகம்** (சிறுப.4) ஆகிய நான்கு சொற்கள் மேகத்தைக் குறிப்பிடுவதற்காக-- வந்துள்ள ஒருபொருட் பன்மொழிகளாக உள்ளன.

## இருபொருள் குறிக்கும் சொற்கள்

**இரு பொருள் தரக்கூடிய சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை அமையுங்கள்: (நூல், மாலை, ஆறு, படி)**

- நூல் - ஆடை தைக்க உதவுவது நூல் / மூதுரை அற நூல்
- மாலை - இரத்தின மாலை விலைமதிப்பற்றது / சூரியன் மாலை நேரத்தில் மறைகிறது
- ஆறு - ராமு ஆறு மாதம் கழித்த பின் ஊருக்கு வந்தான் / தாமிரபரணி ஆறு வற்றாத ஆறு
- படி - தேர்வில் வெற்றியடைய நன்றாக படி / மாணவர் வாழ்வில் முன்னேற ஆசிரியர் ஒரு ஏணிப்படி போன்று செயல்படுகிறார்கள்

**இரு பொருள் எழுதுக:**

| |
|---|
| **பலகை** – மரப்பலகை<br>**பல + கை** -பல கைகள் |
| **அந்தமான்** - அந்தமான் தீவு<br>**அந்த + மான்** - அந்த மான் அழகாக உள்ளது |
| **தாமரை** -தாமரை மலர்<br>**தா + மரை** - தாவுகின்ற மான் |
| **பழம்பால்** - பழமையான பால்<br>**பழம் + பால்** -பழமும், பாலும் உடலுக்கு நல்லது |
| **மருந்துக்கடை** - நாட்டு மருந்துக்கடை<br>**மருந்து + கடை**-மருந்து கடைகளில் கிடைக்கும் |
| **சின்னக்கொடி** - சின்னம் வரையப்பட்ட கொடி<br>**சின்ன கொடி** - சிறிய கொடி |
| **தோப்புக்கள்** - தோப்பிலிருந்து இறக்கிவரப்பட்ட கள்<br>**தோப்புகள்** - பல மரங்கள் சேர்ந்தது தோப்புகள் |
| **கடைப்பிடி** - கொள்கையைக் கடைபிடிப்பது<br>**கடைபிடி** - வாணிகம் தொடங்கக் கடை பிடிப்பது |
| **நடுக்கல்** - அடையாளமாக நடுவது நடுக்கல்<br>**நடுகல்** – நினைவுச்சின்னம் |
| **கைம்மாறு** - உதவி செய்தல்<br>**கைமாறு** - கையில் உள்ள மாறு (விளக்குமாறு) |
| **பொய்ச்சொல்** - நீ சொன்னது பொய்ச்சொல்<br>**பொய் சொல்** - பொய் சொல்வது தவறு |

## சொல் ஒன்று, பொருள் இரண்டு – கண்டுபிடி:

| | |
|---|---|
| வயலில் மேய்வது | ஆடு |
| அழகாய் நடனம் | ஆடு |
| மாதத்தின் மறுபெயர் | திங்கள் |
| நிலவைக் குறிப்பது | திங்கள் |
| வகுப்பில் பாடம் | படி |
| மாடி செல்ல உதவும் | படி |
| வளைந்து ஓடுவது | ஆறு |
| 6 - இந்த எண்ணின் பெயர் | ஆறு |
| பூக்களைத் தொடுத்தால் | மாலை |
| அந்தி சாயும் பொழுது | மாலை |
| சோற்றின் மறுபெயர் | அன்னம் |
| அழகிய பறவை | அன்னம் |

## மற்ற இரு பொருள் தரும் சொற்கள்:

| | |
|---|---|
| அம்பி | படகு, தோணி |
| அடவி | காடு, மிகுதி |
| அல் | இருள், வறுமை |
| ஆ | பசு, இரக்கம் |
| ஆக்கம் | செல்வம், காற்று |
| ஆறு | எண் (6), நதி |
| ஆழி | மோதிரம், கடல் |
| இன்னல் | துன்பம், கவலை |
| இந்து | சமயம், மதம் |
| இகல் | பகை, வலிமை |
| இடர் | துன்பம், நோய் |
| இருள் | பகை, துன்பம் |
| உழுவை | புலி, மீன்வகை |
| ஏர் | அழகு, கலப்பை |
| நூல் | ஆடைநூல், பாடநூல் |
| ஈனும் | தரும், உண்டாக்கும் |
| தெறு | பகை, தண்டித்தல் |
| மெய் | உடல், உண்மை |
| நாமம் | பெயர், அச்சம் |
| நுதல் | நெற்றி, புருவம் |

| | |
|---|---|
| நமன் | எமன், நம்மவன் |
| நடலை | துன்பம், அசைவு |
| நகை | நகைத்தல், அணிகலன் |
| குஞ்சி | தலைமுடி, விருது |
| குன்று | மலை, மேடு |
| கான் | காடு, மணம் |
| கழல் | பாதம், காலணி |
| கமலம் | தாமரை, நீர் |
| கிரி | மலை, பன்றி |
| கிளை | சுற்றம், மரக்கிளை |
| கவிகை | குடை, ஈகை |
| கரம் | கை, வரி |
| புயல் | மேகம், நீர் |
| புனல் | நீர், ஆறு |
| புத்தி | அறிவு, மனம் |
| புள் | பறவை, வண்டு |
| பணை | மூங்கில், பெருமை |
| படி | நூலைப்படி, வாயிற்படி |
| பிணி | நோய், துன்பம் |
| தலை | சிறப்பு, உச்சி |

| | |
|---|---|
| துடி | பறை, உதடு |
| திரை | அலை, சுருள் |
| திங்கள் | நிலவு, மாதம் |
| மாதிரம் | மலை, ஆகாயம் |
| மனை | வீடு, மனைவி |
| மரை | மான், தவளை |
| மாலை | காலம், பூமாலை |
| மதலை | துணை, குழந்தை |
| கோடு | தந்தம், கொம்பு |
| கேழல் | பன்றி, நிறம் |
| கேசரி | சிங்கம், இனிப்பு |

| | |
|---|---|
| மேனி | உடல், நிறம் |
| மேதி | எருமை, நெற்களம் |
| சேய் | குழந்தை, மூங்கில் |
| சந்தம் | அழகு, நிறம், ஓசை நயம் |
| சிரம் | தலை, உச்சி |
| சுவடி | நூல், ஓலைப்புத்தகம் |
| வனம் | காடு, சோலை |
| ஞாலம் | உலகம், விந்தை |
| விரை | மணம், தேன் |

## பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு & பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல் & பேச்சு வழக்கு தொடரில் பிழைத்திருத்தம்

- பேச்சு வழக்கு என்பது **வாய்வழி பேசுவது** ஆகும்.
- எழுத்து வழக்கு என்பது **சிந்தித்து எழுதுவது** ஆகும்.

| பேச்சுமொழி | எழுத்துமொழி |
|---|---|
| 1. பேச்சுமொழியில் சொற்கள் குறுகி ஒலிக்கும். எ.கா. நல்லாச் சாப்டான் | எழுத்து மொழியல் சொற்கள் முழுமையாக எழுதப்படும். எ.கா. நன்றாகச்சாப்பிட்டான் |
| 2. உணர்ச்சிக் கூறுகள் அதிகம் | உணர்ச்சிக் கூறுகள் குறைவு |
| 3. உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வுக்கு இடம் உண்டு | உடல் மொழி, குரல் ஏற்றத்தாழ்வுக்கு இடம் இல்லை |
| 4. திருத்தமான மொழி நடையில் அமைகிறது | திருத்தமான மொழி நடையில் அமைவதில்லை |

**எடுத்துகாட்டுகள்:**

| **வட்டார வழக்கு** | **எழுத்து வழக்கு** |
|---|---|
| அனயம் | நிறைவானது |
| எச்சௌந்தவன் | ஏழை எளியவன் |
| கீழத்தார் | புன்செய்யின் ஒரு பகுதி |
| கொராமுனுசு | கிராம நிர்வாக அலுவலர் |
| கொடவாங்கள் | கொடுக்கல் வாங்கள் |
| திருணை | திண்ணை |
| தெகஞ்சத | முடிந்ததை |
| பிஞ்சை | புன்செய் |
| ரோசி | உரசுதல் |
| வாந்தக்கமாக | இணக்கமாக |
| வெதப்பெட்டி | விதைப்பெட்டி |
| வெள்ளங்காட்டி | விடியற்காலை |
| வேண்டாற | வேண்டாத |
| திருகை | மாவு அரைக்கும் கம் |
| குறுக்கம் | சிறிய நிலபரப்பு |
| கடகம் | ஓலைப்பெட்டி |

| பேச்சுவழக்கு | எழுத்துவழக்கு |
|---|---|
| அகண்ட | அகன்ற |
| அடமழை | அடை மழை |
| அதுகள் | அவைகள் |
| அனியாயம் | அநியாயம் |
| அமக்களம் | அமர்க்களம் |
| அவங்க | அவர்கள் |
| அங்கை | அங்கே |
| அடமானம் | அடைமானம் |
| அண்டைக்கு | அன்றைக்கு |
| அருகாமை | அண்மை |
| அருவாள் | அரிவாள் |
| ஆக்கள் | ஆட்கள் |
| அவங்க | அவர்கள் |
| ஆராச்சி | அராய்ச்சி |
| ஆத்தங்கரை | ஆற்றங்கரை |
| ஆம்பிளைப்பிள்ளை | ஆண்பிள்ளை |
| இறச்சி | இறைச்சி |
| இளனி | இளநீர் |
| உசரம் | உயரம் |
| உசிர் | உயிர் |
| உடமை | உடைமை |
| உயற்சி | உயர்ச்சி |
| உருத்து | உரித்து |
| உஸ்தியோகம் | உத்தியோகம் |
| ஊத்துதல் | ஊற்றுதல் |
| எண்ணை | எண்ணெய் |
| எலிமிச்சம்பழம் | எலுமிச்சம்பழம் |
| எழவு | இழவு |
| ஒண்டு | ஒன்று |
| ஒம்பது | ஒன்பது |

| | |
|---|---|
| கடக்கரை | கடற்கரை |
| கடசி | கடைசி |
| கட்டிடம் | கட்டடம் |
| கண்டு | கன்று |
| கண்பூளை | கன்பீளை |
| கண்முழித்தல் | கண்விழித்தல் |
| கதைத்தல் | பேசுதல் |
| கத்திரிக்கோல் | கத்தரிக்கோல் |
| கம்பிளி | கம்பளி |
| காக்கா | காக்கை |
| காச்சல் | காய்ச்சல் |
| காத்தாடி | காற்றாடி |
| கிடாய் | கடா |
| கிணத்தடி | கிணற்றடி |
| கிராணம் | கிரகணம் |
| குடு | கொடு |
| குடுத்தல் | கொடுத்தல் |
| குடும்பி | குடுமி |
| குத்துயிர் | குற்றுயிர் |
| கும்புடுதல் | கும்பிடுதல் |
| குலைத்தது | குரைத்தது |
| கேழ்வி | கேள்வி |
| கைமாத்து | கைமாற்று |
| கோடாலி | கோடரி |
| கோர்வை | கோவை |
| சதை | தசை |
| சமயல் | சமையல் |
| சவுக்காரம் | சவர்க்காரம் |
| சவுக்காலை | சவக்காலை |
| சாம்பராணி | சாம்பிராணி |
| சிகப்பு | சிவப்பு |
| சிலவு | செலவு |
| சுகயீனம் | சுகவீனம் |
| சுடுதண்ணி | சுடுநீர் |

| | |
|---|---|
| சுழட்டு | சுழற்று |
| சேதி | செய்தி |
| சொற்பனம் | சொப்பனம் |
| சோத்துப்பானை | சோற்றுப்பா னை |
| தண்ணி | தண்ணீர் |
| தலகணி | தலையணை |
| தவக்கை | தவளை |
| தாவாரம் | தாழ்வாரம் |
| திருவுதல் | திருகுதல் |
| தீத்தம் | தீர்த்தம் |
| தீவாளி | தீபாவளி |
| துடை | தொடை |
| துறப்பு | திறப்பு |
| துளிர் | தளிர் |
| துவங்கு | தொடங்கு |
| தேத்தண்ணி | தேநீர் |
| தேள்வை | தேவை |
| தொந்திரவு | தொந்தரவு |
| தொப்புள் | கொப்பூழ் |
| தொவக்கம் | துவக்கம் |
| நாகரீகம் | நாகரிகம் |
| நாத்தம் | நாற்றம் |
| நிறம்ப | நிரம்ப |
| நேத்தி | நேர்த்தி |
| நேத்து | நேற்று |
| நொங்கு | நுங்கு |
| பசும்பால் | பசுப்பால் |
| பட்டிணி | பட்டினி |
| பத்தை | பற்றை |
| பனமரம் | பனைமரம் |
| பழசு | பழையது |
| பாவக்காய் | பாவற்காய் |

| | |
|---|---|
| பிலாமரம் | பலாமரம் |
| புடவை | புடைவை |
| புட்டு | பிட்டு |
| புட்டு | பிட்டு |
| புத்து | புற்று |
| புழுக்கை | பிழுக்கை |
| பெரிசு | பெரிது |
| பேதமை | பேதைமை |
| மதவு | மதகு |
| மம்பட்டி | மண்வெட்டி |
| முத்துதல் | முற்றுதல் |
| முன்னூறு | முந்நூறு |
| முளகாய் | மிளகாய் |
| மூஞ்சி | முகம் |
| மெள்ள | மெல்ல |
| ராகம் | இராகம் |
| ரெட்டை | இரட்டை |
| ரெண்டு | இரண்டு |
| ரேகை | இரேகை |
| ரொம்ப | நிரம்ப |
| வந்தாங்க | வந்தார்கள் |
| வவுத்துவலி | வயிற்றுவலி |
| வாசல் | வாயில் |
| வாய்வு | வாயு |
| விசிரி | விசிறி |
| விதரம் | விரதம் |
| வெக்கம் | வெட்கம் |
| வெண்ணை | வெண்ணெய் |
| வெத்திலை | வெற்றிலை |
| வெய்யில் | வெயில் |
| வேர்வை | வியர்வை |
| வைக்கல் | வைக்கோல் |
| வயித்துவலி | வயிற்றுவலி |

| பேச்சுமொழி | எழுத்துமொழி |
|---|---|
| உலக வழக்கு என்பர். | இலக்கிய வழக்கு என்பர். |
| சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும். | சொற்கள் முழுமையாக எழுதப்படும். |
| உணர்ச்சிக் கூறுகள் அதிகம். | உணர்ச்சிக் கூறுகள் குறைவு. |
| உடல் மொழியும் குரல் ஏற்றத்தாழ்வும் இணைவதால் அஃது எளிமையாக கருத்தை உணர்த்துகிறது. | உடல் மொழி, குரல் ஏற்றத் தாழ்வு போன்றவற்றிற்கு இடமில்லை. |

**பேச்சு வழக்கு சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல்**

**எ. கா:**

- பாச்சல் – பாத்தி
- பதனம் – கவனமாக
- நீத்துப்பாகம் – மேல்கஞ்சி
- கடிச்சு குடித்தல் – வாய்வைத்துக் குடித்தல்
- மகுளி – சோற்றுக் கஞ்சி
- வரத்துக்காரன் – புதியவன்
- சடைத்து புளித்து – சலிப்பு
- அலுக்கம் – அழுத்தம் (அணுக்கம்)
- தொலவட்டையில் – தொலைவில்
- வூடு – வீடு
- வேல – வேலை
- தண்ணீ – தண்ணீர்
- வெளக்கு – விளக்கு

**புத்தக பேச்சு மற்றும் எழுத்து வழக்குகள்:**

- அம்மா பசிக்கிது. எனக்குச் சோறு வேணும் – அம்மா! பசிக்கிறது. எனக்குச் சோறு வேண்டும்.
- சொல்லு – சொல்
- நில்லு – நில்
- வந்தியா – வந்தாயா?

- சாப்ட்டியா – சாப்பிட்டாயா?
- கோர்த்து – கோத்து
- சுவற்றில் – சுவரில்
- நாட்கள் – நாள்கள்
- மனதில் – மனத்தில்
- பதட்டம் – பதற்றம்
- சிலவு – செலவு
- அருகாமையில் – அருகில்
- பாரு – பார்
- இங்க – இங்கு
- தனியா – தனியாக
- தெரியல – தெரியவில்லை
- கதுவு – கதவு
- ரயிலு – இரயில்
- புக்கு – புத்தகம்
- நாக்காலி – நாற்காலி
- வெத்தல – வெற்றிலை
- அஞ்சு – ஐந்து
- செல்லு – செல்
- கொல்லு – கொல்
- வெல்லு – வெல்
- தள்ளு – தள்
- துள்ளு – துள்
- போனியா – போனாயா?
- பார்த்தியா – பார்த்தாயா?
- சொன்னியா – சொன்னாயா?
- கொடுத்தியா – கொடுத்தாய?

- செய்தியா – செய்தாயா?
- சாப்ட்டான் – சாப்பிட்டான்
- இந்தா – பிடித்துக்கொள்
- வாங்கியாந்த – வாங்கிவந்த
- கிளம்பு – புறப்படு
- செம்ம – செம்மை
- செய்தியா – செய்தாயா?
- புட்டு – பிட்டு
- அங்க – அங்கே
- தேத்தண்ணி – தேநீர்
- கத்திரிக்கோல் – கத்தரிக்கோல்
- படிச்சான் – படித்தான்
- ஆப்பை – அகப்பை
- கூப்டியா? – கூப்பிட்டாயா?
- இன்னா சொல்லுற? – என்ன சொல்கிறாய்
- நோம்பு – நோன்பு
- காத்தால – காலையில்
- சாந்தரம் – மாலையில்
- கழட்டு – கழற்று
- துகை – தொகை
- சிகப்பு – சிவப்பு
- பண்டகசாலை – பண்டசாலை
- புண்ணாக்கு – பிண்ணாக்கு
- ரொம்ப – நிரம்ப
- வத்தல் – வற்றல்
- வெண்ணை – வெண்ணெய்
- பசும்பால் – பசுப்பால்

- வலதுபக்கம் – வலப்பக்கம்
- பேரன் – பெயரன்
- பேத்தி – பெயர்த்தி
- வேர்வை – வியர்வை
- முயற்சித்தார் – முயன்றார்
- நஞ்சை – நன்செய்
- தின்றீர் – திருநீறு
- சீயக்காய் – சிகைக்காய்
- நாகரீகம் – நாகரிகம்
- திருவாணி – திருகாணி
- சாணி – சாணம்
- பாவக்காய் – பாகற்காய்
- உசிர் – உயிர்
- ஊரணி – ஊருணி
- கடக்கால் – கடைக்கால்

**உங்கள் வீட்டில் பயன்படுத்தும் பேச்சு வழக்குத் தொடர்களுக்கு இணையான எழுத்து வழக்குத் தொடர்களை எழுதி வருக:**

(எ.கா.) பேச்சுமொழி – அம்மா பசிக்கிது எனக்குச் சோறு வேணும்.

எழுத்துமொழி – அம்மா பசிக்கின்றது. எனக்குச் சோறு வேண்டும்.

1. **பேச்சுமொழி – வூட்டுக்கு போகனும்.**

   எழுத்துமொழி – வீட்டிற்குப் போக வேண்டும்.

2. **பேச்சுமொழி – வவுறு நிறையா சாப்புடு**

   எழுத்துமொழி – வயிறு நிறைய சாப்பிடு.

3. **பேச்சுமொழி – இன்னிக்கு காத்தால வாங்கிட்டு வந்தே**

   எழுத்துமொழி – இன்றைக்குக் காலையில் வாங்கி வந்தேன்.

4. **பேச்சுமொழி – தண்ணி கொண்டா**

   எழுத்துமொழி – தண்ணீர் கொண்டு வா.

**பேசும் போது சிலநேரங்களில் சொற்களின் இறுதியில் உகரம் சேர்ந்து ஒலிப்பது உண்டு. 'ஆ' என்னும் எழுத்து இகரமாக மாறுவது உண்டு. அவ்வாறு ஒலிக்கும் சொற்களை எழுதி அவற்றுக்கு இணையான எழுத்த வழக்குச் சொற்களையும் எழுதுக.**

(எ.கா) சொல்லு – சொல், நில்லு – நில், வந்தியா – வந்தாயா?, சாப்டியா – சாப்பிட்டாயா?

**பேச்சு வழக்கு தொடர்களிலுள்ள பிழை திருத்தம்:**

- கண்மாய் – கம்மாய்
- உறைக்கிணறு – ஊரணி

| **பேச்சு வழக்கு** | **எழுத்து வழக்கு (தமிழ் சொல்)** |
|---|---|
| தம்பீ? எங்க நிக்கிறே? | தம்பி எங்கே நிற்கிறாய்? |
| நீங்க சொன்ன எடத்துலதாண்ணே ! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது. | நீங்கள் சொன்ன இடத்தில்தான் அண்ணா ! எதிர்ப்புறத்தில் ஒரு தேநீர் கடை இருக்கிறது. |
| அங்ஙனக்குள்ளயே டீ சாப்டுட்டு, பேப்பரப் படிச்சிட்டு இரு.. நா வெரசா வந்துருவேன் | அங்கேயே தேநீர் சாப்பிட்டுவிட்டு, செய்தித்தாள் படித்துக்கொண்டிரு. நான் விரைவாக வந்து விடுகிறேன் |
| அண்ணே! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே! அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு! | அண்ணா! சண்முகத்தையும் கூட்டிக்கொண்டு வாருங்கள் அண்ணா! அவனைப் பார்த்து அதிக நாட்களாகிவிட்டன. |
| அவம்பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனேக் கூட்டிக்கிட்டு வர்றேன். | அவன் பாட்டியுடன் வெளியூர் சென்றிருக்கிறான். உங்கள் ஊருக்கே அவனைக் கூட்டிக்கொண்டு வருகிறேன். |
| ரொம்பச் சின்ன வயசுல பார்த்ததுண்ணே ! அப்ப அவனுக்கு மூணு வயசு இருக்கும்! | நிறைய நாளுக்கு முன்னால் சின்ன வயதில் பார்த்தது அண்ணா. அப்போது அவனுக்கு மூன்று வயது இருக்கும் |
| இப்ப ஒசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்கூட | இப்போது உயரமாக வளர்ந்துவிட்டான். உனக்கு அடையாளமே தெரியாது. ஊருக்கு என்னுடன் வருவான். |

| | |
|---|---|
| வருவாம் பாரேன்! சரி, போனை வையி. நாங கௌம்பிடேன்… | பார்த்துக்கொள். சரி. தொலைபேசியை வைத்துவிடு. நான் புறப்படுகிறேன். |
| சரிங்கண்ணே ! | சரி அண்ணா ! |
| இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சிக்கோ. | இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது.நீயும் புரிந்துகொள். |
| நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும். | நிலத்தை உழுதால்தான் வயிறு நிறையும். |
| அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான. | அன்று அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியதுதான். |
| வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு. | வீட்டுக்கு அருகில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தையை அப்பா எங்கு அழைத்துக்கொண்டு போனார். |
| புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது | பிள்ளைக்கு உடல்நிலை சரியில்லை. மூன்று நாட்களாக துன்பப்படுகிறது. |
| ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல் | இரவு சித்தப்பாவை காவலுக்குப் போகச் சொல். |
| நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது. | நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது. |
| எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது. | எங்கள் ஊரில் நூலகம் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது. |
| ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார். | ரங்கன் வெண்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார். |
| மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன. | வானம் பார்த்த பூமியில் பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன. |
| ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது. | ஐப்பசி அடை மழையில் ஊருணி நிறைந்தது. |
| இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும். | இன்றைக்கு சாயுங்காலம் கபடி போட்டி நடைபெறும். |
| சாயந்தரம் நேரத்தோடு வராட்டி அம்மா திட்டும். | மாலையில் விரைவாக வீட்டிற்கு வரவில்லை எனில் அம்மா திட்டுவார்கள். |

| | |
|---|---|
| சித்த நாழி உக்காரு, இந்தா வந்திடறேன். | சற்று நேரம் அமருங்கள் இதோ வந்து விடுகிறேன். |
| அம்மாசிச் சோறு ஆசைப்பட்டா கெடைக்காது. | அமாவாசை சோறு ஆசைப்பட்டால் கிடைக்காது. |
| வெளையாட்டிலேயே கண்ணா இருக்காதே. | விளையாட்டில் கண்ணாக இருக்காதே |
| அம்மாப் பொண்ணுக்குக் கண்ணாலம். அவரவர் வூட்டுலெ சாப்பாடு. | அம்மாள் பெண்ணிற்குத் திருமணம்; அவரவர் வீட்டிலே சாப்பாடு |
| தலைக்கு சீக்கா தேச்சு முழுவனா ஒடம்புக்கு குளிர்ச்சி | தலைக்கு சீகைக்காய் தேய்த்துக் குளித்தால் உடம்பிற்கு குளிர்ச்சி. |
| நெல்லுச்சோறு வவுத்துக்கு நோவு தராது | அரிசி உணவு வயிற்றுக்கு நோய் தராது. |
| பொண்ணு கண்ணாலத்துக்கு சீர் செனத்தி சேத்தி வச்சிருக்கியா? | பெண்ணின் திருமணத்திற்கு சீர்வரிசை பொருள்கள் சேர்த்து வைத்திருக்கிறாயா? |
| விடிகால எந்திருச்சி வெள்ளாம பாக்க போனான். | விடியற்காலையில் எழுந்து விவசாயம் பார்க்கப் போனான். |
| மானம் பாத்த பூமியில மழ பெஞ்சு பல வருசமாச்சு. | வானம் பார்த்த பூமியில் மழை பொழிந்து பல வருடங்களாயிற்று |
| காத்தாடி வுட்ட மாஞ்சா கவுறு கழுத்த அறுத்ததுப் புடிச்சு | பட்டம் விட்ட மாஞ்சா கயிறு கழுத்தை அறுத்தது. |

**சிற்சில வட்டார மரபுகளை அறிந்து கொள்க:**

- தீமிதியல் திருவிழாவில் தீக்குழியைப் **பூக்குழியென்றும்** தீமிதியலைப் பூமிதியல் என்றும் சொல்லுதல் மரபு.
- நீர்வளம் மிகுந்த பாங்கரில் முப்பூ விளையும் **வெள்ளாமையைப் பூ** வென்பது மரபு.
- மிளகுநீரைச் **(சாற்றமுது)** சாத்தமுது என்பது வைணவர் மரபு.
- திருமணம் முதலிய மங்கல நிகழ்ச்சிகளுக்கு கீற்று வேய்வதனைக் **கொட்டகை** யென்பது செட்டி நாட்டு மரபு.
- ஆசிரியரை **ஐயர்** என்றே அழைப்பது வேலூர் ஆம்பூர் வட்டத்தார் மரபு.
- அமிழ்தத்தை **உப்புச்சாறு** என்பது சீரங்கம் கோவில் மரபு.

## சொல்லும் பொருளும் அறிதல்

### ஆறாம் வகுப்பு

1. நிருமித்த – உருவாக்கிய
2. விளைவு – விளைச்சல்
3. சமூகம் – மக்கள் குழு
4. அசதி – சோர்வு
5. சுடர் – ஒளி
6. ஆழிப்பெருக்கு – கடல்கோள்
7. மேதினி – உலகம்
8. ஊழி – நீண்டதொரு காலப்பகுதி
9. உள்ளப்பூட்டு – அறிய விரும்பாமை
10. மெய் – உண்மை
11. வழி – நெறி
12. அகற்றும் – விலக்கும்
13. மேன்மை – உயர்வு
14. அறம் – நற்செயல்
15. திங்கள் – நிலவு
16. கொங்கு – மகரந்தம்
17. அலர் – மலர்தல்
18. திகிரி – ஆணைச்சக்கரம்
19. பொற்கோட்டு – பொன்மயமானசிகரத்தில்
20. மேரு – இமயமலை
21. நாமநீர் – அச்சம் தரும் கடல்
22. அளி – கருணை
23. காணி – நில அளவைக் குறிக்கும் சொல்
24. மாடங்கள் – மாளிகையின் அடுக்குகள்
25. சித்தம் – உள்ளம்.
26. இயன்றவரை – முடிந்தவரை
27. ஒருமித்து – ஒன்றுபட்டு
28. ஔடதம் – மருந்து

29.மாசற – குறைஇல்லாமல்

30.சீர்தூக்கின் – ஒப்பிட்டு ஆராய்ந்து

31.தேசம் – நாடு

32.தூற்றும் படி – இகழும் படி

33.மூத்தோர் – பெரியோர்

34.மேதைகள் – அறிஞர்கள்

35.மாற்றார் – மற்றவர்

36.நெறி – வழி

37.வற்றாமல் – அழியாமல்

38.நன்றியறிதல் – பிறர் செய்த உதவியை மறவாமை

39.ஒப்புரவு – பிறருக்கு உதவி செய்தல்

40.நட்டல் – நட்பு கொள்ளுதல்

41.நந்தவனம் – பூஞ்சோலை

42.பார் – உலகம்

43.பண் – இசை

44.இழைத்து – செய்து

45.மல்லெடுத்த – வலிமைபெற்ற

46.சமர் – போர்

47.நல்கும் – தரும்

48.கழனி – வயல்

49.மறம் – வீரம்

50.எக்களிப்பு – பெருமகிழ்ச்சி

51.கலம் – கப்பல்

52.ஆழி – கடல்

53.கதிர்ச்சுடர் – கதிரவனின் ஒளி

54.மின்னல்வரி – மின்னல் கோடுகள்

55.அரிச்சுவடி – அகரவரிசை எழுத்துகள்

56.மெய்- உண்மை

57.தேசம் – நாடு

58.தண்டருள் – குளிர்ந்த கருணை

59.கூர் – மிகுதி

60.செம்மையருக்கு – சான்றோருக்கு

61.ஏவல் – தா◌ெண்டு

62.பராபரமே – மேலான பொருள்

63.பணி – தொண்டு

64.எய்தும் – கிடைக்கும்

65.எல்லாரும் – எல்லா மக்களும்

66.அல்லாமல் – அதைத்தவிர

67.சுயம் – தனித்தன்மை

68.உள்ளீடுகள் – உள்ளே இருப்பவை

69.அஞ்சினார் – பயந்தனர்

70.கருணை – இரக்கம்

71.வீழும் – விழும்

72.ஆகாது – முடியாது

73.பார் – உலகம்

74.நீள்நிலம் – பரந்த உலகம்

75.முற்றும் – முழுவதும்

76.மாரி – மழை

77.கும்பி – வயிறு

78.பூதலம் – பூமி

**ஏழாம் வகுப்பு**

1. ஊக்கிவிடும் – ஊக்கப்படுத்தும்
2. குறி – குறிக்கோள்
3. விரதம் – நோன்பு
4. பொழிகிற – தருகின்ற
5. ஒப்புமை – இணை
6. முகில் – மேகம்
7. அற்புதம் – விந்தை
8. உபகாரி – வள்ளல்
9. ஈன்று – தந்து

10.களித்திட – மகிழ்ந்திட

11.கொம்பு – கிளை

12.நச்சரவம் – விடமுள்ள பாம்பு

13.அதிமதுரம் – மிகுந்த சுவை

14.விடுதி – தங்கும் இடம்

15.தீபம் – ஒளி

16.பரவசம் – மகிழ்ச்சிப் பெருக்கு

17.துஷ்டி கேட்டல் – துக்கம் விசாரித்தல்

18.சிற்றில் – சிறு வீடு

19.யாண்டு – எங்கே

20.கல் அளை – கற்குகை

21.ஈன்ற வயிறு – பெற்றெடுத்த வயிறு

22.சூரன் – வீரன்

23.வாரணம் – யானை

24.பொக்கிஷம் – செல்வம்

25.பரி – குதிரை

26.சாஸ்தி – மிகுதி

27.சிங்காரம் – அழகு

28.விஸ்தாரம் – பெரும்பரப்பு

29.கமுகு – பாக்கு

30.தேடல் – தூண்

31.சென்னி – உச்சி

32.ஞெகிழி – தீச்சுடர்

33.உரவுநீர் – பெருநீர்பரப்பு

34.அழுவம் – கடல்

35.கரையும் – அழைக்கும்

36.வேயா மாடம் – வைக்கோல் போன்றவற்றால் வேயப்படாது, திண்மையாகச் சாந்து பூசப்பட்ட மாடம்

37.உரு – அழகு

38.வங்கம் – கப்பல்

39.போழ – பிளக்க

40.எல் – பகல்

41.வங்கூழ் – காற்று

42.நீகான் – நாவாய் ஓட்டுபவன்

43.கோடு உயர் – கடை உயர்ந்த

44.மாட ஒள்ளெரி – கலங்கரை விளக்கம்

45.எத்தனிக்கும் – முயலும்

46.பரிதி – கதிரவன்

47.வெற்பு – மலை

48.அன்னதோர் – அப்படி ஒரு

49.கழனி – வயல்

50.கார்முகில் – மழைமேகம்

51.நிகர – சமம்

52.துயின்றிருந்தோர் – உறங்கியிருந்தார்

53.வைப்புழி – பொருள் சேமித்து வைக்கும் இடம்

54.கோட்பா – ஒருவரால் கொள்ளப்படாது

55.வாய்த்து ஈயில் – வாய்க்கும் படி கொடுத்தலும்

56.விச்சை – கல்வி

57.பிரும்மாக்கள் – படைப்பாளர்கள்

58.வனப்பு – அழகு

59.நெடி – நாற்றம்

60.பூரிப்பு – மகிழ்ச்சி

61.மழலை – குழந்தை

62.மேனி – உடல்

63.வண்கீரை – வளமான கீரை

64.பரி – குதிரை

65.முட்டப்போய் – முழுதாகச் சென்று

66.கால் – வாய்க்கால், குதிரையின் கால்

67.மறித்தல் – தடுத்தல் (மண்ணை வெட்டித் தடுத்துப் பாத்தி கட்டுதல்), எதிரிகளைத் தடுத்துத் தாக்குதல்

68.மாரி – மழை

69.வறந்திருந்த – வறண்டிருந்த

70.புகவா – உணவாக

71.மடமகள் – இளமகள்

72.நல்கினாள் – கொடுத்தாள்

73.முன்றில் – வீட்டின் முன் இடம் (திண்ணை) இங்கு வீட்டைக் குறிக்கிறது

74.குழி – நில அளவைப்பெயர்

75.சீலை – புடவை

76.சாண் – நீட்டல் அளவைப்பெயர்

77.மடை – வயலுக்கு நீர் வரும் வழி

78.மணி – முற்றிய நெல்

79.கழலுதல் – உதிர்தல்

80.சும்மாடு – பாரம் சுமப்பவர்கள் தலையில் வைத்துக் கொள்ளும் துணிச்சுருள்

81.வையம் – உலகம்

82.புகவா – உணவாக

83.வெய்ய – வெப்பக்கதிர் வீசும்

84.இடர் ஆழி – துன்பக்கடல்

85.சொல் மாலை – பாமாலை

86.தகளி – அகல்விளக்கு

87.ஞானம் – அறிவு

88.நாரணன – திருமால்

89.ஆர்வம் – விருப்பம்

90.கூடர் – ஒளி

91.வித்து – விதை

92.களை – வேண்டாத செடி

93.ஈன – பெற

94.பைங்கூழ் – பசுமையான பயிர்

95.நிலன் – நிலம்

96.வன்சொல் – கடுஞ்சொல்

97.சாந்தம் – அமைதி

98.தாரணி – உலகம்

99.மகத்துவம் – சிறப்பு

100. தத்துவம் – உண்மை
101. பேதங்கள் – வேறுபாடுகள்
102. இரக்கம் – கருணை

## எட்டாம் வகுப்பு

1. நிரந்தரம் – காலம் முழுமையும்
2. வண்மொழி – வளமிக்கமொழி
3. வைப்பு – நிலப்பகுதி
4. இசை – புகழ்
5. சூழ்கலி – சூழ்ந்துள்ள அறியாமை இருள்
6. தொல்லை – பழமை, துன்பம்
7. விசும்பு – வானம்
8. மரபு – வழக்கம்
9. மயக்கம் – கலவை
10. திரிதல் – மாறுபடுதல்
11. இருதிணை – உயர்திணை, அஃறிணை
12. செய்யுள் – பாட்டு
13. வழாஅமை – தவறாமை
14. தழாஅல் – தழுவுதல் (பயன்படுத்துதல்)
15. ஐம்பால் – ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்
16. தூண்டுதல் – ஆர்வம்கொள்ளுதல்
17. பயிலுதல் – படித்தல்
18. ஈரம் – இரக்கம்
19. நாணம் – வெட்கம்
20. முழவு – இசைக்கருவி
21. செஞ்சொல் – திருந்தியசொல்
22. நன்செய் – நிறைந்தை நீர்வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம்
23. புன்செய் – குறைந்தை நீரொல் பயிர்கள் விளையும் நிலம்
24. வள்ளைப்பாட்டு – நெல்குத்தும் போது பாடப்படும் பாடல்
25. முகில் – மேகம்
26. வின்னம் – சேதம்

27.கெடிகலங்கி – மிக வருந்தி

28.வாகு – சரியாக

29.சம்பிரமுடன் – முறையாக

30.காலன் – எமன்

31.சேகரம் – கூட்டம்

32.மெத்த – மிகவும்

33.காங்கேய நாடு – கொங்குமண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்று

34.தீர்வன – நீங்குபவை

35.திறத்தன – தன்மையுடையன

36.உவசமம் – அடங்கி இருத்தல்

37.கூற்றவா – பிரிவுகளாக

38.நிழல்இகழும் – ஒளிபொருந்திய

39.பூணாய் – அணிகலன்களை அணிந்தவளே

40.பேர்தற்கு – அகற்றுவதற்கு

41.பிணி – துன்பம்

42.திரியோகமருந்து – மூன்று யோகமருந்து

43.ஓர்தல் – நல்லறிவு

44.தெளிவு – நற்காட்சி

45.பிறவார் – பிறக்கமாட்டார்

46.நித்தம் நித்தம் -நாள்தோறும்

47.வையம் – உலகம்

48.மட்டு – அளவு

49.பேணுவயல் -பாதுகாத்தல்

50.சுண்ட -நன்கு

51.திட்டுமுட்டு -தடுமாற்றம்

52.கலன் – அணிகலன்

53.முற்றை – ஒளிர

54.வேண்டாவாம் – தேவையில்லை

55.தடம் – அடையாளம்

56.அகம்பாவம் – செருக்கு

57.புத்தி – அறிவு

58.பாதை – அறிவு

59.உள்ளம் – மனம்

60.லாபம் – பலன்

61.எண்ணி – நினை

62.பண் – இசை

63.கனகச்சுனை – பொன் வண்ண நீர்நிலை

64.மதவேழங்கள் – மதயானைகள்

65.முரலும் – முழங்கும்

66.பழவெய் – முதிர்ந்த மூங்கில்

67.அலந்தவர் – வறியவர்

68.செறாஅமை – வெறுக்காமை

69.கிளை – உறவினர்

70.பேதையார் – அறிவற்றவர்

71.நோன்றல் – பொறுத்தல்

72.மறாஅமை – மறவாமை

73.போற்றார் – பகைவர்

74.பொறை – பொறுமை

75.வாரி – வருவாய்

76.எஞ்சாமை – குறைவின்றி

77.முட்டாது – தட்டுப்பாடின்றி

78.ஒட்டாது – வாட்டம்இன்ற

79.வைகுக – தங்குக

80.ஓதை – ஓசை

81.வெரீஇ – அஞ்சி

82.யாணர் – புதுவருவா

83.மறலி – காலன்

84.வழிவர் – நழுவி ஓடுவர்

85.கரி – யானை

86.பிலம் – மலைக்குகை

87.தூறு – புதர்
88.மண்டுதல் – நெருங்குதல்
89.அருவர் – தமிழர்
90.இறைஞ்சினர் – வணங்கினர்
91.உடன்றன – சினந்து எழுந்தன
92.முழை – மலைக்குகை
93.சீவன் – உயிர்
94.வையம் – உலகம்
95.சத்தியம் – உண்மை
96.சபதம் – சூளுரை
97.ஆனந்த தரிசனம் – மகிழ்வான காட்சி
98.மோகித்து – விரும்பு
99.நமன் – எமன்
100. நாணாமே – கூசாமல்
101. சித்தம் – உள்ளம்
102. உய்ம்மின் – ஈடேறுங்கள்
103. நம்பர் – அடியார்
104. ஈயில் – வழங்கினால்
105. படமாடக்கோயில் – படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயில்
106. பகராய் – தருவாய்
107. பராபரம் – மேலான பொருள்
108. ஆனந்த வெள்ளம் – இன்பப்பெருக்கு
109. அறுத்தவருக்கு – நீக்கியவர்க்கு
110. நிறை – மேன்மை
111. அழுக்காறு – பொறாமை
112. பொறை – பொறுமை
113. மதம் – கொள்கை
114. பொச்சாப்பு – சோர்வு
115. இகல் – பகை
116. மையல் – விருப்பம்

117. மன்னும் – நிலைபெற்ற
118. ஓர்ப்பு – ஆராய்ந்து தெளிதல்

**ஒன்பதாம் வகுப்பு**

1. குறம், பள்ளு – சிற்றிலக்கிய வகைகள்
2. மூன்றினம் – துறை, தாழிசை, விருத்தம்
3. சிந்தாமணி – சீவகசிந்தாமணி, சிதறாமணி
4. சிந்து – ஒருவகை இசைப்பாடல்
5. முக்குணம் – மூன்று குணங்கள் (சமத்துவம் – அமைதி, மேன்மை. இராசசம் – போர்,
6. தீவிரமான செயல். தாமசம் – சோம்பல், தாழ்மை)
7. பத்துக்குணம் – செறிவு, சமநிலை முதிய பத்துக்குண அணிகள்
8. வண்ணங்கள் ஐந்து – வெள்ளை, சிவப்பு, கருப்பு, மஞ்சள், பச்சை
9. வண்ணம் நூறு – குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு.
10. ஊனரசம் – குறையுடைய சுவை
11. நவரசம் – வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை
12. வனப்பு – அழகு, அம்மை, தொன்மை, தோல், விருந்து, இயைபு, பலன், இழைபு
13. குந்த – உட்கார
14. கந்தம் – மணம்
15. மிசை – மேல்
16. விசனம் – கவலை
17. எழில் – அழகு
18. துயர் – துன்பம்
19. மா – வண்டு
20. மது – தேன்
21. வாவி – பொய்கை
22. வளர் முதல் – நெற்பயிர்
23. தரளம் – முத்து
24. பணிலம் – சங்கு

25.வரம்பு – வரப்பு

26.கழை – கரும்பு

27.கா – சோலை

28.குழை – சிறு கிளை

29.அரும்பு – மலர் மொட்டு

30.மாடு – பக்கம்

31.நெருங்கு வளை – நெருங்குகின்ற சங்குகள்

32.கோடு – குளக்கரை

33.ஆடும் – நீராடும்

34.மேதி – எருமை

35.துதைந்து எழும் – கலக்கி எழும்

36.கன்னி வாளை – இளமையான வாளைமீன்.

37.சூடு – நெல் அரிக்கட்டு

38.சுரிவளை – சங்கு

39.வேரி – தேன்

40.பகடு – எருமைக்கடா

41.பாண்டில் – வட்டம்

42.சிமயம் – மலையுச்சி

43.நாளிகேரம் – தென்னை

44.நரந்தம் – நாரத்தை

45.கோளி – அரசமரம்

46.சாலம் – ஆச்சா மரம்

47.தமாலம் – பச்சிலை மரங்கள்

48.இரும்போந்து – பருத்த பனைமரம் ;

49.சந்து – சந்தன மரம்

50.நாகம் – நாகமரம்

51.காஞ்சி – ஆற்றுப்பூவரசு

52.யாக்கை – உடம்பு

53.புணரியோர் – தந்தவர்

54.புன்புலம் – புல்லிய நிலம்

55.தாட்கு – முயற்சி

56.சமயக் கணக்கர் – சமயத் தத்துவவாதிகள்

57.பாடைமாக்கள் – பல மொழிபேசும் மக்கள், குழீஇஒன்றுகூடி

58.தோம் – குற்றம்

59.கோட்டி – மன்றம்

60.பொலம் – பொன்

61.வேதிகை – திண்ணை

62.தூணம் – தூண்

63.தாமம் – மாலை

64.கதலிகைக் கொடி -சிறு சிறு கொடியாகப் பல கொடிகள் கட்டியது,

65.காழூன்று கொடி – கொம்புகளில் கட்டும் கொடி

66.விலோதம் – துணியாலான கொடி

67.வசி – மழை

68.செற்றம் – சினம்

69.கலாம் – போர்

70.துருத்தி – ஆற்றிடைக்குறை (ஆற்றின் நடுவே இருக்கும் மணல்திட்டு)

71.களர்நிலம் – உவர்நிலம்

72.நவிலல் – சொல்

73.வையம் – உலகம்

74.மாக்கடல் – பெரிய கடல்

75.இயற்றுக – செய்க

76.மின்னாளை – மின்னலைப் போன்றவளை

77.மின்னாள் – ஒளிரமாட்டாள்

78.தணல் – நெருப்பு

79.தாழி – சமைக்கும் கலன்

80.அணித்து – அருகில்

81.தவிர்க்கஒணா – தவிர்க்க இயலாத

82.யாண்டும் – எப்பொழுதும்

83.மூவாது – முதுமை அடையாமல்

84.நாறுவ – முளைப்ப

85.தாவா – கெடாதிருத்தல்

86.மைவனம் – மலைநெல்

87.முருகியம் – குறிஞ்சிப்பறை

88.பூஞ்சினை-பூக்களை

89.உடைய கிளை

90.சிறை – இறகு

91.சாந்தம் – சந்தனம்

92.பூவை- நாகணவாய்ப் பறவை

93.பொலம்- அழகு

94.கடறு – காடு

95.முக்குழல்-கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல்கள்;

96.பொலி – தானியக்குவியல்

97.உழை – ஒரு வகை மான்.

98.கல் -மலை

99.முருகு – தேன், மணம், அழகு

100. மல்லல்- வளம்

101. செறு- வயல்

102. கரிக்குருத்து – யானைத்தந்தம்

103. போர்- வைக்கோற்போர்

104. புரைதப- குற்றமின்றி

105. தும்பி- ஒருவகை வண்டு

106. துவரை-பவளம்

107. மரை – தாமரை மலர்

108. விசும்பு- வானம்

109. மதியம்-நிலவு

110. தீபம் – விளக்கு

111. சதிர் – நடனம்

112. தாமம் – மாலை

113. தெங்கு – தேங்காய்

114. இசை – புகழ்

115. வருக்கை – பலாப்பழம்
116. நெற்றி – உச்சி
117. மால்வரை – பெரியமலை
118. மடுத்து – பாய்ந்து
119. கொழுநிதி – திரண்ட நிதி
120. மருப்பு – கொம்பு
121. வெறி – மணம்
122. கழனி – வயல்
123. செறி – சிறந்த
124. இரிய – ஓட
125. அடிசில் – சோறு
126. மடிவு – சோம்பல்
127. கொடியன்னார் – மகளிர்
128. நற்றவம் – பெருந்தவம்
129. வட்டம் – எல்லை
130. வெற்றம் – வெற்றி
131. அள்ளல் – சேறு
132. பழனம் – நீர் மிக்க வயல்
133. வெரீஇ – அஞ்சி
134. பார்பபு – குஞ்சு
135. “நாவலோ” – நாள் வாழ்க என்பது போன்ற வாழ்த்து
136. இசைத்தால் – ஆரவாரத்தோடு கூவுதல்
137. நந்து – சங்கு
138. கமுகு – பாக்கு
139. முத்தம் – முத்து
140. சாெெல்லும் பாெெருளும்
141. விண் – வானம்
142. ரவி – கதிரவன்
143. கமுகு – பாக்கு
144. பாண்டம் பாண்டமாக – அடுக்குத் தொடர்

145. வாயிலும் சன்னலும் – எண்ணும்மை
146. அறம் – நற்செயல்
147. வெகுளி – சினம்
148. ஞானம் – அறிவு
149. விரதம் – மேற்கொண்ட நன்னெறி
150. நசை – விருப்பம்
151. நல்கல் – வழங்குதல்
152. பிடி – பெண்யானை
153. வேழம் – ஆண்யானை
154. யா – ஒரு வகை மரம், பாலை நிலத்தில் வளர்வது
155. பொளிக்கும் – உரிக்கும்
156. ஆறு – வழி

**பத்தாம் வகுப்பு**

1. துய்ப்பது – கற்பது, தருதல்
2. மேவலால் – பொருந்துதல், பெறுதல்
3. மயலுறுத்து – மயங்கச்செய்
4. ப்ராண – ரஸம் – உயிர்வளி
5. லயத்துடன் – சீராக
6. நனந்தலை உலகம் – அகன்ற உலகம்
7. நேமி – வலம்புரிச்சங்கு
8. காேடு – மலை
9. காெடுஞ்செலவு – விரைவாகச் செல்லுதல்
10. நறுவீ – நறுமணமுடைய மலர்கள்
11. தூஉய் – தூவி
12. விரிச்சி – நற்சாெல்
13. சுவல் – தாேள்
14. அருகுறை – அருகில்
15. முகமன் – ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொற்கள்
16. அசைஇ – இளைப்பாறி
17. அல்கி – தங்கி

18.கடும்பு – சுற்றம்

19.நரலும் – ஒலிக்கும்

20.ஆரி – அருமை

21.படுகர் – பள்ளம்

22.வயிரியம் – கூத்தர்

23.வேவை – வெந்தது

24.இறடி – திசை

25.பொம்மல் – சோறு

26.சுடினும் – சுட்டாலும்

27.மாளாத – தீராத

28.மாயம் – விளையாட்டு

29.விசும்பு – வானம்

30.ஊழி – யுகம்

31.ஊழ – முறை

32.தண்பெயல் – குளிர்ந்த மழை

33.ஆர்தருபு – வெள்ளததில் மூழ்கிக் கிடந்த

34.பீடு – சிறப்பு

35.ஈண்டி – செறிந்து திரண்டு

36.கேள்வியினான் – நூல் வல்லான்

37.கேண்மையினான் – நட்பினன்

38.தார் – மாலை

39.முடி – தலை

40.முனிவு – சினம்

41.அகத்து உவகை – மனமகிழ்ச்சி

42.தமர் – உறவினர்

43.நீபவனம் – கடம்பவனம்

44.மீனவன் – பாண்டிய மன்னன்

45.கவரி – சாமரை (கவரிமாவின் முடியில் செய்த விசிறியாகிய அரசச் சின்னம்)

46.நுவன்ற – சொல்லிய

47.என்னா – அசைச் சொல்

48.பண்டி – வயிறு

49.அசும்பிய – ஒளிவீசுகிற

50.முச்சி – தலையுச்சிக் காெ◌ண்டை

51.சுண்ணம் – நறுமணப்பொடி

52.காருகர் – நெய்பவர் (சாலியர்)

53.தூசு – பட்டு

54.துகிர் – பவளம்

55.வெறுக்கை – செல்வம்

56.நொடை – விலை

57.பாசவர் – வெற்றிலை விற்போர்

58.ஓசுநர் – எண்ணெய் விற்போர்

59.மண்ணுள் வினைஞர் – ஓவியர்

60.மண்ணீட்டாளர் – சிற்பி

61.கிழி – துணி

62.சேக்கை – படுக்கை

63.யாக்கை – உடல்

64.பிணித்து – கட்டி

65.வாய்ந்த – பயனுள்ள

66.இளங்கூழ் – இளம்பயிர்

67.தயங்கி – அசைந்து

68.காய்ந்தேன் – வருந்தினேன்

69.கொம்பு – கிளை

70.புழை – துளை

71.கான் – காடு

72.தேம்ப – வாட

73.அசும்பு – நிலம்

74.உய்முறை – வாழும் வழி

75.ஓர்ந்து – நினைத்து

76.கடிந்து – விலக்கி

77.உவமணி – மணமலர்

78.படலை – மாலை

79.துணர் – மலர்கள்

## பதினொன்றாம் வகுப்பு

1. பால் – வகை
2. இயல்பு – பண்பு
3. மாடம் – மாளிகை
4. அமை – மூங்கில்
5. புரளும் – ததும்பும்
6. கரைகின்ற – கத்துகின்ற, ஒலிக்கின்ற
7. சுழித்தோடும் – சுழன்றோடும்
8. மார்பு சுரந்த – வளமான
9. மறுகியது – கலங்கியது
10. ஏதலி – ஏழை, அகதி
11. வட ஆரிநாடு – திருமலை
12. தென் ஆரிநாடு – குற்றாலம்
13. ஆரளி – மொய்க்கின்ற வண்டு
14. இந்துளம் – இந்தளம் எனும் ஒரு வகைப் பண்
15. இடங்கணி – சங்கிலி
16. உளம் – உள்ளான் என்ற பறவை
17. சலச வாவி – தாமரைத் தடாகம்
18. தரளம் – முத்து
19. கா – சோலை
20. முகில்தொகை – மேகக்கூட்டம்
21. மஞ்ஞை – மயில்
22. கொண்டல் – கார்கால மேகம்
23. மண்டலம் – உலகம்
24. வாவித் தரங்கம் – குளத்தில் எழும் அலை
25. அளி உலாம் – வண்டு மொய்க்கின்ற
26. காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம் – மழைக்கால மலர்கள்

27.போது – மொட்டு

28.அலர்ந்து – மலர்ந்து

29.கவினி – அழகுற

30.ஜகம் – உலகம்

31.புயம் – தோள்

32.வரை – மலை

33.வன்னம் – அழகு

34.கழுகாசல் – கழுகு மலை

35.த்வஜஸ்தம்பம் – கொடி மரம்

36.சலராசி – கடலில் வாழும் மீன் முதலிய உயிர்கள்

37.விலாசம் – அழகு

38.நூபுரம் – சிலம்பு

39.மாசுணம் – பாம்பு

40.இஞ்சி – மதில்

41.புயல் – மேகம்

42.கறங்கும் – சுழலும்

43.சிதவல் – தலைப்பாகை

44.தண்டு – ஊன்றுகோல்

45.தமியர் – தனித்தவர்

46.முனிதல் – வெறுத்தல்

47.துஞ்சல் – சோம்பல்

48.அயர்வு – சோர்வு

49.மாட்சி – பெருமை

50.நோன்மை – வலிமை

51.தாள் – முயற்சி

52.பிரசவம் – தேன்

53.புடைத்தல் – கோல்கொண்டு ஓச்சுதல்

54.கொழுநன் குடி – கணவனுடைய வீடு

55.வறன் – வறுமை

56.கொழுஞ்சோறு – பெருஞ்செல்வம்

57.உள்ளாள் – நினையாள்

58.மதுகை – பெருமிதம்

59.இக்கும் – நீக்கும்

60.இழுக்கு – குற்றம்

61.வினாயவை – கேட்டவை

62.வரை – மலை

63.கம்பலை – பேரொலி

64.புடவி – உலகம்

65.எய்துதல் – பெறுதல்

66.வாரணம் – யானை

67.பூரணம் – நிறைவு

68.நல்கல் – அளித்தல்

69.வதுவை – திருமணம்

70.கோன் – அரசன்

71.மறுவிலா – குற்றம் இல்லாத

72.துன்ன – நெருங்கிய

73.பொறிகள் – ஐம்புலன்

74.தெண்டிரை – தெள்ளிய நீரலை

75.விண்டு – திறந்து

76.மண்டிய – நிறைந்த

77.காய்ந்த – சிறந்த

78.தீன் – மார்க்கம்

79.கொண்மூ – மேகம்

80.சமம் – போர்

81.விசும்பு – வானம்

82.அரவம் – ஆரவாரம்

83.ஆயம் – சுற்றம்

84.தழலை, தட்டை – பறவைகள் ஓட்டும் கருவிகள்

85.இரை – உணவு

86.படுகை – படுக்கை

87.சந்து, பொந்து – துளை

88.தமக்கை – உடன் பிறந்தவள்

89.அயர்ந்து – சோர்ந்த

90.கொத்து – பூமாலை

91.குழல் – கூந்தல்

92.நாங்கூழ் – மண்புழு

93.கோலத்து நாட்டார் – கலிங்க நாட்டார்

94.வரிசை – சன்மானம்

95.குண்டலப்பூச்சி – வளைந்து சுருண்டு கொள்ளும்

96.சிலம்பு, தண்டை, பாடகம், கெச்சம், கலாழி – பெண்கள் அணியும் அணிகலன்கள்

97.காயில் – வெகுண்டல்

98.அந்தம் – முடிவு

99.அயன் – பிரமன்

100. மால் – விஷ்ணு

101. ஆலாலம் – நஞ்சு

102. ஓதுக – சொல்க

103. முழக்கம் – ஓங்கி உரைத்தல்

104. கனிகள் – மாணிக்கம்

105. படிக்க – பளபளப்பான கல்

106. மீட்சி – விடுதலை

107. நவை – குற்றம்

108. படி – உலகம்

109. பதி – நாடு

110. பிழைப்பு – வாழ்தல்

111. நிரையம் – நரகம்

112. ஒரீஇய – நோய் நீங்கிய

113. புரையோர் – சான்றோர்

114. யாணர் – புது வருவாய்

115. மருண்டெனன் – வியப்படைந்தேன்

116. மன்னுயிர் – நிலைபெற்றுள்ள உயிர்த்தொகுதி

117. கடிநகர் – காவல் உடைய நகரம்
118. காண்டி – காண்க
119. பூம்பராகம் – பூவில் உள்ள மகரந்தம்
120. ஆக இலா – குற்றம் இலாத
121. தோட்டி – துறட்டி
122. அயம் – ஆடு, குதிரை
123. புக்கவிட்டு – போகவிட்டு
124. சீரியதூளி – நுண்ணிய மணல்
125. சிறுகால் – வாய்க்கால்
126. பரல் – கல்
127. முந்நீர் மடு – கடலாகிய நீர்நிலை
128. அண்டயோனி – ஞாயிறு
129. சாடு – பாய்
130. ஈட்டியது – சேகரித்தது
131. எழிலி – மேகம்
132. நாங்கூழ் புழு – மண்புழு
133. பாடு – உழைப்பு
134. ஓவா – ஓயாத
135. வேதித்து – மாற்றி

**பன்னிரண்டாம் வகுப்பு**

1. புதுப்பெயல் – புதுமழை
2. ஆர்கலி – வெள்ளம்
3. கொடுங்கோல் – வளைந்த கோல்
4. புலம்பு – தனிமை
5. கண்ணி – தலையில் சூடும் மாலை
6. கவுள் – கன்னம்
7. மா – விலங்கு
8. அமலன் – இராமன்
9. இளவல் – தம்பி
10. நளிர்கடல் – குளிர்ந்தகடல்

11.துன்பு – துன்பம்

12.உன்னேல் – எண்ணாதே

13.அனகன் – இராமன்

14.உவா – அமாவாசை

15.உடுபதி – சந்திரன்

16.செற்றார் – பகைவர்

17.கிளை – உறவினர்

18.மலிவிழா – விழாக்கள் நிறைந்த

19.மடநல்லார் – இளமை பாெருந்திய பெண்கள்

20.கலிவிழா – எழுச்சி தரும் விழா

21.பலிவிழா – திசைதோறும் பூசையிடும் உத்திரவிழா

22.ஒலிவிழா – ஆரவார விழா

23.வேட்டம் – மீன் பிடித்தல்

24.கழி – உப்பங்கழி

25.செறு – வயல்

26.கொள்ளை – விலை

27.என்றூழ் – சூரியனின் வெப்பம்

28.விடர – மலைவெடிப்பு

29.கதழ் – விரைவு

30.உமணர் – உப்பு வணிகர்

31.எல்வளை– ஒளிரும் வளையல்

32.தெளிர்ப்ப – ஒலிப்ப

33.விளிஅறி – குரல்கேட்ட

34.ஞமலி – நாய்

35.வெரீஇய– அஞ்சிய

36.மதர்கயல்– அழகிய மீன்

37.புனவன் – கானவன்

38.அள்ளல் – சேறு

39.பகடு– எருது

40.வாயிலோயே – வாயில் காப்போனே

41.வள்ளியோர் – வள்ளல்கள்

42.வயங்குமொழி – விளங்கும் சொற்கள்

43.வித்தி – விதைத்து

44.உள்ளியது – நினைத்தது

45.உரன் – வலிமை

46.வறுந்தலை – வெறுமையான இடம்

47.காவினெம் – கட்டிக்கொள்ளுதல்

48.கலன் – யாழ்

49.கலப்பை – கருவிகளை வைக்கும் பை

50.மழு – கோடரி.

51.புரிகுழல் – சுருண்ட கூந்தல்

52.கழை – மூங்கில்

53.கண் – கணு

54.விரல் – ஆடவர் கைப் பெருவிரல்

55.உத்தரப் பலகை – மேல் இடும் பலகை

56.பூதர் – ஐம்பூதங்கள்

57.ஓவிய விதானம் – ஓவியம் தீட்டப்பட்ட பந்தல்

58.நித்திலம் – முத்து

59.விருந்து – புதுமை

60.மண்ணிய – கழுவிய

61.நாவலம்பொலம் – சாம்பூநதம் என்னும் உயர்ந்த வகைப் பொன்

62.தலைக்கோல் – நாடகக் கணிகையர் பெறும் பட்டம்

63.ஓடை – முக படாம்

64.அரசு உவா – பட்டத்து யானை

65.பரசினர் – வாழ்த்தினர்

66.பல்இயம் – இன்னிசைக் கருவி

67.குயிலுவ மாக்கள் – இசைக் கருவிகள் வாசிப்போர்

68.தோரிய மகளிர் – ஆடலில் தேர்ந்த பெண்கள்

69.வாரம் – தெய்வப்பாடல்

70.ஆமந்திரிகை – இடக்கை வாத்தியம்

71.இலைப்பூங்கோதை – அரசன் அணிந்துள்ள பச்சை மாலை

72.கழஞ்சு – ஒரு வகை எடை அளவு

73.நகை – சிரிப்பு

74.இளிவரல் – சிறுமை

75.மருட்கை – வியப்பு

76.பெருமிதம் – பெருமை

77.வெகுளி – சினம்

78.உவகை – மகிழச்சி

79.காய்நெல் – விளைந்த நெல்

80.மா – ஒருநில அளவு (ஓர் ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கு).

81.செறு – வயல்

82.தமித்து – தனித்து

83.புக்கு – புகுந்து

84.யாத்து – சேர்த்து

85.நந்தும் – தழைக்கும்

86.வரிசை – முறைமை

87.கல் – ஒலிக்குறிப்பு

88.பரிவு – அன்பு

89.தப – கெட

90.பிண்டம் – வரி

91.நச்சின் – விரும்பினால்

92.உன்னலிர் – எண்ணாதீர்கள்

93.பிணித்தமை – கட்டியமை

94.நீச – இழிந்த

95.நேசம் – அன்பு

96.வல்லியதை – உறுதியை

97.ஓர்மின் – ஆராய்ந்து பாருங்கள்

98.பாதகர் – கொடியவர்

99.குழுமி – ஒன்றுகூடி

100. பழிப்புரை – இகழ்ச்சியுரை

101. ஏதமில் – குற்றமில்லாத
102. ஊன்ற – அழுந்த
103. மாற்றம் – சொல்
104. நுவன்றிலர் – கூறவில்லை
105. ஆக்கினை – தண்டனை
106. நிண்ணயம் – உறுதி
107. கூவல் – கிணறு
108. ஒண்ணுமோ – முடியுமோ
109. உததி – கடல்
110. ஒடுக்க – அடக்க.
111. களைந்து – கழற்றி
112. திகழ – விளங்க
113. சேர்த்தினர் – உடுத்தினர்
114. சிரத்து – தலையில்
115. பெய்தனர் – வைத்து அழுத்தினர்
116. கைதுறும் – கையில் கொடுத்திருந்த
117. கண்டகர் – கொடியவர்கள்
118. வெய்துற – வலிமை மிக
119. வைதனர் – திட்டினர்
120. மறங்கொள் – முரட்டுத் தன்மையுள்ளவர்
121. மேதினி – உலகம்
122. கீண்டு – பிளந்து
123. வாரிதி – கடல்
124. சுவறாதது – வற்றாதது
125. வல்லானை – வலிமை வாய்ந்தவரை
126. நிந்தை – பழி
127. பொல்லாங்கு – கெடுதல், தீமை.
128. வளமலை – வளமான மலை (மலைநாடு) இன்று பழநி மலை என்று அழைக்கப்படுகிறது;
129. கவாஅன் – மலைப்பக்கம்
130. கலிங்கம் – ஆடை

131. சுரும்பு – வண்டு
132. நாகம் – சுரபுன்னை, நாகப்பாம்பு
133. பிறங்கு – விளங்கும்
134. பறம்பு – பறம்பு மலை
135. கறங்கு – ஒலிக்கும்
136. வாலுளை – வெண்மையான தலையாட்டம்
137. மருள – வியக்க
138. நிழல் – ஒளி வீசும்
139. நீலம் – நீலமணி
140. ஆலமர் செல்வன் – சிவபெருமான் (இறைவன்)
141. அமர்ந்தனன் – விரும்பினன்
142. சாவம் – வில்
143. மால்வரை – பெரியமலை (கரிய மலையுமாம்)
144. கரவாது – மறைக்காது
145. துஞ்சு – தங்கு
146. நளிசினை – செறிந்த கிளை (பெரிய கிளை)
147. போது – மலர்
148. கஞலிய – நெருங்கிய
149. நாகு – இளமை
150. குறும்பொறை – சிறு குன்று
151. கோடியர் – கூத்தர்
152. மலைதல் – போரிடல்
153. உறழ் – செறிவு
154. நுகம் – பாரம்

## ஒரு சொல்லுக்கு இணையான வேறு சொல் அறிதல்

- **இணைச்சொல்** அல்லது **இணைப்புச்சொல்** (*conjunction*) என்பது மொழியில் இணையிணையாக அமையும் சில சொற்களைக் குறிக்கும். இணைச்சொற்களைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தினால் மொழிநடை சிறக்கும்; சொல்லப்படும் கருத்தும் திருத்தமாய் விளங்கும். நாம் செய்திகளையும் கருத்துகளையும் பிறரிடம் கூறும்பொழுது சுவைபடக் கூறுவதற்காக ஒரே பொருள் தரும் இரு சொற்களை இணைத்துப் பயன்படுத்துவதும் எதிர் பொருள்தரும் இருசொற்களை இனைத்துப் பயன்படுத்துவதும் இணைச்சொற்கள் எனப்படும்.

**இணைச்சொல் விளக்கம்:**

- ஒரு வாக்கியத்தில் இருவேறு சொற்கள் பொருளை உறுதிப்படுத்தவோ, முரண்படுத்தவோ செறிவுபடுத்தவோ இணைந்து வருவது இணைச்சொல் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- "மாப்பிள்ளைக்கு நிலம்புலம் உள்ளதா?" இங்கு நிலம் என்பது நன்செய் வயல் ஆகும். புலம் என்பது புன்செய் வயல் ஆகும்.

**இணைச்சொல் வகைகள்:**

இணைச்சொல் வகைகள் பின்வருமாறு மூவகைப்படும்.

- நேரிணைச் சொற்கள்
- எதிரிணைச் சொற்கள்
- செறியிணைச் சொற்கள்

**நேரிணைச் சொற்கள்:**

ஒரே பொருள் தரும் இரு சொற்கள் இணைந்து வருவது நேரிணைச் சொற்கள் எனப்படும். நேரிணைச் சொற்கள் பின்வருமாறு அமையும்.

- சீரும் சிறப்பும்
- பேரும் புகழும்
- ஈடு இணை
- உற்றார் உறவினர்
- நோய் நொடி
- குற்றங் குறை
- கூன் குருடு
- வாடி வதங்கி
- முக்கலும் முனங்கலும்
- வாயும் வயிறும்
- மூக்கும் முழியும்
- ஆற அமர
- இடுக்கு மிடுக்கு
- எடக்கு மடக்கு

- பாயும் படுக்கையும்
- தங்கு தடை
- முட்டி மோதி
- ஒட்டி உலர்ந்து
- தப்பித் தவறி
- வாட்டச் சாட்டம்
- நாணிக் கோணி

**எதிரிணைச் சொற்கள்:**

ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு சொற்கள் இணைந்து வருவது எதிரிணைச் சொற்கள் எனப்படும். எதிரிணைச் சொற்கள் பின்வருமாறு அமையும்.

- அல்லும் பகலும்
- உயர்வு தாழ்வு
- அடியும் நுனியும்
- உள்ளும் புறமும்
- குறுக்கும் நெடுக்கும்
- உச்சிமுதல் உள்ளங்கால் வரை
- ஐயந்திரிபற
- இருளும் ஒளியும்
- கிழக்கும் மேற்கும்
- வடக்கும் தெற்கும்
- ஏட்டிக்குப் போட்டி
- மேடு பள்ளம்
- முன்னும் பின்னும்
- மேலும் கீழும்
- வலதும் இடதும்
- அங்கே இங்கே
- காலை மாலை

**செறியிணைச் சொற்கள்:**

ஒரு சொல்லின் பண்பு அல்லது செயலை வலுவூட்டும் விதமாக ஒத்த பொருளுடைய இரு சொற்கள் இணைந்து வருவது செறியிணைச் சொற்கள் எனப்படும். செறியிணைச் சொற்கள் பின்வரும் இரு வழிகளில் அமையும்.

**பண்பு செறியிணைச் சொற்கள்:**

- செக்கச் செவேல்
- வெள்ளை வெளேர்
- பச்சைப் பசேல்
- நட்ட நடுவில்
- கன்னங்கரேல்

**செயல் செறியிணைச் சொற்கள்:**

- அழுதழுது
- நடந்து நடந்து
- கொஞ்சிக் கொஞ்சி
- பார்த்துப் பார்த்து

**கீழ்க்காணும் தொடர்களில் பொருத்தமான இணைச்சொற்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக:**

(ஈடும் எடுப்புமாக, கண்ணுங்கருத்துமாக, அடுக்கடுக்காக, இன்பமும் துன்பமும், கீரியும்பாம்பும்)

**கேள்விகள்:**

**1. பானைகள் ................................ வைக்கப்பட்டிருந்தன.**

**2. நேற்றுவரை ................................ போல் இருந்தவர்கள் இன்று நட்புடன் பழகுகிறார்கள்.**

**3. தேர்வில் ................................ படித்ததால், நான் வகுப்பில் முதலாவதாக வந்தேன்.**

**4. வாழ்வில் ................................ உண்டு. அதனைக் கண்டு நாம் சோர்வடையக்கூடாது.**

**5. மன்ற விழாக்களில் எங்கள் ஆசிரியரின் பேச்சு ................................ இருக்கும்.**

**விடைகள்:**

1. பானைகள் **அடுக்கக்காக** வைக்கப்பட்டிருந்தன.

2. நேற்றுவரை **கீரியும்பாம்பும்** போல் இருந்தவர்கள் இன்று நட்புடன் பழகுகிறார்கள்.

3. தேர்வில் **கண்ணுங்கருத்துமாக** படித்ததால், நான் வகுப்பில் முதலாவதாக வந்தேன்.

4. வாழ்வில் **இன்பமும் துன்பமும்** உண்டு. அதனைக் கண்டு நாம் சோர்வடையக்கூடாது.

5. மன்ற விழாக்களில் எங்கள் ஆசிரியரின் பேச்சு **ஈடும்எடுப்புமாக** இருக்கும்.

**விடுபட்ட இடங்களில் உரிய எதிரிணைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக:**

**கேள்விகள்:**

**1. இன்பமும் – துன்பமும் – இன்பமும் துன்பமும்**

**2. அன்றும் – ................................ – ................................**

**3. அங்கும் – ................................ – ................................**

**4. உயர்வும் – ................................ – ................................**

**5. விண்ணும் – ................................ – ................................**

**விடைகள்:**

1. இன்பமும் துன்பமும் – **இன்பமும் துன்பமும்**

2. அன்றும் இன்றும் – **அன்றும் இன்றும்**

3. அங்கும் இங்கும் – **அங்கும் இங்கும்**

4. உயர்வும் தாழ்வும் – **உயர்வும்தாழ்வும்**

5. விண்ணும் மண்ணும் – **விண்ணும் மண்ணும்**

**கேள்வி: 1**

**நீங்கள் படிக்கும் நூல்களிலிருந்து இணைமொழிகளைத் தொகுக்க.**

**விடை:**

**இணை மொழிகள்:**

- வாலும்தோலும்
- இரவும்பகலும்
- கண்ணும்காதும்
- கீழும்மேலும்
- கண்ணும்கருத்தும்
- நன்மைதீமை
- கையும்களவும்
- வினாவிடை
- குறுக்கும்மறுக்கும்
- விருப்புவெறுப்பு

**கேள்வி: 2**

**இணைமொழிகளைப் பயன்படுத்தி, சிறு உரையாடல் எழுதுக.**

**விடை:**

**உரையாடல்:**

**அம்மா:** முருகா! நான் கடைக்குப் போய்விட்டு வருகிறேன். நீங்க கிண்டலும் கேலியும் பண்றேன்னு சண்டை போடாதீங்க.

**முருகன்:** நாங்க சண்டையெல்லாம் போடமாட்டோம் நீ போய்விட்டு ஆர அமர வாம்மா.

**அம்மா:** சரி சரி! வீட்டைத் திறந்து விட்டுட்டு வீடு வீடாய்ப் போகாதீங்க.

**முருகன்:** ஓடியாடி விளையாடக் கூடாது. பேசக்கூடாது. என்னம்மா சொல்றீங்க.

**அம்மா:** இதெல்லாம் தங்குதடையின்றிப் பேசு. படிக்கச் சொன்னா மட்டும் படிக்காதே!

**முருகன்:** அக்கம்பக்கத்தில் பேசாதே என்று சொன்னீங்க, பேசறதே இல்லை. விளையாட போவதும் இல்லை.

**அம்மா:** சரி சரி! பத்திரமாக இரு.

**முருகன்:** நீ பத்திரமா போய்விட்டு வாம்மா! மழைக்காலம் சாலையெல்லாம் பல்லாங்குழி போல் மேடும் பள்ளமுமாய் உள்ளது.

**அம்மா:** சரி சரி!

**கேள்வி: 3**

**இணைமொழிகள் வருமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.**

**விடை:**

(i) ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த குழந்தையைப் பார்க்க **கூட்டங்கூட்டமாய்** மக்கள் வந்தனர்.

(ii) தஞ்சை பெரியகோவில் **தலைமுறை தலைமுறையாய்** நின்று தமிழரின் பெருமையைப் பறைசாற்றுகின்றன.

(iii) மழையில்லாமல் பயிர்கள் **வாடி வதங்கி** உள்ளன.

(iv) குழந்தைகள் **ஓடியாடி** விளையாட வேண்டும்.

(v) **நாளும்கிழமையும்** எவருக்காகவும் காத்திருக்காது.

**கூடுதல் வினாக்கள்:**

**நிரப்புக:**

**1. இணைச்சொற்கள் ............ என மூவகைப்படும்.**

விடை: நேரிணை, எதிரிணை, செறியினை

**2. வாடிவதங்கி .................. இணைச்சொல்**

விடை: நேர்

**3. வெற்றியும் தோல்வியும் ............. இணைச்சொல்**

விடை: எதிர்

**4. பச்சைப்பசேல் .................. சொல்**

விடை: செறியினைச்

## கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. **ஏற்றத் தாழ்வற்ற —— அமைய வேண்டும்**

   **அ) சமூகம்** ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு

2. **நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு —— ஆக இருக்கும்**

   அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் **ஈ) அசதி**

3. **தாய் மொழியில் படித்தால் —— அடையலாம்**

   அ) பன்மை **ஆ) மேன்மை** இ) பொறுமை ஈ) சிறுமை

4. **தகவல் தொட ர்பு முன்னேற்றத்தால் —— சுருங்கிவிட்டது**

   **அ) மேதினி** ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று

5. **பழமொழியின் சிறப்பு —— சொல்வது**

   அ) விரிவாகச் **ஆ) சுருங்கச்** இ) பழைமையைச் ஈ) பல மொழிகளில்

6. **கழுத்தில் சூடுவது ——**

   **அ) தார்** ஆ) கணையாழி இ) தண்டை ஈ) மேகலை

7. **கதிரவனின் மற்றொரு பெயர் ——**

   அ) புதன் **ஆ) ஞாயிறு** இ) சந்திரன் ஈ) செவ்வாய்

8. **'கிணறு' என்பதைக் குறிக்கும் சொல்——**

   அ) ஏரி **ஆ) கேணி** இ) குளம் ஈ) ஆறு

9. **மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் ——**

   **அ) அடுக்குகள்** ஆ) கூரை இ) சாளரம் ஈ) வாயில்

10. **சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி________.**

    **அ) துருவப்பகுதி** ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

11. **மக்களுக்கு மகிழ்ச்சி தருவது ——————**

    அ) ஊக்கமின்மை **ஆ) அறிவுடைய மக்கள்** இ) வன்சொல் ஈ) சிறிய செயல்

12. **ஒருவர்க்குச் சிறந்த அணி ——————**

    அ) மாலை ஆ) காதணி **இ) இன்சொல்** ஈ) வன்சொல்

13. **உடல் நோய்க்கு ______________ தேவை.**

    **அ) ஔடதம்** ஆ) இனிப்பு இ) உணவு ஈ) உடை

**14. நண்பர்களுடன் ______________ விளையாடு.**

**அ) ஒருமித்து** ஆ) மாறுபட்டு இ) தனித்து ஈ) பகைத்து

**15. மனிதன் எப்போதும் உண்மையையே ______________.**

**அ) உரைக்கின்றான்** ஆ) உழைக்கின்றான் இ)உறைகின்றான் ஈ)உரைகின்றான்

**16. நுட்பமாகச் சிந்தித்து அறிவது __________________.**

அ) நூலறிவு **ஆ) நுண்ணறிவு** இ) சிற்றறிவு ஈ) பட்டறிவு

**17. தானே இயங்கும் எந்திரம் ________________.**

அ) கணினி **ஆ) தானியங்கி** இ) அலைபேசி ஈ) தொலைக்காட்சி

**18. மாணவர்கள் நூல்களை ——— கற்க வேண்டும்.**

அ) மேலோட்டமாக **ஆ) மாசுற** இ) மாசற ஈ) மயக்கமுற

**19. மாணவர் பிறர்__________ நடக்கக் கூடாது.**

அ) போற்றும்படி **ஆ) தூற்றும்படி** இ) பார்க்கும்படி ஈ) வியக்கும்படி

**20. நாம்_________ சொல்படி நடக்க வேண்டும்.**

அ) இளையோர் ஆ) ஊரார் **இ) மூத்தோர்** ஈ) வழிப்போக்கர்

**21. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடுமேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம் __________________.**

அ) ஆடு மேய்க்க ஆள் இல்லை

ஆ) ஊரில் பள்ளிக்கூடம் இல்லை

இ) வழி தெரியவில்லை

ஈ) பேருந்து வசதியில்லை

**22. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?**

அ) மஞ்சள் ஆ) வந்தான் **இ) கண்ணில்/கல்வி** ஈ) தம்பி

**23. தவறான சொல்லை வட்ட மிடுக.**

அ) கண்டான் **ஆ) வென்ரான்** இ) நண்டு ஈ) வண்டு

**24. பிறரிடம் நான் ——— பேசுவேன்.**

அ) கடுஞ்சொல் **ஆ) இன்சொல்** இ) வன்சொல் ஈ) கொடுஞ்சொல்

**25. பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக்கொள்வது ——— ஆகும்.**

அ) வம்பு ஆ) அமைதி இ) அடக்கம் **ஈ) பொறை**

**26. கதிர் முற்றியதும் ____________ செய்வர்.**

**அ) அறுவடை** ஆ) உரமிடுதல் இ) நடவு ஈ) களையெடுத்தல்

**27. விழாக்காலங்களில் வீட்டின் வாயிலில் மாவிலையால் __________ கட்டுவர்.**

அ) செடி ஆ) கொடி **இ) தோரணம்** ஈ) அலங்கார வளைவு

**28. பழையன கழிதலும்_____________ புகுதலும்.**

**அ) புதியன** ஆ) புதுமை இ) புதிய ஈ) புதுமையான

**29. பட்டுப் போன மரத்தைக் காண ______________ தரும்.**

அ) அயர்வு ஆ) கனவு **இ) துன்பம்** ஈ) சோர்வு

**30. விருந்தினரின் முகம் எப்போது வாடும்?**

அ) நம் முகம் மாறினால் இ) நாம் நன்கு வரவேற்றால்

ஆ) நம் வீடு மாறினால் ஈ) நம் முகவரி மாறினால்

**31. நிலையான செல்வம் ......................**

அ) தங்கம் ஆ) பணம் **இ) ஊக்கம்** ஈ) ஏக்கம்

**32. ஆராயும் அறிவு உடையவர்கள் ..................... சொற்களைப் பேசமாட்டார்கள்.**

அ) உயர்வான ஆ) விலையற்ற **இ) பயன்தராத** ஈ) பயன்உடைய

**33. போர்க்களத்தில் வெளிப்படும் குணம்————**

**அ) மகிழ்ச்சி** ஆ) துன்பம் இ) வீரம் ஈ) அழுகை

**34. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் _______________**

**அ) நுகர்வோர்** ஆ) தொழிலாளி இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி

35. என் வீடு __________ உள்ளது. (அது / **அங்கே)**

36. தம்பி _____________ வா. (இவர் / **இங்கே)**

37. நீர் ____________ தேங்கி இருக்கிறது? (அது / **எங்கே)**

38. யார் ____________ தெரியுமா? **(அவர் /** யாது)

39. உன் வீடு ____________அமைந்துள்ளது? **(எங்கே /** என்ன)

**40. கிடைக்கும் பொருள்களின் ________________ க் கூட்டிப் புதிய பொருளாக மாற்றுவது சிறந்த வணிகம்.**

(அ) அளவை **(ஆ) மதிப்பை** (இ) எண்ணிக்கையை (ஈ) எடையை

**41. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல்**

அ) திருவாசகம் **ஆ) திருக்குறள்** இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை

**42. காளிதாசனின் தேனிசைப் பாடல்கள் எதிரொலிக்கும் இடம்**

**அ) காவிரிக்கரை** ஆ) வைகைக்கரை இ) கங்கைக்கரை ஈ) யமுனைக்கரை

**43. கலைக்கூடமாகக் காட்சி தருவது**

**அ) சிற்பக்கூடம்** ஆ) ஓவியக்கூடம் இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்

**44. காந்தியடிகளிடம் உடைஅணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் ______________**

அ) கோவை **ஆ) மதுரை** இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்

**45. காந்தியடிகள் ______________ அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினார்.**

அ) நாமக்கல் கவிஞர் ஆ) பாரதிதாசன் **இ) உ.வே.சாமிநாதர்** ஈ) பாரதியார்

**46. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு**

**அ) படித்தாள்** ஆ) ஐ இ) மற்று ஈ) கு

**47. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு**

அ) மதுரை ஆ) கால் இ) சித்திரை **ஈ) ஓடினான்**

**48. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு**

அ) சென்றாள் ஆ) வந்த **இ) சித்திரை** ஈ) நடந்து

**49. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு**

**அ) மா** ஆ) ஐ இ)உம் ஈ) மற்று

**50. பரிசு பெறும்போது நம் மனநில ................ ஆகை இருக்கும்.**

அ) கைவ்ல ஆ) துன்பம் **இ) மகிழச்சி** ஈ) வசாரவு

**51. வாழவில் உயர கடினமாக ................ வேண்டும்.**

அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க **ஈ) உழக்க**

**52. இடுகுறிப்பெயரை வட்டமிடுக.**

அ) பறவை **ஆ) மண்** இ) முக்காலி ஈ) மரங்கொத்தி

**53. காரணப்பெயரை வட்டமிடுக.**

அ) மரம் **ஆ) வளையல்** இ) சுவர் ஈ) யானை

**54. இடுகுறிச்சிறப்புப் பெயரை வட்டமிடுக.**

அ) வயல் **ஆ) வாழை** இ) மீன்கொத்தி ஈ) பறவை

**55. ஏழைகளுக்கு உதவி செய்வதே .................... ஆகும்.**

அ) பகை **ஆ) ஈகை** இ) வறுமை ஈ) கொடுமை

**56. பிற உயிர்களின் .......................க் கண்டு வருந்துவதே அறிவின் பயனாகும்.**

அ) மகிழ்வை ஆ) செல்வத்தை **இ) துன்பத்தை** ஈ) பகையை

**57. உள்ளத்தில் .................... இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.**

அ) மகிழ்ச்சி ஆ) மன்னிப்பு இ) துணிவு **ஈ) குற்றம்**

**58. புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல் ________________**

அ) ஜீவ ஜோதி **ஆ) ஆசிய ஜோதி** இ) நவ ஜோதி ஈ) ஜீவன் ஜோதி

**59. நேர்மையான வாழ்வை வாழ்பவர் ________________**

அ) எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர்

ஆ) உயிர்களைத் துன்புறுத்துபவர்

இ) தம்மை மட்டும் காத்துக்கொள்பவர்

ஈ) தம் குடும்பத்தையே எண்ணிவாழ்பவர்

**60. ஒருவர் செய்யக் கூடாதது ________________**

அ) நல்வினை **ஆ) தீவினை** இ) பிறவினை ஈ) தன்வினை

**61. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் ———-**

அ) மனித வாழ்க்கை இ) மனித நேயம்

ஆ) மனித உரிமை ஈ) மனித உடைமை

**62. தம் பொருளைக் கவர்ந்தவரிடமும் ———- காட்டியவர் வள்ளலார்.**

அ) கோபம் ஆ) வெறுப்பு இ) கவலை **ஈ) அன்பு**

**63. அன்னை தெரசாவிற்கு ———- க்கான 'நோபல் பரிசு' கிடைத்தது**

அ) பொருளாதாரம் ஆ) இயற்பியல் இ) மருத்துவம் **ஈ) அமைதி**

**64. கைலாஷ் சத்யார்த்தி தொடங்கிய இயக்கம் ———-**

அ) குழந்தைகளைப் பாதுகாப்போம்

ஆ) குழந்தைகளை நேசிப்போம்

இ) குழந்தைகளை வளர்ப்போம்

ஈ) குழந்தைகள் உதவி மையம்

**65. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் _________.**

அ) கலம்பகம் ஆ) பரிபாடல் **இ) பரணி** ஈ) அந்தாதி

**66. வானில் ______ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.**

அ) அகில் **ஆ) முகில்** இ) துகில் ஈ) துயில்

**67. மொழியின் முதல்நிலை பேசுதல், ________ ஆகியனவாகும்.**

அ) படித்தல் **ஆ) கேட்டல்** இ) எழுதுதல் ஈ) வரைதல்

**68. ஒலியின் வரிவடிவம் __________ ஆகும்.**

அ) பேச்சு **ஆ) எழுத்து** இ) குரல் ஈ) பாட்டு

**69. தமிழின் கிளை மொழிகளுள் ஒன்று __________**

அ) உருது ஆ) இந்தி **இ) தெலுங்கு** ஈ) ஆங்கிலம்

**70. பேச்சு மொழியை _________ வழக்கு என்றும் கூறுவர்**

அ) இலக்கிய **ஆ) உலக** இ) நூல் ஈ) மொழி

**71. வாழை, கன்றை _________.**

**அ) ஈன்றது** ஆ) வழங்கியது இ) கொடுத்தது ஈ) தந்தது

**72. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ______.**

அ) பச்சை இலை **ஆ) கோலிக்குண்டு** இ) பச்சைக்காய் ஈ) செங்காய்

**73. 'சுட்ட பழங்கள்' என்று குறிப்பிடப்ப டுபவை ______.**

**அ) மண் ஒட்டிய பழங்கள்**

ஆ) சூடான பழங்கள்

இ) வேகவைத்த பழங்கள்

ஈ) சுடப்ப ட்ட பழங்கள்

**74. ஆசிய யானைகளில் ஆண் – பெண் யானைகளை வேறுபடுத்துவது _____.**

அ) காது **ஆ) தந்தம்** இ) கண் ஈ) கால்நகம்

**75. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் ________.**

அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை **இ) முண்டந்து**றை ஈ) கூந்தன்குளம்

**76. 'வேட்கை' என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு _______.**

அ) அரை **ஆ) ஒன்று** இ) ஒன்றரை ஈ) இரண்டு

**77. மகரக் குறுக்கம் இடம்பெறாத சொல் _________.**

அ) போன்ம் ஆ) மருண்ம் இ) பழம் விழுந்தது **ஈ) பணம் கிடைத்தது**

**78. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது ________.**

அ) ஐகாரக் குறுக்கம்

ஆ) ஔகாரக் குறுக்கம்

இ) மகரக் குறுக்கம்

ஈ) ஆய்தக் குறுக்கம்

**79. வாய்மை எனப்படுவது _______.**

அ) அன்பாகப் பேசுதல்
ஆ) தீங்குதராத சொற்களைப் பேசுதல்
இ) தமிழில் பேசுதல்
ஈ) சத்தமாகப் பேசுதல்

**80. _______ செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.**

அ) மன்னன்
ஆ) பொறாமை இல்லாதவன்
இ) பொறாமை உள்ளவன்
ஈ) செல்வந்தன்

**81. ஊர்வலத்தின் முன்னால் ______ அசைந்து வந்தது.**

அ) **தோரணம்** ஆ) வானரம் இ) வாரணம் ஈ) சந்தனம்

**82. பாஞ்சாலங்குறிச்சியில் ______ நாயை விரட்டிடும்,**

அ) **முயல்** ஆ) நரி இ) பரி ஈ) புலி

**83. மெத்தை வீடு என்று குறிப்பிடப்ப டுவது ______.**

அ) மெத்தை விரிக்கப்ப ட்ட வீடு
ஆ) படுக்கையறை உள்ள வீடு
இ) மேட்டுப் பகுதியில் உள்ள வீடு
ஈ) மாடி வீடு

**84. இயற்கை வங்கூழ் ஆட்ட – அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ______________.**

அ) நிலம் ஆ) நீர் **இ) காற்று** ஈ) நெருப்பு

**85. மக்கள் ___________ ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்.**

அ) கடலில் ஆ) காற்றில் இ) கழனியில் ஈ) **வங்கத்தில்**

**86. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது ______________.**

அ) காற்று ஆ) நாவாய் இ) **கடல்** ஈ) மணல்

**87. தமிழர்கள் சிறிய நீரநிடலகடளக் கடக்கப் பயன்படுத்தியது ____________.**

அ) கலம் ஆ) வங்கம் இ) **நாவாய்** ஈ) ஓடம்

**88. தொல்காப்பியம் கடற்பயணத்தை _____________ வழக்கம் என்று கூறுகிறது.**

அ) நன்னீர் ஆ) தண்ணீர் இ) **முந்நீர்** ஈ) கண்ணீர்

**89. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ___________.**

அ) **சுக்கான்** ஆ) நங்கூரம் இ) கண்ணடை ஈ) சமுக்கு

90. எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் _________.

அ) **இயற்சொல்** ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல்

91. பலபொருள் தரும் ஒருசொல் என்பது ____________.

அ) இயற்சொல் ஆ) **திரிசொல்** இ) திசைச்சொல் ஈ) வடசொல்

92. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி ____________.

அ) மலையாளம் ஆ) கன்னடம் இ) **சமஸ்கிருதம்** ஈ) தெலுங்கு

93. பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது_________.

அ) **மயில்** ஆ) குயில் இ) கிளி ஈ) அன்னம்

94. பின்வருவனவற்றுள் 'மலை'யைக் குறிக்கும் சொல் ________.

அ) **வெற்பு** ஆ) காடு இ) கழனி ஈ) புவி

95. ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் ______.

அ) வீடு ஆ) **கல்வி** இ) பொருள் ஈ) அணிகலன்

96. கல்வியைப் போல் ______ செல்வம் வேறில்லை.

அ) விலையில்லாத ஆ) **கேடில்லாத** இ) உயர்வில்லாத ஈ) தவறில்லாத

97. காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம் _______.

அ) கல்வி ஆ) **காலமறிதல்** இ) வினையறிதல் ஈ) மடியின்மை

98. கல்வியில்லாத நாடு _________ வீடு.

அ) **விளக்கில்லாத** ஆ) பொருளில்லாத இ) கதவில்லாத ஈ) வாசலில்லாத

99. நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒருமொழிகளின் எண்ணிக்கை ________.

அ) 40 ஆ) **42** இ) 44 ஈ) 46

100. 'எழுதினான்' என்பது ________.

அ) பெயர்ப் பகுபதம்
ஆ) வினைப் பகுபதம்
இ) பெயர்ப் பகாப்பதம்
ஈ) வினைப் பகாப்பதம்

101. பெயர்ப்பகுபதம் ________ வகைப்படும்.

அ) நான்கு ஆ) ஐந்து இ) **ஆறு** ஈ) ஏழு

102. காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு ________.

அ) பகுதி ஆ) விகுதி இ) **இடைநிலை** ஈ) சந்தி

**103. மயிலும் மானும் வனத்திற்கு __________ தருகின்றன.**

அ) களைப்பு ஆ) **வனப்பு** இ) மலைப்பு ஈ) உழைப்பு

**104. அன்னை தான் பெற்ற _______ சிரிப்பில் மகிழ்ச்சி அடைகிறார்.**

அ) தங்கையின் ஆ) தம்பியின் இ) **மழலையின்** ஈ) கணவனின்

**105. மிளகாய் வற்றலின் __________ தும்மலை வரவழைக்கும்.**

அ) **நெடி** ஆ) காட்சி இ) மணம் ஈ) ஓசை

**106. பொருந்தாத ஓசை உடைய சொல் ..................**

அ) பாய்கையால் ஆ) மேன்மையால் இ) **திரும்புகையில்** ஈ) அடிக்கையால்

**107. குகை ஓவியங்களில் வண்ணம் தீட்டப் பயன்பட்ட பொருள்களில் ஒன்று ________.**

அ) மண்துகள் ஆ) நீர் வண்ணம் இ) எண்ணெய் வண்ணம் ஈ) **கரிக்கோல்**

**108. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற்பெயர்___________.**

அ) எழுது ஆ) பாடு இ) **படித்தல்** ஈ) நடி

**109. பின்வருவனவற்றுள் முதனிலை திரிந்த தொழிற்பெயர்___________.**

அ) **ஊறு** ஆ) நடு இ) விழு ஈ) எழுதல்

**110. _______________ தீமை உண்டாகும்.**

அ) செய்யத்தகுந்த செயல்களைச் செய்வதால்

ஆ) செய்யத்தகாத செயல்களைச் செய்யாமல் இருப்பதால்

இ) **செய்யத்தகுந்த செயல்களைச் செய்யாமல் இருப்பதால்**

ஈ) எதுவும் செய்யாமல் இருப்பதால்

**111. தன்குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புபவரிடம் _______ இருக்கக் கூடாது.**

அ) **சோம்பல்** ஆ) சுறுசுறுப்பு இ) ஏழ்மை ஈ) செல்வம்

**112. மரம் வளர்த்தால் __________ பெறலாம்**

அ) மாறி ஆ) பாரி இ) காரி ஈ) பாரி

**113. உழவர் சேற்று வயலில் ___________ நடுவர்.**

அ) செடி ஆ) பயிர் இ) மரம் ஈ) **நாற்று**

**114. வயலில் விளைந்து முற்றிய நெற்ப யிர்களை ___________ செய்வர்.**

அ) **அறுவடை** ஆ) உழவு இ) நடவு ஈ) விற்பனை

**115. திருநெல்வேலி__________ மன்னர்களோடு தொடர் பு உடையது.**

அ) சேர ஆ) சோழ இ) **பாண்டிய** ஈ) பல்லவ

**116. இளங்கோ வடிகள் __________ மலைக்கு முதன்மை கொடுத்துப் பாடினார்.**

அ) இமய ஆ) கொல்லி இ) **பொதிகை** ஈ) விந்திய

**117. திருநெல்வேலி __________ ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.**

அ) காவிரி ஆ) வைகை இ) தென்பெண்ணை ஈ) **தாமிரபரணி**

**118. காந்தியடிகள் எப்போதும் ————ப் பேசினார்**

அ) வன்சொற்களை ஆ) அரசியலை இ) கதைகளை ஈ) **வாய்மையை**

**119. ஒருவர் எல்லாருக்காகவும் எல்லாரும் ஒருவருக்காக _________ என்பது நெறி.**

அ) தனியுடமை

ஆ) **பொதுவுடைமை**

இ) பொருளுடைமை

ஈ) ஒழுக்கமுடைமை

**120. செல்வத்தின் பயன் _________ வாழ்வு**

அ) ஆடம்பர ஆ) நீண்ட இ) **ஒப்புரவு** ஈ) நோயற்ற வாழ்வு.

**121. வறுமையை ப் பிணி என்றும் செல்வத்தை ________ என்றும் கூறுவர்.**

அ) **மருந்து** ஆ) மருத்துவர் இ) மருத்துவமனை ஈ) மாத்திரை

**122. உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்று கூறியவர் _________.**

அ) பாரதியார் ஆ) **பாரதிதாசன்** இ) முடியரசன் ஈ) கண்ணதாசன்

**123. ___________ ஒரு நாட்டின் அரணன்று.**

அ) காடு ஆ) **வயல்** இ) மலை ஈ) தெளிந்த நீர்

**124. மக்கள் அனைவரும் ___________ ஒத்த இயல்புடையவர்கள்.**

அ) **பிறப்பால்** ஆ) நிறத்தால் இ) குணத்தா ல் ஈ) பணத்தால்

**125. மனித வாழ்க்கையில் தேவைப்ப டுவது __________.**

அ) பணம் ஆ) பொறுமை இ) **புகழ்** ஈ) வீடு

**126. கூடு கட்டத் தெரியாத பறவை**

அ) காக்கை

ஆ) **குயில்**

இ) சிட்டுக்குருவி

ஈ) தூக்கணாங்குருவி

127. காயிதேமில்லத் ________பண்பிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார்.

அ) தண்மை
ஆ) **எளிமை**
இ) ஆடம்பரம்
ஈ) பெருமை

128. 'காயிதே மில்லத்' என்னும் அரபுச் சொல்லுக்குச் ________ என்பது பொருள்.

அ) சுற்றுலா வழிகாட்டி
ஆ) **சமுதாய வழிகாட்டி**
இ) சிந்தனை யாளர்
ஈ) சட்ட வல்லுநர்

129. விடுதலைப் போராட்டத்தின்போது காயிதேமில்லத் ________ இயக்கத்தில் கலந்துகொண்டார்.

அ) வெள்ளையனே வெளியேறு
ஆ) உப்புக்காய்ச்சும்
இ) சுதேசி
ஈ) **ஒத்துழையாமை**

130. காயிதே மில்லத் தமிழ்மொழியை ஆட்சிமொ ழியாக்க வேண்டும் என்று பேசிய இடம் ________.

அ) சட்ட மன்றம் ஆ) **நாடா ளுமன்றம்** இ) ஊராட்சி மன்றம் ஈ) நகர் மன்றம்

131. பொருளின் பெயர் அதன் உறுப்புக்கு ஆகி வருவது _______.

அ) **பொருளாகு பெயர்**
ஆ) சினையாகு பெயர்
இ) பண்பாகுபெயர்
ஈ) இடவாகு பெயர்

132. இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது என்பது _______.

அ) முதலாகு பெயர்
ஆ) **சினையாகு பெயர்**
இ) தொழிலாகு பெயர்
ஈ) பண்பாகுபெயர்

133. மழை சடசடவெ னப் பெய்தது. – இத்தொடரில் அமைந்துள்ளது _______.

அ) அடுக்குத்தொடர்
ஆ) **இரட்டைக்கிளவி**
இ) தொழிலாகு பெயர்
ஈ) பண்பாகுபெயர்

134. அடுக்குத் தொடரில் ஒரே சொல் _______ முறை வரை அடுக்கி வரும்.

அ) இரண்டு ஆ) மூன்று இ) **நான்கு** ஈ) ஐந்து

135. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ______.

அ) **வைப்பு** ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

136. பறவைகள் __________ பறந்து செல்கின்றன.

அ) நிலத்தில் ஆ) **விசும்பில்** இ) மரத்தில் ஈ) நீரில்

137. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ___________.

அ) **மரபு** ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

138. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ______ காரணமாக அமைந்தது.

அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) **அச்சுக்கலை** ஈ) நுண்கலை

139. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து _______ என அழைக்கப்படுகிறது.

அ) கோட்டெ ழுத்து

ஆ) **வட்டெழுத்து**

இ) சித்திர எழுத்து

ஈ) ஓவிய எழுத்து

140. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ______.

அ) பாரதிதாசன்

ஆ) **தந்தை பெரியார்**

இ) வ.உ. சிதம்பரனார்

ஈ) பெருஞ்சித்திரனார்

141. இதழ்களைக் குவிப்பதா ல் பிறக்கும் எழுத்துகள் ______.

அ) இ, ஈ ஆ) **உ, ஊ** இ) எ, ஏ ஈ) அ, ஆ

142. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் _______.

அ) மார்பு ஆ) கழுத்து இ) **தலை** ஈ) மூக்கு

143. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ______.

அ) தலை ஆ) **மார்பு** இ) மூக்கு ஈ) கழுத்து

144. நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் ______.

அ) க், ங் ஆ) ச், ஞ் இ) **ட், ண்** ஈ) ப், ம்

145. கீழ்இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து ______.

அ) ம் ஆ) ப் இ) ய் ஈ) **வ்**

146. பள்ளிக்குச் சென்று கல்வி ___________ சிறப்பு.

அ) **பயிலுதல்** ஆ) பார்த்தல் இ) கேட்டல் ஈ) பாடுதல்

**147. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பா ட்டிற்கேற்ப முழவை மீட்டுவது _________.**

அ) கடல் ஆ) **ஓடை** இ) குளம் ஈ) கிணறு

**148. வானில் கரு ______ தோன்றினால் மழை பொழியும் என்பர்.**

அ) **முகில்** ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்

**149. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ______யும் ஓட்டிவிடும்.**

அ) பாலனை ஆ) **காலனை** இ) ஆற்றலை ஈ) நலத்தை

**150. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ______ மதிக்கின்றனர்.**

அ) **தாயாக** ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

**151. மாடு வயலில் புல்லை மேய்ந்தது. – இத்தொடரிலுள்ள வினைமுற்று ______.**

அ) மாடு ஆ) வயல் இ) புல் ஈ) **மேய்ந்தது**

**152. பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று ______.**

அ) **படித்தான்** ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது

**153. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் ______.**

அ) செல்க ஆ) **ஓடு** இ) வாழ்க ஈ) வாழிய

**154. புகழாலும் பழியாலும் அறியப்படுவது ______.**

அ) அடக்கமுடைமை

ஆ) நாணுடைமை

இ) **நடுவுநிலைமை**

ஈ) பொருளுடைமை

**155. 'வருமுன்னர்' எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ______.**

அ) எடுத்துக்காட்டு உவமை அணி

ஆ) தற்குறிப்பேற்ற அணி

இ) **உவமை அணி**

ஈ) உருவக அணி

**156. உடல்நலம் என்பது ________ இல்லாமல் வாழ்தல் ஆகும்.**

அ) அணி ஆ) பணி இ) **பிணி** ஈ) மணி

**157. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ________.**

அ) இரண்டு ஆ) **மூன்று** இ) நான்கு ஈ) ஐந்து

158. காந்தியடிகள் ______ போற்ற வாழ்ந்தார்.

அ) நிலம் ஆ) **வையம்** இ) களம் ஈ) வானம்

159. தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்குத் ______ பயன்படுத்தினர்.

அ) **தாவரங்களை** ஆ) விலங்குகளை இ) உலோகங்களை ஈ) மருந்துகளை

160. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ______ நீட்சியாகவே உள்ளது.

அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) **உணவின்** ஈ) வாழ்வின்

161. உடல் எடை அதிகரிப்பதா ல் ஏற்படும் நோய்களுள் ஒன்று ______.

அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) புற்றுநோய் ஈ) **இரத்தக் கொதிப்பு**

162. சமையலறையில் செலவிடும் நேரம் ______ செலவிடும் நேரமாகும்.

அ) சுவைக்கா க ஆ) சிக்கனத்திற்காக இ) **நல்வாழ்வுக்காக** ஈ) உணவுக்காக

163. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ______ எனப்படும்.

அ) முற்று ஆ) **எச்சம்** இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்

164. கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் ______.

அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) **பார்த்த**

165. குறிப்பு வினையெச்சம் ______ வெளிப்படையாகக் காட்டாது.

அ) **காலத்தை** ஆ) வினையை இ) பண்பினை ஈ) பெயரை

166. கற்றவருக்கு அழகு தருவது ________.

அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) **கல்வி**

167. என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் ______ இன்றி வாழ்ந்தார்.

அ) சோம்பல் ஆ) **அகம்பாவம்** இ) வருத்தம் ஈ) வெகுளி

168. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ______.

அ) விளக்கு ஆ) **கல்வி** இ) விளையாட்டு ஈ) பாட்டு

169. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ______

அ) **இளமை** ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை

170. இன்றைய கல்வி ______ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.

அ) வீட்டில் ஆ) நாட்டில் இ) பள்ளியில் ஈ) **தொழிலில்**

171. பெயர்ச்சொ ல்லின் பொருளை வேறுபடுத்துவது _________ ஆகும்.

அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை ஈ) **வேற்றுமை**

**172. எட்டாம் வேற்றுமை ___________ வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.**

அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) **விளி** ஈ) பயனிலை

**173. உடனிகழ்ச்சிப் பொருளில் _____________ வேற்றுமை வரும்.**

அ) **மூன்றாம்** ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்

**174. 'அறத்தான் வருவதே இன்பம்' – இத்தொடரில் ________ வேற்றுமை பயின்று வந்துள்ளது.**

அ) இரண்டாம் ஆ) **மூன்றாம்** இ) ஆறாம் ஈ) ஏழாம்

**175. 'மலர் பானையை வனைந்தாள்' – இத்தொடர் ________ பொருளைக் குறிக்கிறது.**

அ) **ஆக்கல்** ஆ) அழித்தல் இ) கொடை ஈ) அடைதல்

**176. காட்டிலிருந்து வந்த _____ கரும்பைத் தின்றன.**

அ) முகில்கள் ஆ) முழவுகள் இ) **வேழங்கள்** ஈ) வேய்கள்

**177. பசியால் வாடும் _____ உணவளித்தல் நமது கடமை.**

அ) பிரிந்தவர்க்கு ஆ) **அலந்தவர்க்கு** இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவருக்கு

**178. நம்மை _____ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.**

அ) **இகழ்வாரை** ஆ) அகழ்வாரை இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை

**179. மறைபொருளைக் காத்தல் _____ எனப்படும்.**

அ) சிறை ஆ) அறை இ) கறை ஈ) **நிறை**

**180. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ______.**

அ) கல்வெட்டுகள் இ) **பனையோலைகள்**

ஆ) செப்பேடுகள் ஈ) மண்பாண்டங்கள்

**181. பானை______ ஒரு சிறந்த கலையாகும்.**

அ) செய்தல் ஆ) **வனைதல்** இ) முடைதல் ஈ) சுடுதல்

**182. சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது _____.**

அ) **வேற்றுமைத்தொகை** ஆ) உம்மைத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

**183. 'செம்மரம்' என்னும் சொல் _____த்தொகை.**

அ) வினை ஆ) **பண்பு** இ) அன்மொழி ஈ) உம்மை

**184. 'கண்ணா வா!'- என்பது _____த் தொடர்.**

அ) எழுவாய் ஆ) **விளி** இ) வினைமுற்று ஈ) வேற்றுமை

**185. அரசரை அவரது _____ காப்பாற்றும்.**

அ) செங்கோல் இ) **குற்றமற்ற ஆட்சி**

ஆ) வெண்கொற்றக்குடை ஈ) படை வலிமை

**186. சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் _____ தகுதி அறிந்து பேச வேண்டும்.**

அ) சொல்லின் ஆ) **அவையின்** இ) பொருளின் ஈ) பாடலின்

**187. தோட்டத்தில் தம்பி ஊன்றிய _________ எல்லாம் முளைத்தன.**

அ) சத்துகள் ஆ) பித்துகள் இ) முத்துகள் ஈ) **வித்துகள்**

**188. என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு __________ பெருகிற்று.**

அ) காரி ஆ) ஓரி இ)**வாரி** ஈ) பாரி

**189. கனத்த மழை என்னும் சொல்லின் பொருள் _____.**

அ) **பெருமழை** இ) எடைமிகுந்த மழை

ஆ) சிறு மழை ஈ) எடை குறைந்த மழை

**190. 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று குறிப்பிடும் நூல் _____.**

அ) **தொல்காப்பியம்** ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம்

**191. சேரர்களின் தலைநகரம் _____.**

அ) காஞ்சி ஆ) **வஞ்சி** இ) தொண்டி ஈ) முசிறி

**192. பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது _____.**

அ) புல் ஆ) **நெல்** இ) உப்பு ஈ) மிளகு

**193. ஆன்பொருநை என்று அழைக்கப்ப டும் ஆறு _____.**

அ) காவிரி ஆ) பவானி இ) நொய்யல் ஈ) **அமராவதி**

**194. வீட்டுஉபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம்_____.**

அ) நீலகிரி ஆ) கரூர் இ) **கோயம்புத்தூர்** ஈ) திண்டுக்கல்

**195. விகாரப் புணர்ச்சி _____ வகைப்படும்.**

அ) ஐந்து ஆ) நான்கு இ) **மூன்று** ஈ) இரண்டு

**196. ‘பாலாடை’ – இச்சொல்லுக்குரிய புணர்ச்சி ______**

அ) **இயல்பு** ஆ) தோன்றல் இ) திரிதல் ஈ) கெடுதல்

**197. சிங்கம் ______யில் வாழும்.**

அ) மாயை ஆ) ஊழி இ) **முழை** ஈ) அலை

**198. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ______.**

அ) வீரம் ஆ) **அச்சம்** இ) நாணம் ஈ) மகிழ்ச்சி

**199. வானில் முழுநிலவு அழகாகத் ____________ அளித்தது.**

அ) தயவு ஆ) **தரிசனம்** இ) துணிவு ஈ) தயக்கம்

**200. இந்த __________ முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.**

அ) **வையம்** ஆ) வானம் இ) ஆழி ஈ) கானகம்

**201. அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் ______ க் கண்டு அஞ்சமாட்டார்கள்.**

அ) புலனை ஆ) அறனை இ) **நமனை** ஈ) பலனை

**202. ஒன்றே ______ என்று கருதி வாழ்வதே மனிதப்பண்பாகும்.**

அ) **குலம்** ஆ) குளம் இ) குணம் ஈ) குடம்

**203. மனிதர்கள் தம் ______ தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும்.**

அ) ஐந்திணைகளை இ) நாற்றிசைகளை

ஆ) அறுசுவைகளை ஈ) **ஐம்பொறிகளை**

**204. ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் ______.**

அ) **பகர்ந்தனர்** ஆ) நுகர்ந்தனர் இ) சிறந்தனர் ஈ) துறந்தனர்

**205. மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது _________.**

அ) வானம் ஆ) கடல் இ) **மழை** ஈ) கதிரவன்

**206. ஆண்மையின் கூர்மை __**

அ) வறியவருக்கு உதவுதல்

ஆ) **பகைவருக்கு உதவுதல்**

இ) நண்பனுக்கு உதவுதல்

ஈ) உறவினருக்கு உதவுதல்

**207. வறுமை வந்த காலத்தில் ______ குறையாமல் வாழ வேண்டும்.**

அ) இன்பம் ஆ) தூக்கம் இ) **ஊக்கம்** ஈ) ஏக்கம்

**208. அடுத்தவர் வாழ்வைக் கண்டு ______ கொள்ளக்கூடாது.**

அ) உவகை ஆ) நிறை இ) **அழுக்காறு** ஈ) இன்பம்

**209. நாம் நீக்கவேண் டியவற்றுள் ஒன்று ______.**

அ) **பொச்சாப்பு** ஆ) துணிவு இ) மானம் ஈ) எளிமை

**210. உன்னுடன் நீயே______கொள்.**

அ) சேர்ந்து ஆ) பகை இ) **கைகுலுக்கிக்** ஈ) நட்பு

**211. கவலைகள்______அல்ல.**

அ) சுமைகள் ஆ) சுவைகள் இ) துன்பங்கள் ஈ) **கைக்குழந்தைகள்**

மனித நேயம் வளர்ப்போம் மானுடம் மீட்போம் சைதை சா. துரைசாமியின் மனித நேய அறக்கட்டளை

## ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக

**மரூஉ:**

- நாம் எல்லாச் சொற்களையும் எல்லா இடங்களிலும் முழுமையான வடிவத்தில் பயன்படுத்துவது இல்லை.
- **தஞ்சாவூர்** என்னும் பெயரைத் **தஞ்சை** என்றும், **திருநெல்வேலி** என்னும் பெயரை **நெல்லை** எனவும் வழங்குகிறோம்.
- இவ்வாறு இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து, சிதைந்து வழங்கும் சொற்கள் மரூஉ எனப்படும்.
- (எ.கா.)- **கோவை**, **குடந்தை**, **எந்தை**, **போது**, **சோணாடு**
- நீதிமன்றத்தில் தொடுக்கும் வழக்கு வேறு; இலக்கண வழக்கு என்பது வேறு. நம் முன்னோர் எந்தப்பொருளை எந்தச்சொல்லால் வழங்கி வந்தனரோ, அதனை அப்படியே நாமும் வழங்கி வருவதற்கு வழக்கு என்று பெயர். இஃது 1) **இயல்பு வழக்கு**, 2) **தகுதி வழக்கு** என இருவகைப்படும்.
- ஒரு பொருளைச் சுட்டுவதற்கு, எந்தச் சொல் இயல்பாக வருகிறதோ, அந்தச் சொல்லாலேயே வழங்குவதை **இயல்பு வழக்கு** என்பர்.
- இதனை 1) **இலக்கணமுடையது**, 2) **இலக்கணப்போலி**, 3) **மரூஉ** என மூவகையாகக் கூறுவர்.
- தஞ்சாவூர், கோயமுத்தூர் இவ்வூர்களை எவ்வாறு சுருக்கி அழைக்கிறோம்? தஞ்சை, கோவை.
- தஞ்சாவூர், கோயமுத்தூர் இவை **தஞ்சை**, **கோவை** எனச் சிதைந்து வந்துள்ளதால், இவற்றை மரூஉ என அழைக்கிறோம்.

**ஊர் பெயர்களின் மரூஉ:**

1. ஆற்றூர் – ஆத்தூர்
2. சேலையூர் – சேலம்
3. கருவூர்-கரூர்
4. கொடைக்கானல் – கோடை
5. மணப்பாறை – மணவை
6. விருதுநகர் – விருதை
7. பரமக்குடி – பரம்பை
8. சங்கரன்கோவில் – சங்கை
9. அம்பாசமுத்திரம் – அம்பை

10.அறந்தாங்கி – அறந்தை

11.அலங்காநல்லூர் – அலங்கை

12.சிங்களாந்தபுரம் – சிங்கை

13.சிங்காநல்லூர் – சிங்கை

14.மயிலாடுதுறை – மயூரம்

15.சேந்தமங்கலம் – சேந்தை

16.சோழிங்கநல்லூர் – சோளிங்கர்

17.திருவண்ணாமலை – அருணை

18.18.கருந்தட்டைக்குடி – கரந்தை

19.கரிவலம் வந்தநல்லூர் – கருவை

20.இராமநாதபுரம் – முகவை

21.நாகர்கோவில் – நாஞ்சி

22.மயிலாடுதுறை – மாயூரம்

23.திருத்தணி – தணிகை

24.வேதாரண்யம் – வேதை

25.திருச்செந்தூர் – செந்தூர் / திருச்சீரலைவாய் / அலைவாய்

26.தர்மபுரி -தகடூர்

27.உசிலம்பட்டி – உசிலை

28.காஞ்சிபுரம் – காஞ்சி

29.பாளையங்கோட்டை – பாளை

30.ஸ்ரீவைகுண்டம் – ஸ்ரீவை

31.ஸ்ரீவில்லிபுத்தூர் – ஸ்ரீவி

32.அருப்புக்கோட்டை -அருவை

33.சிதம்பரம் – தில்லை

34.சேதுராயன்புத்தூர் – சேராத்து

35.திருக்குருகூர்(ஆழ்வார்

36.திருநகரி)-குருகை

37.உறையூர்-உறந்தை

38.திருவாரூர் – ஆரூர்

39.மயிலாப்பூர் – மயிலை

40.வண்ணாரப்பேட்டை – வண்ணை

41.பூவிருந்தவல்லி – பூந்தமல்லி

42.சைதாப்பேட்டை – சைதை

43.வானவன் மாதேவி – மானாம் பதி

44.மன்னார்குடி – மன்னை

45.மன்னார்குடி – மண்ணை

46.நாகப்பட்டினம் – நாகை

47.புதுக்கோட்டை – புதுகை

48.புதுக்கோட்டை – புதுமை

49.புதுச்சேரி – புதுவை

50.கும்பகோணம் –குடந்தை

51.திருச்சிராப்பள்ளி – திருச்சி

52.சோழநாடு – சோணாடு

53.நாகப்பட்டினம் – நாகை

54.உதகமண்டலம் – ஊட்டி

55.உதகமண்டலம் – உதகை

56.பைம்பொழில் – பம்புளி

57.கோவன்புத்தூர் – கோயம்புத்தூர்

58.கோயம்புத்தூர் – கோவை

59.தேவகோட்டை – தேவோட்டை

60.திருநெல்வேலி – நெல்லை

61.செங்கற்பட்டு – செங்கை

62.தஞ்சை – தஞ்சாவூர்

63.திருநின்றவூர் – தின்னனூர்

## பிழை திருத்தல் (ஒரு-ஓர்)

ஒன்று என்பதைக் குறிக்க **ஓர்**, **ஒரு** ஆகிய **இரண்டு** சொற்களும் பயன்படுகின்றன.

உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் **ஓர்** என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் **ஒரு** என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

**எ.கா:**

ஓர் ஊர்

ஓர் ஏரி

ஒரு நகரம்

ஒரு கடல்

இவை போலவே, உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அஃது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

**கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக:**

1. ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.
2. ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒருநாள்.
3. அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.
4. அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை.
5. அது ஒரு இனிய பாடல்.

**விடைகள்:**

1. ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது.
2. ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒருநாள்.
3. அஃது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.
4. அது நகரத்திற்குச் செல்லும் சாலை.
5. அஃது அது ஒரு இனிய பாடல்.

## மாதிரி வினாக்கள்

**1. சரியான பதிலை தேர்ந்தெடு. (ஓர் - ஒரு)**

a) ஓர் இரவு

b) ஒரு இரவு

c) ஒன்று இரவு

d) ஒன்றிரவு

e) விடை தெரியவில்லை

விடை: a

**2. சரியான பதிலை தேர்ந்தெடு. (ஓர் - ஒரு)**

a) ஓர் வீடு

b) ஒரு வீடு

c) ஒன்று வீடு

d) ஒற்றை வீடு

e) விடை தெரியவில்லை

விடை: b

**3. சரியான பதிலை தேர்ந்தெடு. (ஓர் - ஒரு)**

a) ஒரு இலை

b) ஓரிலை

c) ஓர் இலை

d) ஒன்று இலை

e) விடை தெரியவில்லை

விடை: c

**4. சரியான பதிலை தேர்ந்தெடு. (ஓர் - ஒரு)**

a) ஓர் குடும்பம்

b) ஒற்றை குடும்பம்

c) ஒன்று குடும்பம்

d) ஒரு குடும்பம்

e) விடை தெரியவில்லை

விடை: d

**5. சரியான பதிலை தேர்ந்தெடு. (ஓர் - ஒரு)**

a) ஒன்று பரிசு

b) ஒரு பரிசு

c) ஓர் பரிசு

d) ஒற்றை பரிசு

e) விடை தெரியவில்லை

விடை: b

**6. சரியான பதிலை தேர்ந்தெடு. (ஓர் - ஒரு)**

a) ஒரு ஏணி

b) ஒற்றை ஏணி

c) ஓர் ஏணி

d) ஒன்று ஏணி

e) விடை தெரியவில்லை

விடை: c

**7. சரியான பதிலை தேர்ந்தெடு. (ஓர் - ஒரு)**

a) ஒற்றை சொல்

b) ஓர் சொல்

c) ஒன்று சொல்

d) ஒரு சொல்

e) விடை தெரியவில்லை

விடை: d

**8. சரியான பதிலை தேர்ந்தெடு. (ஓர் - ஒரு)**

a) ஒரு பறவை

b) ஓர் பறவை

c) ஒன்று பறவை

d) ஒற்றை பறவை

e) விடை தெரியவில்லை

விடை: a

**9. சரியான பதிலை தேர்ந்தெடு. (ஓர் - ஒரு)**

a) ஒன்று அறிவு

b) ஓர் அறிவு

c) ஒற்றை அறிவு

d) ஒரு அறிவு

e) விடை தெரியவில்லை

விடை: b

**10. சரியான பதிலை தேர்ந்தெடு. (ஓர் - ஒரு)**

a) ஒன்று வண்ணம்

b) ஓர் வண்ணம்

c) ஒரு வண்ணம்

d) ஒற்றை வண்ணம்

e) விடை தெரியவில்லை

விடை: c

## சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல்

**புதிய சொற்களை உருவாக்குக:**

| | |
|---|---|
| **1. விளையாட்டுத் திடல்** | |
| விளை | விளையாட்டு |
| விடல் | விடு |
| வில் | விட்டு விட்டு |
| விடுதி | திடல் |
| **2. பல்கலைக்கழகம்** | |
| பல் | கலை |
| கழகம் | பழம் |
| கல் | கபம் |
| **3. கவிதைத்திரட்டு** | |
| கவிதை | கவி |
| தை | திரட்டு |
| திட்டு | கட்டு |
| கதை | விதை |

**சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக:**

(தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ)

- பூமணி
- மழைத்தேன்
- விண்மணி
- செய்வான்
- பூவிலங்கு
- வான்மழை
- பொன்விலங்கு
- மணிமேகலை
- மணிவிளக்கு
- பொன்மணி
- பொன்விளக்கு
- பூமழை
- தேன்மழை

**கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக:**

| | | |
|---|---|---|
| **1. கரும்பு** | | |
| கரு | கம்பு | |
| **2. கவிதை** | | |
| கவி | விதை | கதை |
| **3. பதிற்றுப்பத்து** | | |
| பதி | பத்து | |

| | | |
|---|---|---|
| பற்று | துதி | |
| **4. பரிபாடல்** | | |
| பரி | பாரி | பல் |
| பால் | பாடல் | |
| **5. கலங்கரை விளக்கம்** | | |
| கலம் | கலகம் | கரை |
| கலக்கம் | விளக்கம் | |
| **6. பட்டுக்கோட்டை** | | |
| பட்டு | கோட்டை | கோடை |
| படை | கோடு | பட்டை |

**இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக:**

(நூல், மொழி, கோல், மீன், நீதி, எழுது, கண், வெளி, தமிழ், மணி, மாலை, விண்)

| | |
|---|---|
| 1. விண்மீன் | 1. தமிழ்நூல் |
| 2. மணிமாலை | 2. நீதிமொழி |
| 3. நீதிநூல் | 3. விண்மீன் |
| 4. விண்வெளி | 4. நீதிமணி |
| 5. தமிழ்மாலை | 5. மணிமொழி |
| 6. கண்மணி | 6. மீன்கண் |
| 7. எழுதுகோல் | 7. நீதிமாலை |
| 8. தமிழ்மொழி | 8. தமிழ்வெளி |

**சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைக்க:**

| | | | | |
|---|---|---|---|---|
| வாழை | தயிர் | கூடு | திடல் | பாட்டு |
| குருவி | கொய்யா | சோறு | பழம் | பறவை |
| விளையாட்டு | கூட்டம் | அவரை | போட்டி | காய் |

- வாழை + காய் = வாழைக்காய்
- வாழை + பழம் = வாழைப்பழம்
- குருவி + கூடு = குருவிக்கூடு
- குருவி + கூட்டம் = குருவிக்கூட்டம்
- விளையாட்டு + திடல்= விளையாட்டுத்திடல்
- விளையாட்டு + போட்டி = விளையாட்டுப்போட்டி
- தயிர் + கூடு = தயிர்க்கூடு
- தயிர் + சோறு = தயிர்ச்சோறு

- கொய்யா + காய் = கொய்யாக்காய்
- கொய்யா + பழம் = கொய்யாப்பழம்
- அவரை +காய் = அவரைக்காய்
- பாட்டு + போட்டி = பாட்டுப்போட்டி
- பறவை + கூடு = பறவைக்கூடு
- பறவை + கூட்டம் = பறவைக்கூட்டம்

**பொருத்தமான இடங்களில் அடைமொழியிட்டு சொற்றொடரை விரிவாக்குக:**

புத்தகம் படிக்கலாம் (நல்ல, ஆழ்ந்து, நாளும், தேர்ந்து, மகிழ்ந்து, உணர்ந்து)

- நல்ல புத்தகம் படிக்கலாம்
- நல்ல புத்தகம் ஆழ்ந்து படிக்கலாம்
- நல்ல புத்தகம் நாளும் படிக்கலாம்
- நல்ல புத்தகம் மகிழ்ந்து படிக்கலாம்
- நல்ல புத்தகம் உணர்ந்து படிக்கலாம்
- நல்ல புத்தகம் தேர்ந்து படிக்கலாம்

**விளையாடுவது நன்று (ஓடியாடி, மாலையில், சேர்ந்து, திடலில், அனைவரும்)**

- ஓடியாடி விளையாடுவது நன்று
- மாலையில் விளையாடுவது நன்று
- சேர்ந்து விளையாடுவது நன்று
- திடலில் விளையாடுவது நன்று
- அனைவரும் விளையாடுவது நன்று

**கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக:**

- **திருநெல்வேலி** - திரு, நெல், வேலி, வேல்
- **நாகப்பட்டினம்** - நாகம், பட்டினம், பட்டி, நாடி, கட்டி, கடி, படி
- **கன்னியாகுமரி** - கன்னி, கனி, குமரி, மரி, கரி, மன்னி
- **செங்கல்பட்டு** - செங்கல், கல், பட்டு, படு, செல், பல்
- **உதகமண்டலம்** - மண்டலம், மண், கண், கலம், உலகம், உண்ட

- **பட்டுக்கோட்டை -** பட்டு, கோட்டை, கோடை, படை, கோடு, படு

**கீழ்க்காணும் ஒவ்வொரு சொல்லிலிருந்தும் பத்துப் புதிய சொற்களை உருவாக்குக:**

எ.கா. கோட்பாடுகள்

கோ, கோட்பாடு, பா, பாட்டு, பாடு, கோடு, கோடுகள், கோள், கள், கடு, கட்டு.

**புதிய சொற்கள்:**

1. **நடைமுறைக்கல்வி** – நடை, முறை, கல்வி, நடைமுறை, கவி, கடை, முடை, கறை, நறை, விடை
2. **விடுகதைகள்** – விடு, கதை விதை,தை,கள்,
3. **பாடநூல்கள்** – பால், நூல், கடல், பாடல்.
4. **தமிழ்க்கலைக்களஞ்சியம்** – தமிழ், கலை, களஞ்சியம், தலை, களம், களஞ்சி, தளம், களம்
5. **முகவரிச்சீட்டுகள்** – முகவரி, சீட்டு, வரி,கரி,வடு,கடு,

## அடைப்புக்குள்ள சொல்லை தகுந்த இடத்தில் சேர்க்க

**அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு கோடிட்ட இடங்களில் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி எழுதுக:**

**1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ______________________ (திகழ்)**

விடை: திகழ்கிறது

**2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் ______________________ (கலந்துகொள்)**

விடை: கலந்துகொள்வாள்

**3. உலகில் மூவாயிரம் மொழிகள் ______________________ (பேசு)**

விடை: பேசப்படுகின்றன

**4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ______________________ (செல்)**

விடை: சென்றனர்

**5. தவறுகளைத் ______________________ (திருத்து)**

விடை: திருத்துவேன்

**அடைப்புக் குறிக்குள் இருக்கும் வினைச்சொல்லைக் காலத்துக்கு ஏற்றபடி மாற்றி எழுதுக:**

(எ.கா.) அன்று நடந்த பேச்சுப்போட்டியில் நான் ஒரு மணிநேரம் பேசினேன். (பேசு)

1. நேற்று இரவு இந்தப் பாடத்தை நான் படித்தேன்.(படி)
2. உன் வீட்டு விருந்துக்குக் கட்டாயம் நான் வருவேன். (வா)
3. அப்பா வந்ததும் திட்டுவார்.(திட்டு)
4. இப்போது நான் தமிழ் படிப்பேன்.(படி)

**பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக:**

**1. (தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களைக், நம்மை, வாழ்வியல் அறிவை)**

அ) தமிழ் ________________கொண்டுள்ளது.

ஆ) நாம் __________________வாங்க வேண்டும்

இ) புத்தகங்கள் ______________கொடுக்கின்றன.

ஈ) நல்ல நூல்கள்____________ நல்வழிப்படுத்துகின்றன.

விடை:

அ) தமிழ் செவ்விலக்கியங்களைக் கொண்டுள்ளது.

ஆ) நாம் தமிழிலக்கிய_நூல்களை வாங்க வேண்டும்

இ) புத்தகங்கள் வாழ்வியல்_அறிவைக் கொடுக்கின்றன.

ஈ) நல்ல நூல்கள் நம்மை நல்வழிப்படுத்துகின்றன.

**2. பொருத்தமான பெயரடைகளை எழுதுக.**

(நல்ல, பெரிய, இனிய, கொடிய)

அ) எல்லோருக்கும் ________________________ வணக்கம்.

ஆ) அவன் ________________________நண்பனாக இருக்கிறான்.

இ) ________________________ஓவியமாக வரைந்து வா.

ஈ) ________________________ விலங்கிடம் பழகாதே.

விடை:

அ) எல்லோருக்கும் இனிய வணக்கம்.

ஆ) அவன் நல்ல நண்பனாக இருக்கிறான்.

இ) பெரிய ஓவியமாக வரைந்து வா.

ஈ) கொடிய விலங்கிடம் பழகாதே.

**3. பொருத்தமான வினையடைகளைத் தேர்வுசெய்க.**

(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)

அ) ஊர்தி______________________சென்றது.

ஆ) காலம் ______________________ ஓடுகிறது.

இ) சங்க இலக்கியம் வாழ்க்கையை ______________________காட்டுகிறது.

ஈ) இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் __________ காட்டு.

விடை:

அ) ஊர்தி மெதுவாகச் சென்றது.

ஆ) காலம் வேகமாக ஓடுகிறது.

இ) சங்க இலக்கியம் வாழ்க்கையை அழகாகக் காட்டுகிறது.

ஈ) இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் பொதுவாகக் காட்டு.

**4. அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.**

அ) நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். (வினாத்தொடராக எழுதுக)

விடை: நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினரா? (அல்லது) இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தியவர் யார்?

ஆ) இசையின்றி அமையாது பாடல். (உடன்பாட்டுத் தொடராக அமைக்க)

விடை: இசையோடு அமையும் பாடல்

இ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? (கட்டளைத் தொடராக மாற்றுக)

விடை: நீ இதைச் செய்.

**பொருத்தமான சொற்களால் பாடலை நிறைவு செய்க:**

**(உண்மை, பயிற்சி, பொறுமை, கல்லாமை, ஊக்கம், கல்வி, பொறாமை, முயற்சி)**

**1. _________ உடையவன் மாணவன் _________ அற்றவன் மாணவன்**

விடை: பொறுமை / பொறாமை

**2. __________ கற்பவன் மாணவன் ________ தவிர்ப்பவன் மாணவன்**

விடை: கல்வி / கல்லாமை

**3. __________ பெறுபவன் மாணவன் _________ செய்பவன் மாணவன்**

விடை: பயிற்சி / முயற்சி

**4. __________ பேசுபவன் மாணவன் ________ கொள்பவன் மாணவன்**

விடை: உண்மை / ஊக்கம்

**பொருத்தமான சொல்லைக் கொண்டு பழமொழியை நிறைவு செய்க:**

**(புத்தி, அடி, காலை, பயிர், வளையாதது)**

**1. யானைக்கும் ________ சறுக்கும்**

விடை: அடி

**2. விளையும் ________ முளையிலே தெரியும்**

விடை: பயிர்

**3. ஐந்தில் ________ ஐம்பதில் வளையாது**

விடை: வளையாதது

**4. ஆத்திரக்காரனுக்குப் ________ மட்டு**

விடை: புத்தி

**5. ஆழம் தெரியாமல் ________ விடாதே**

விடை: காலை

**பொருத்தமான சொற்களால் நிரப்புக:**

**(உறுதியாக, சொத்தையாக, பல்வலி, பல்துலக்க)**

1. **மருத்துவர்:** விமலா உன் உடம்புக்கு என்ன?
2. **விமலா:** எனக்கு பல்வலி_ஐயா,
3. **மருத்துவர்:** எங்கே வாயைத் திற, பல்லெல்லாம் சொத்தையாக இருக்கிறதே.
4. **விமலா:** அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் ஐயா?
5. **மருத்துவர்:** இனிப்புகளை அதிகமாகச் சாப்பிடக்கூடாது. தினமும் இருமுறை காலையிலும், இரவிலும் பல்துலக்க வேண்டும். அப்பொழுதுதான் பற்கள் உறுதியாக இருக்கும்.
6. **விமலா:** நீங்கள் சொன்னதை நான் பின்பற்றுகிறேன் ஐயா.

**பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தொடரை நிரப்புக:**

**1. ஆய்வகம் __________ இருந்தது. (மேல் தளத்தில் / மேல் தலத்தில்)**

விடை: மேல் தளத்தில்

**2. வழியில் __________ ஒன்று வந்தது. (குருக்குப்பாதை / குறுக்குப்பாதை)**

விடை: குறுக்குப்பாதை

**3. உனக்குக் காரணம் __________ (புறியவில்லையா / புரியவில்லையா)**

விடை: புரியவில்லையா

**4. எடிசன் மின் __________ உருவாக்கினார். (விளக்கு / விலக்கு)**

விடை: விளக்கு

**5. குற்றம் __________ யாரிடம்தான் இல்லை. (குரை / குறை)**

விடை: குறை

**பொருத்தமான சொல்லை எடுத்து நிரப்புக:**

**1. நெகிழியற்ற _____________ உருவாக்குவோம். (உலகை / உளகை)**

விடை: உலகை

**2. நெகிழியை ஒழிப்போம் _____________ காப்போம். (மன்வளம் / மண்வளம்)**

விடை: மண்வளம்

**3. மேரி _____________ குதித்து ஓடிவந்தாள். (மகிள்வோடு / மகிழ்வோடு)**

விடை: மகிழ்வோடு

**4. எறும்பு _____________ கல்லும் தேயும். (ஊரக் / ஊறக்)**

விடை: ஊரக்

**5. துணிப்பை என்பது ____________ (எளிதானது / எலிதானது)**

விடை: எளிதானது

**பொருத்தமான சொல்லால் நிரப்புக:**

**1. கடற்கரையில் ________ (மனல்/மணல்) வீடு கட்டி விளையாடலாம்.**

விடை: மணல்

**2. மரத்தில் பழங்கள் ________ (குரைவாக/குறைவாக) உள்ளன.**

விடை: குறைவாக

**3. வலப்பக்க சுவரின் மேல் ________ (பல்லி/பள்ளி) இருக்கிறது.**

விடை: பல்லி

**4. ஆதிரைக்கு நல்ல ________ (வேலை/வேளை) கிடைத்துள்ளது.**

விடை: வேலை

**சூழலுக்கேற்ற உணர்வைத் தெரிவு செய்க:**

**(சிரிப்பு, மகிழ்ச்சி, வருத்தம், வியப்பு, அச்சம்)**

**1. பாட்டி புத்தாடை வாங்கித் தரும்போது ஏற்படுவது ________**

விடை: மகிழ்ச்சி

**2. மிகப்பெரிய யானையைப் பார்க்கும்போது ________**

விடை: வியப்பு

**3. கோமாளி செய்யும் செயல்களைக் காணும்போது ________**

விடை: சிரிப்பு

**4. நம்முடைய நண்பர் கீழே விழுவதைக் காணும்போது ________**

விடை: வருத்தம்

**5. திடீரென எதிரில் பாம்பைக் காணும்போது ________**

விடை: அச்சம்

**பொருத்தமான சொல்லை எடுத்து நிரப்புக:**

**1. சிரம் என்பது ________ (தலை / தளை)**

விடை: தலை

**2. இலைக்கு வேறு பெயர் ________ (தளை / தழை)**

விடை: தழை

**3. வண்டி இழுப்பது ________ (காலை / காளை)**

விடை: காளை

4. கடலுக்கு வேறு பெயர் _________ (பரவை / பறவை)

விடை: பரவை

5. பறவை வானில் _________ (பரந்தது / பறந்தது)

விடை: பறந்தது

6. கதவை மெல்லத் _________ (திரந்தான் / திறந்தான்)

விடை: திறந்தான்

7. பூ _________ வீசும். (மணம் / மனம்)

விடை: மணம்

8. புலியின் _________ சிவந்து காணப்படும். (கன் / கண்)

விடை: கண்

9. குழந்தைகள் _________ விளையாடினர். (பந்து / பன்து)

விடை: பந்து

10. வீட்டு வாசலில் _________ போட்டனர். (கோளம் / கோலம்)

விடை: கோலம்

**பொருத்தமான பெயரடைகளை எழுதுக:**

**(நல்ல, பெரிய, இனிய, கொடிய)**

1. எல்லோருக்கும் _________ வணக்கம்.

விடை: இனிய

2. அவன் _________ நண்பனாக இருக்கிறான்.

விடை: நல்ல

3. _________ ஓவியமாக வரைந்து வா.

விடை: பெரிய

4. _________ விலங்கிடம் பழகாதே.

விடை: கொடிய

**பொருத்தமான வினையடைகளைத் தேர்வுசெய்க:**

**(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)**

1. ஊர்தி _________சென்றது.

விடை: மெதுவாக

2. காலம் _________ ஓடுகிறது.

விடை: வேகமாக

**3. சங்க இலக்கியம் வாழ்க்கையை _________ காட்டுகிறது.**

விடை: அழகாக

**4. இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் _________ காட்டு.**

விடை: பொதுவாக

**வினைமுற்றாக மாற்றி எழுதுக:**

**1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் _____________ (திகழ்)**

விடை: திகழ்கிறது

**2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் _____________ (கலந்துகொள்)**

விடை: கலந்துகொள்வாள்

**3. உலகில் மூவாயிரம் மொழிகள் _____________ (பேசு)**

விடை: பேசப்படுகின்றன

**4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா _____________ (செல்)**

விடை: சென்றனர்

**5. தவறுகளைத் _____________ (திருத்து)**

விடை: திருத்துவேன்

## மாதிரி வினாக்கள்

**1. சுரர் என்பதன் எதிர்ச்சொல் தருக.**

a) தேவர்

b) அசுரர்

c) தாராள மனமுடையவர்

d) சேமிப்பவர்

e) விடை தெரியவில்லை

விடை: b

**2. எதிர்ச்சொல்லை பொருத்துக**

| | |
|---|---|
| (A) அடி | 1) ஓடாதன |
| (B) ஓடும் | 2) முடி |
| (C) ஓடியன | 3) ஓடா |
| (D) ஓடின | 4) ஓடாது |

a) 2 4 1 3

b) 3 2 1 4

c) 2 3 1 4

d) 2 3 4 1

e) விடை தெரியவில்லை

விடை: a

**3. 'மா' என்ற ஓரெழுத்து ஒருமொழிக்கு பொருத்தமில்லாத சொல்லைத் தேர்ந்தெடு.**

a) சரஸ்வதி

b) நஞ்சுக்கொடி

c) ஆணி

d) அச்சம்

e) விடை தெரியவில்லை

விடை: d

**4. 'ப' என்ற ஓரெழுத்து ஒரு மொழிக்கு பொருத்தமில்லாத சொல்லைத் தேர்ந்தெடு.**

a) காற்று

b) அழகு

c) சாபம்

d) புயல்

e) விடை தெரியவில்லை

விடை: b

**5. பொருத்துக**

| | |
|---|---|
| (A) வேணி | 1) குற்றம் |
| (B) புல் | 2) சடை |
| (C) கசடு | 3) கீழான |
| (D) பகழி | 4) அம்பு |

a) 3 1 2 4

b) 3 2 1 4

c) 2 3 1 4

d) 3 2 4 1

e) விடை தெரியவில்லை

விடை: c

**6. ஒரு பொருள் தரும் பல சொற்கள் தொடர்பான சரியான இணைகளைத் தேர்ந்தெடு.**

I. வீடு -மறு பிறவியின்மை, இல்லம்

II. பேசு -பேசுதல், திட்டுதல்

a) I மட்டும்

b) I மற்றும் II

c) II மட்டும்

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: b

**7. 'வெய்யோன்' எனும் பொருள் தரும் சொற்களைத் தேர்க.**

a) பகலவன், பரிதி, ஆதவன், ஞாயிறு

b) சந்திரன், திங்கள், பரிதி, ஞாயிறு

c) ஆதவன், நிலவு, பரிதி, ஞாயிறு

d) திங்கள், சூரியன், பகலவன், பரிதி.

e) விடை தெரியவில்லை.

விடை: a

**8. பொருந்தா இணையைத் தேர்ந்தெடு.**

a) மூவர் முதலிகள் - அப்பர், சம்பந்தர், சுந்தரர்

b) முந்நீர்- ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர்

c) நானிலம்-குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல்

d) நாற்குணம்-அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு

e) விடை தெரியவில்லை

விடை: c

**9. எதிர்ச்சொல்லை எடுத்தெழுது.**

'ஓர்தல்'

a) ஒழுக்கமற்ற

b) அறிவற்ற

c) தாழ்தல்

d) பணிதல்

e) விடை தெரியவில்லை

விடை: b

**10. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (அவர்)**

a) வந்தவர் _______________ தான்

b) வந்தவன் _______________ தான்

c) வருகின்றது _______________ தான்

d) வந்தது _______________ தான்

e) விடை தெரியவில்லை

விடை: a

**11. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

I. பிஞ்சு வகை - வடு, மூசு, குரும்பை, கச்சல்

II. அறுசுவை - இனிப்பு, கசப்பு, புளிப்பு, சலிப்பு, துவர்ப்பு, கார்ப்பு

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: b

**12. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க:**

a) ஏகலைவர், ஐந்து, ஒருமை, ஏகாதசி, ஐக்கியம்

b) ஏகாதசி, ஏகலைவர், ஐந்து, ஒருமை, ஐக்கியம்

c) ஒருமை, ஏகாதசி, ஏகலைவர், ஐந்து, ஐக்கியம்

d) ஏகலைவர், ஏகாதசி, ஐக்கியம், ஐந்து, ஒருமை

e) விடை தெரியவில்லை

விடை: d

**13. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க:**

a) உடுக்கை, உண்மை, உதயம், உபகாரம், உபாயம், உயிர்

b) உடுக்கை, உண்மை, உதயம், உபாயம், உபகாரம், உயிர்

c) உடுக்கை, உண்மை, உபகாரம், உபாயம், உதயம், உயிர்

d) உடுக்கை, உண்மை, உதயம், உயிர், உபகாரம், உபாயம்

e) விடை தெரியவில்லை

விடை: a

**14. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க:**

a) நறுமணம், நாகம், நிச்சயம், நீக்கல், நூல், நுரை,

b) நறுமணம், நாகம், நீக்கல், நிச்சயம், நுரை, நூல்

c) நறுமணம், நாகம், நிச்சயம், நீக்கல், நுரை, நூல்

d) நறுமணம், நிச்சயம்,நாகம், நீக்கல், நுரை, நூல்

e) விடை தெரியவில்லை

விடை: c

**15. சரியான இணையைக் கண்டறி.**

I. தோப்புக்கள் - பல மரங்கள் சேர்ந்தது

II. தோப்புகள் - தோப்பிலிருந்து இறக்கிவரப்பட்ட கள்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: d

**16. தவறான இணையைக் கண்டறி.**

I. சின்னக்கொடி - சிறிய கொடி

II. சின்ன கொடி - சின்னம் வரையப்பட்ட கொடி

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**17. தவறான இணையைக் கண்டறி.**

I. ஆன்ற என்றச் சொல்லின் பொருள் அயர்ந்த என்பதாகும்.

II. பூப்பறித்தாள் என்பது வினைமரபாகும்.

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: a

**18. கீழ்க்காணும் தொடரில் பொருத்தமான இணைச் சொற்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

'தேர்விற்கு __________ படித்ததால், நான் வகுப்பில் முதலாவதாக வந்தேன்'.

a) அயர்ந்தெழுந்து

b) கண்ணுங்கருத்துமாக

c) அளவிற்கதிகமாக

d) முட்டிமோதி

e) விடை தெரியவில்லை

விடை: b

**19. சரியான சொல்லைத் தேர்வு செய்து எழுதுக.**

புறாவிற்காகத் தன் உடலையே தந்த மன்னன் ________________

a) மனுநீதிச்சோழன்

b) செங்கணான்

c) சிபி மன்னன்

d) செங்குட்டுவன்

e) விடை தெரியவில்லை

விடை: c

**20. தவறாகப் பொருந்தியுள்ள இணைகள் எவை? (ஊர்ப் பெயர்களின் மரூஉ)**

I. திருநின்றவூர் - தின்னனூர்

II. ஆரைக்கால் - அரியலூர்

III. வென்கல்லூர் - பெங்களூர்

a) II மட்டும்

b) I மற்றும் III

c) I மற்றும் II

d) I, II மற்றும் III

e) விடை தெரியவில்லை

விடை: a

21. பேச்சு வழக்கு சொல்லுக்கு இணையான எழுத்து வழக்குத் தொடரைக் கண்டறிந்து எழுதுக.

‘அதை என்னிடம் குடுத்துட்டு செல்’

a) அத எங்கிட்ட குடுத்துட்டு போ

b) அத எங்கிட்ட கொடுத்துவிட்டு போ

c) அத என்னிடம் குடுத்துட்டு போ

d) அதை என்னிடம் கொடுத்துவிட்டு செல்

e) விடை தெரியவில்லை

விடை: d

22. பேச்சு வழக்கு சொல்லுக்கு இணையான எழுத்து வழக்குத் தொடரைக் கண்டறிந்து எழுதுக.

‘அவன இடப்பக்கம் வெரசா வரச்சொல்லு’

a) அவனை இடதுபக்கம் விரைவாக வரச்சொல்லு

b) அவனை இடப்பக்கம் விரைவாக வரச்சொல்லு

c) அவனை இடப்பக்கம் விரைவாக வரச்சொல்

d) அவனை இடதுபக்கம் விரைவாக வரச்சொல்

e) விடை தெரியவில்லை

விடை: c

23. பேச்சு வழக்கு சொல்லுக்கு இணையான எழுத்து வழக்குத் தொடரைக் கண்டறிந்து எழுதுக.

'சில இடத்துல நாகரீகம் பாத்து சும்மாயிருக்கனும்'

a) சில இடங்களில் நாகரீகம் பாத்து அமைதியாயிருக்க வேண்டும்

b) சில இடங்களில் நாகரிகம் பார்த்து அமைதியாயிருக்க வேண்டும்

c) சில இடங்களில் நாகரீகம் பார்த்து சும்மாயிருக்க வேண்டும்

d) சில இடங்களில் நாகரீகம் பாத்து சும்மாயிருக்க வேண்டும்

e) விடை தெரியவில்லை

விடை: b

24. **கீழ்க்காணும் சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

சுவை, காப்பியம், பூ வான், பொன், குறள்

a) காப்பியம் குறள்

b) சுவை பூ

c) காப்பியச் சுவை

d) பூ பொன்

e) விடை தெரியவில்லை

விடை: c

25. **கீழ்கண்டவற்றுள் எந்தச் சொல்லை இடம்பெற்றுள்ள பிற சொற்களுடன் இணைத்து புதிய சொல்லை உருவாக்க இயலாது?**

வான், மழை, விண், பூமணி

a) பூ

b) வான்.

c) விண்

d) மணி

e) விடை தெரியவில்லை

விடை: c

26. **கீழ்க்காணும் சொல்லில் இருந்து உருவாகாத சொல்லைத் தேர்ந்தெடு.**

'கவிதைத்திரட்டு'

a) கவி

b) திட்டு

c) கட்டு

d) ரட்டு

e) விடை தெரியவில்லை

விடை: d

27. **கீழ்காணும் தொடர்களில் (ஒரு- ஓர்) சரியாக அமைந்த தொடர் எது?**

a) நானும் அவனும் ஓர் இடத்திற்கு ஒரு முறை சென்றிருந்தோம்

b) நானும் அவனும் ஒரு இடத்திற்கு ஓர் முறை சென்றிருந்தோம்

c) நானும் அவனும் ஒரு இடத்திற்கு ஒரு முறை சென்றிருந்தோம்

d) நானும் அவனும் ஓர் இடத்திற்கு ஓர் முறை சென்றிருந்தோம்

e) விடை தெரியவில்லை

விடை: a

**28. எறும்பு என்ற சொல்லிற்கு கூட்டுப் பெயரை தேர்ந்தெடுத்து எழுது.**

a) எறும்பு மந்தை

b) எறும்பு சாரை

c) எறும்பு புற்று

d) எறும்பு கூடு

e) விடை தெரியவில்லை

விடை: b

**29. அகரவரிசைப்படி சரியாக அமைந்த வரிசையைத் தேர்க.**

பைந்தமிழ், புதுமனை, பொதுவுடைமை, போராட்டம், பாராட்டு, பேருந்து, பதிவிறக்கம்.

a) புதுமனை, போராட்டம், பாராட்டு, பைந்தமிழ், பேருந்து, பதிவிறக்கம், பொதுவுடைமை.

b) பைந்தமிழ், புதுமனை, பொதுவுடைமை, போராட்டம், பாராட்டு, பேருந்து, பதிவிறக்கம்.

c) பதிவிறக்கம், பாராட்டு, புதுமனை, பேருந்து, பைந்தமிழ், பொதுவுடைமை, போராட்டம்.

d) புதுமனை, பைந்தமிழ், போராட்டம், பொதுவுடைமை, பாராட்டு, பேருந்து, பதிவிறக்கம்.

e) விடை தெரியவில்லை

விடை: c

**30. கீழ்க்காணும் சொற்றொடருக்கு ஏற்ற இணைப்புச் சொல்லை தேர்ந்தெடு.**

'நான் விளையாடச் சென்றேன். கண்ணன் விளையாடச் சென்றான்'

a) மேலும்

b) அதனால்

c) உம்

d) எனவே

e) விடை தெரியவில்லை

விடை: c

**31. கீழ்க்காணும் சொற்றொடருக்கு ஏற்ற இணைப்புச் சொல்லை தேர்ந்தெடு.**

அரசுத் தேர்வுகள் கடினமாக இருக்கும். விடாமுயற்சியுடன் படித்து வெற்றி பெற வேண்டும்.

a) ஆகவே

b) அதனால்

c) ஏனெனில்

d) எனவே

e) விடை தெரியவில்லை

விடை: a

**32. இழிவு, மகிழ்ச்சி, அழகு, வியப்பு, இரக்கம் என்ற பொருள்களைத் தரும் ஓரெழுத்து ஒரு மொழி எது?**

a) ஓ

b) ஐ

c) சி

d) ஏ

e) விடை தெரியவில்லை

விடை: a

**33. வானம், கண், அம்பு என்ற பொருள்களைத் தரும் ஓரெழுத்து ஒரு மொழி எது?**

a) ஓ

b) ஐ

c) ஆ

d) கோ

e) விடை தெரியவில்லை

விடை: d

**34. எத்தனை இணைகள் சரியாகப் பொருந்தியுள்ளன? (ஓரெழுத்து ஒருமொழி)**

I. மூ- கேடு

II. மே - மேம்பாடு

III. மீ - மீட்சி

a) ஒரு இணை

b) இரண்டு இணைகள்

c) மூன்று இணைகள்

d) மேற்கண்ட எதுவும் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: b

**35. பொருத்துக (ஓரெழுத்து ஒரு மொழி)**

| | |
|---|---|
| (A) ஒ | 1) திசை |
| (B) நி | 2) பொருந்து |
| (C) வி | 3) விருப்பம் |
| (D) க | 4) எமன் |

a) 3 1 2 4

b) 4 2 1 3

c) 2 3 1 4

d) 4 2 3 1

e) விடை தெரியவில்லை

விடை: c

**36. "பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்**

புவியில் தான் பண்ணினானே" என்ற செய்யுளில் இடம்பெற்றுள்ள 'பதுமத்தான்' என்பது யாரைக் குறிக்கிறது?

a) சிவன்

b) முருகன்

c) பிரம்மன்

d) திருமால்

e) விடை தெரியவில்லை

விடை: c

**37. எதிர்ச்சொல் தொடர்பான தவறான இணையைக் காண்க.**

I. உடையார் × வறியவர்

II. கடையார் × உயர்ந்தவர்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: d

**38. "மத்தம் சூடும் மதோன்மத்த ரான" என்ற தொடரில் இடம்பெற்றுள்ள 'மதோன்மத்தர்' என்பது யாரைக் குறிக்கிறது?**

a) முருகன்

b) சிவன்

c) திருமால்

d) சித்தர்கள்

e) விடை தெரியவில்லை

விடை: b

**39. எதிர்ச்சொல் தொடர்பான சரியான இணையைக் காண்க.**

I. மாள × ஒன்றுசேர

II. செற்றான் × வென்றான்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: a

**40. பேச்சு வழக்கு எழுத்து வழக்கு**

பேருந்து நிலையம் அருகாமையில் வளவன் பால் குடித்துக் கொண்டிருந்தான்.

a) பேருந்து நிலையம் அருகாமையில் வளவன் பால் பருகிக் கொண்டிருந்தான்

b) பேருந்து நிலையம் அருகில் வளவன் பால் குடித்துக் கொண்டிருந்தான்

c) பேருந்து நிலையம் அருகில் வளவன் பால் பருகிக் கொண்டிருந்தான்

d) பேருந்து நிலையம் அருகே வளவன் பால் குடித்துக் கொண்டிருந்தான்

e) விடை தெரியவில்லை

விடை: c

**41. வலி, சிங்கம், வண்டு, தவளை மற்றும் குரங்கு போன்ற பல பொருளைத் தரும் ஒரு சொல்லைக் காண்க.**

a) அயில்

b) அந்தில்

c) அரி

d) அரணம்

e) விடை தெரியவில்லை

விடை: c

**42. பல பொருள் தரும் ஒரு சொல் தொடர்பான தவறான இணையைத் தேர்ந்தெடு**

I. கந்தம் -கருணை, புலன், கிழங்கு

II. கரில்-ஆழம், யானைக்கன்று

III. நாகு -முதுமை

a) II மட்டும்

b) III மட்டும்

c) I மற்றும் III

d) II மற்றும் III

e) விடை தெரியவில்லை

விடை: d

**43. எத்தனை இணைகள் சரியாகப் பொருந்தியுள்ளன? (பல பொருள் தரும் ஒரு சொல்)**

I. குலம்- மயிர், துளை

II. குழல் - குடிமை, கூட்டம்

III. கூளி - நட்பு, பேய்

a) ஒரு இணை

b) இரண்டு இணைகள்

c) மூன்று இணைகள்

d) மேற்கண்ட எதுவும் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: a

**44. இரு வினைகளின் பொருள் வேறுபாடு தருக.**

‘பரி- பறி’

a) இறங்கு - வாங்கு

b) இரங்கு - வாங்கு

c) இரங்கு - அபகரி

d) இறங்கு - அபகரி

e) விடை தெரியவில்லை

விடை: c

**45. ஒரு பொருள் தரும் பல சொற்களைக் காண்க.**

'கொழுந்து வகை'

a) தாள், தோகை, ஓலை

b) துளிர், தளிர், குருத்து

c) தண்டு, கோல், தூறு

d) சுவை, கொம்பு, கொப்பு

e) விடை தெரியவில்லை

விடை: b

**46. பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்**

அதை என்னிடம் __________.

நீ அங்கே __________.

a) கொடு, கோடு

b) கொடுத்தல், கேடு நினைத்தல்

c) தா, போ

d) கோடு, கொடு

e) விடை தெரியவில்லை

விடை: c

**47. வழி, வளி - ஒலி வேறுபாடு அறிந்து பொருள் அறிக:**

a) துன்பம், காற்று

b) காற்று, நெறி

c) நெறி, துன்பம்

d) நெறி, காற்று

e) விடை தெரியவில்லை

விடை: d

**48. கீழ்க்காணும் சொற்களுள் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்க.**

a) சொன்னாள்

b) நவின்றாள்

c) பகர்ந்தாள்

d) ஆடினாள்

e) விடை தெரியவில்லை

விடை: d

**49. பொருந்தாச் சொல்லை எடுத்தெழுதுக.**

மரங்களின் பெயர் அல்லாதது

a) நாளிகேரம்

b) கோளி

c) காலம்

d) வேரி

e) விடை தெரியவில்லை

விடை: d

**50. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்குக.**

'உற்றார்' __________

a) உறவினர்

b) பெரியர்

c) சிறியர்

d) விருந்தினர்

e) விடை தெரியவில்லை

விடை: a

**51. ஊர்ப் பெயர்களின் தவறான மருஉவை எழுதுக:**

I. ஸ்ரீவில்லிபுத்தூர் – ஸ்ரீவை

II. திருக்குருகூர் - குருகை

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: a

**52. (ஒரு, ஓர்) - நிறைவு செய்க.**

என்னிடம் ______________ எழுதுகோல் உள்ளது.

a) ஒரு

b) ஒன்று

c) ஒன்றாம்

d) ஓர்

e) விடை தெரியவில்லை

விடை: d

**53. சரியான இணைப்புச் சொல் தேர்க.**

இளையான்குடி மாறநாயனாரின் வீட்டிற்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க தானியமில்லை. ______________ அன்று விதைத்த நெல்லை அரித்து வந்து விருந்து படைத்தார்.

a) ஆகையால்

b) எனவே

c) அதனால்

d) ஏனெனில்

e) விடை தெரியவில்லை

விடை: b

**54. அடைப்புக்குள்-உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க.**

(மொழி)

a) மழலை விளையாடும் ___________ அழகு

b) மழலை சிரிக்கும் ___________ அழகு

c) மழலை உறங்கும் ___________ அழகு

d) மழலை பேசும் ___________ அழகு

e) விடை தெரியவில்லை

விடை: d

**55. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (தொடுதல்)**

a) காற்றின் மெல்லிய ________ பூக்களைத் தலையாட்ட வைக்கிறது

b) கைகளின் நேர்த்தியான ________ பூக்களை மாலையாக்குகிறது.

c) சூடான பொருளை கையால் ________ இருக்க வேண்டும்

d) __________ சுருங்கி என்பது ஒருவகைத் தாவரம்

e) விடை தெரியவில்லை

விடை: a

**56. சரியாகப் பொருந்தியுள்ள இணைகள் எவை? (ஊர்ப் பெயர்களின் மரூஉ)**

I. பைம்பொழில் – பம்புளி

II. வானவன் மாதேவி – மானாம் பதி

III. வேதாரண்யம் – வேதா

a) II மட்டும்

b) I மற்றும் III

c) I மற்றும் II

d) I, II மற்றும் III

e) விடை தெரியவில்லை

விடை: c

**57. எதிர்ச்சொல் தொடர்பான தவறாகப் பொருந்தியுள்ள இணைகள் எத்தனை.**

I. பேதம் ×வேற்றுமை

II. மடமகள் × இளமகள்

III. அந்நியர் × உறவினர்

a) ஒரு இணை

b) இரண்டு இணைகள்

c) மூன்று இணைகள்

d) மேற்கண்ட எதுவும் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: b

**58. எதிர்ச்சொல் தொடர்பான சரியாகப் பொருந்தியுள்ள இணைகள் எத்தனை.**

I. பொச்சாப்பு × சுறுசுறுப்பு

II. மோகித்து × வெறுத்து

III. முற்ற × ஒளிர்ந்த

a) ஒரு இணை

b) இரண்டு இணைகள்

c) மூன்று இணைகள்

d) மேற்கண்ட எதுவும் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: b

**59. எதிர்ச்சொல் தொடர்பான சரியாகப் பொருந்தியுள்ள இணைகள் எத்தனை.**

I. ஆயன் × ஆய்ச்சி

II. சேவல் ×பேடு

III. மின்னார் × ஆண்கள்

a) ஒரு இணை

b) இரண்டு இணைகள்

c) மூன்று இணைகள்

d) மேற்கண்ட எதுவும் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**60. நயன் என்பதன் எதிர்ச்சொல் தருக.**

a) பெருமை

b) மேன்மை

c) பொறுமை

d) கயமை

e) விடை தெரியவில்லை

விடை: d

**61. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

a) அயினி

b) பதம்

c) உண்டி

d) அம்பி

e) விடை தெரியவில்லை

விடை: d

**62. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

a) இபம்

b) அத்தி

c) விடர்

d) கரி

e) விடை தெரியவில்லை

விடை: c

**63. ஒரு பொருள் தரும் பல சொற்களைக் காண்க.**

'பழத்தோல் வகை'

a) தொலி, சிவியல்

b) தோடு, ஓடு

c) வெம்பல், மடலி

d) கூவல், வடு

e) விடை தெரியவில்லை

விடை: b

**64. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

a) மங்கை

b) மஞ்சள்

c) தேங்காய்

d) பச்சை

e) விடை தெரியவில்லை

விடை: d

**65. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

a) அரசு

b) எய்து

c) மூழ்கு

d) மார்பு

e) விடை தெரியவில்லை

விடை: a

**66. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

a) பம்மல் சம்பந்தனார்

b) ஔவை சண்முகனார்

c) சங்கரதாசு சுவாமிகள்

d) பரிதிமாற்கலைஞர்

e) விடை தெரியவில்லை

விடை: b

**67. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

a) உ.வே.சாமிநாதர்

b) மௌனி

c) பாவண்ணன்

d) ஜானகிராமன்

e) விடை தெரியவில்லை

விடை: c

**68. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

a) லிங்க புராணம்

b) வாயு சம்ஹிதை

c) திருவேங்கட அந்தாதி

d) திருக்கருவை அந்தாதி

e) விடை தெரியவில்லை

விடை: c

69. **பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

a) கைவிலங்கு

b) சுந்தர காண்டம்

c) பிரளயம்

d) பிரம்ம உபதேசம்

e) விடை தெரியவில்லை

விடை: b

70. **அகர வரிசையில் அமைந்த சொற்களைத் தேர்க**

a) வெள்ளி, புதன், திங்கள், செவ்வாய்

b) செவ்வாய், திங்கள், புதன், வெள்ளி

c) புதன், செவ்வாய், வெள்ளி, திங்கள்

d) திங்கள், வெள்ளி, செவ்வாய், புதன்

e) விடை தெரியவில்லை

விடை: b

71. **அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (அவர்கள்)**

a) ஏழாம் வகுப்பு ____________ மாணவர்கள்

b) ____________ ஏழாம் வகுப்பு மாணவர்கள்

c) __________மாணவர்கள் உள்ளனர்

d) நான் ________ மாணவர்கள்

e) விடை தெரியவில்லை

விடை: b

72. **'விருத்தாச்சலம்' என்ற ஊரின் மரூஉவை தேர்ந்தெடு**

a) விருதை

b) தாச்சுலம்

c) தாச்சலம்

d) முதுகுன்றம்

e) விடை தெரியவில்லை

விடை: d

**73. தவறாகப் பொருந்தியுள்ள இணைகள் எவை? (ஊர்ப் பெயர்களின் மரூஉ)**

I. ஈரோடு-ஈரோடை

II. கயத்தாறு-கயாறு

III. சேலம்-சேரலம்

a) II மட்டும்

b) I மற்றும் III

c) II மற்றும் III

d) I, II மற்றும் III

e) விடை தெரியவில்லை

விடை: a

**74. கீழ்க்காணும் பேச்சு வழக்கு தொடரை எழுத்து வழக்காக மாற்றுக.**

'அங்கிட்டு போய் அத நல்லா பாரு'

a) அங்கு போய் அத நல்லா பாரு

b) அங்கு சென்று அதை நன்றாக பார்

c) அங்கு சென்று அதை நல்லா பார்

d) அங்கு போய் அதை நன்றாக பார்

e) விடை தெரியவில்லை

விடை: b

**75. சரியான இணைப்புச் சொல் தருக.**

பூக்கள் அழகாகப் பூத்திருந்தன ________ பறிக்க மனமில்லை

a) எனவே

b) ஏனெனில்

c) எனினும்

d) அதனால்

e) விடை தெரியவில்லை

விடை: c

**76. சரியான இணைப்புச் சொல் தருக.**

பிறருக்குக் கொடுத்தலே செல்வத்தின் பயன் ____________ பிறருக்குக் கொடுத்து மகிழ்வோம்.

a) எனவே

b) ஏனெனில்

c) எனினும்

d) அதனால்

e) விடை தெரியவில்லை

விடை: a

**77. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (படைத்து)**

a) இணைய வலையின் உதவியால் உலகத்தையே நம் ______ கொடுக்கின்றான்.

b) பாதிக்கப்பட்ட உடலுறுப்புகளை மாற்றிப் பொருத்தி உடலையும் உயிரையும் காக்க செய்து _____விட்டான்.

c) அணுவைப் பிளந்து ஆற்றலை எடுத்து அனைத்து ______ கொள்ள முயல்கிறான்.

d) எலும்பும் தசையும் இல்லாமல் செயல்படும் எந்திர மனிதனையும் ____ விட்டான்.

e) விடை தெரியவில்லை

விடை: d

**78. இருவினைகளின் பொருளறிந்து சரியான தொடரை தெரிவு செய்க.**

பொருந்து-பொருத்து

a) மின் விசிறி பொருத்தி சரியாக பொருந்தி உள்ளதா? என்று கவனி.

b) மின்விசிறி சரியாக பொருந்தி உள்ளதா? என்று பொருத்தி கவனி.

c) மின்விசிறி சரியாக பொருத்தி, பொருந்தி உள்ளதா? கவனி என்று.

d) மின்விசிறி சரியாக பொருந்தி உள்ளதா? கவனி என்று பொருத்தி.

e) விடை தெரியவில்லை

விடை: a

**79. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

a) கட்டளைக்கலித்துறை

b) சூளாமணி வசனம்

c) மனிதத்தீவுகள்

d) நட்சத்திரமாலை

e) விடை தெரியவில்லை

விடை: c

**80. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

a) தாழ்கடல்

b) பேரொளி

c) மென்சினை

d) முந்நீர்

e) விடை தெரியவில்லை

விடை: a

**81. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

a) இளிவரல்

b) பயிரல்

c) மாகால்

d) நோக்கல்

e) விடை தெரியவில்லை

விடை: c

**82. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

a) அறன்

b) திறன்

c) வாயில்

d) அம்ம

e) விடை தெரியவில்லை

விடை: d

**83. அகர வரிசைப்படுத்துக.**

எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், ஊழி, இரண்டல்ல, உரைநடை, ஓலைச்சுவடிகள், ஆரம்நீ, ஈசன், ஐயம், ஔகாரம்

a) உரைநடை, எழுத்து, ஏழ்கடல், ஒலிவடிவம், ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஊழி, இரண்டல்ல, ஈசன், ஆரம்நீ, அழகுணர்ச்சி, ஐயம்

b) இரண்டல்ல, அழகுணர்ச்சி, ஆரம்நீ, ஈசன், உரைநடை, ஊழி, ஏழ்கடல், எழுத்து, ஒலிவடிவம், ஐயம், ஓலைச்சுவடிகள், ஔகாரம்

c) அழகுணர்ச்சி, ஆரம்நீ, இரண்டல்ல, ஈசன், உரைநடை, ஊழி, எழுத்து, ஏழ்கடல், ஐயம், ஒலிவடிவம், ஓலைச்சுவடிகள், ஔகாரம்

d) இரண்டல்ல, ஈசன், உரைநடை, ஊழி, எழுத்து, ஏழ்கடல், அழகுணர்ச்சி, ஆரம்நீ, ஐயம், ஒலிவடிவம், ஓலைச்சுவடிகள், ஔகாரம்

e) விடை தெரியவில்லை

விடை: c

**84. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.**

a) உழிஞை, உய்த்து, உஞற்று, உகிர்

b) உஞற்று, உகிர், உழிஞை, உய்த்து

c) உய்த்து, உழிஞை, உகிர், உஞற்று

d) உகிர், உஞற்று, உய்த்து, உழிஞை

e) விடை தெரியவில்லை

விடை: d

**85. இரு பொருள் தருக.**

நிறை

a) சால்பு, விடை

b) சால்பு, எடை

c) சார்பு, எடை

d) சார்பு, சால்பு

e) விடை தெரியவில்லை

விடை: b

**86. இருபொருள் தருக:**

'உரம்'

a) வலிமை, வரி

b) வலிமை, மூங்கில்

c) வலிமை, எரு

d) வலிமை, வணங்கு

e) விடை தெரியவில்லை

விடை: c

**87. கீழ்காணும் தொடர்களில் (ஒரு- ஓர்) சரியாக அமைந்த தொடர் எது?**

a) ஓர் ஊரில் ஓர் எளிய குடிசை விட்டில் வசித்து வந்தேன்

b) ஒரு ஊரில் ஓர் எளிய குடிசை விட்டில் வசித்து வந்தேன்

c) ஓர் ஊரில் ஒரு எளிய குடிசை விட்டில் வசித்து வந்தேன்

d) ஒரு ஊரில் ஒரு எளிய குடிசை விட்டில் வசித்து வந்தேன்

e) விடை தெரியவில்லை

விடை: a

**88. பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க**

a) மாலை நடக்கும் ஓர் பொதுக்கூட்டத்திற்கு ஓர் அமைச்சர் தலைமை தாங்குகிறார்

b) மாலை நடக்கும் ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஒரு அமைச்சர் தலைமை தாங்குகிறார்.

c) மாலை நடக்கும் ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஓர் அமைச்சர் தலைமை தாங்குகிறார்.

d) மாலை நடக்கும் ஓர் பொதுக்கூட்டத்திற்கு ஒரு அமைச்சர் தலைமை தாங்குகிறார்

e) விடை தெரியவில்லை

விடை: c

**89. சரியான இணைப்புச் சொல் தருக.**

கேள்வி கேட்கும் ஒவ்வொரு குழந்தையும் விஞ்ஞானிதான். ____________ குழந்தைகளாகிய நீங்கள்தாம் இவ்வுலகின் முதல் விஞ்ஞானிகள்.

a) எனவே

b) ஏனெனில்

c) மேலும்

d) அதனால்

e) விடை தெரியவில்லை

விடை: a

**90. சரியான இணைப்புச் சொல் தருக.**

சிட்டுக்குருவி உருவத்தில் சிறியது. ஆனால் வேகமாகப் பறக்கும். __________தான் விரைவாகச் செல்பவனைச் சிட்டாய்ப் பறந்து விட்டான் என்று கூறுகிறோம்.

a) எனவே

b) ஏனெனில்

c) மேலும்

d) அதனால்

e) விடை தெரியவில்லை

விடை: d

**91. பல பொருள் தரும் ஒரு சொல்லைக் காண்க.**

'கூரை, கடல், ஆகாயம்'

a) கொற்றம்

b) சீர்

c) அம்பரம்

d) கோடரம்

e) விடை தெரியவில்லை

விடை: c

**92. பல பொருள் தரும் ஒரு சொல்லைக் காண்க.**

'ஒப்பு, கனம், தராசு'

a) துலை

b) எல்

c) கடி

d) இறவு

e) விடை தெரியவில்லை

விடை: a

**93. ஒரு பொருள் தரும் பல சொற்களைக் காண்க.**

'குயிறல்'

a) அறைதல், விறல்

b) கூறல், செறிதல்

c) விஞற்றல், நொந்தல்

d) மிடறு, பெருநிலம்

e) விடை தெரியவில்லை

விடை: b

**94. ஒருபொருள் தரும் பல சொற்கள் தொடர்பான சரியான இணைகளைத் தேர்ந்தெடு.**

I. தரணி - மலை, இரவி

II. நனி - சீதம், செறிவு

a) I மட்டும்

b) I மற்றும் II

c) II மட்டும்

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: b

**95. தவறாகப் பொருந்தியுள்ள இணைகள் எவை? (ஒருபொருள் தரும் பல சொற்கள்)**

I. பால் - பக்கம்,திசை

II. பாங்கு - பக்கம், உரிமை

III. வரைதல் - சேர்த்தல், கொடுத்தல்

a) III மட்டும்

b) I மற்றும் III

c) I மற்றும் II

d) I, II மற்றும் III

e) விடை தெரியவில்லை

விடை: a

**96. கீழ்க்காணும் பேச்சு வழக்கு தொடரை எழுத்து வழக்காக மாற்றுக**

'நானு உனக்குதான் ரொம்ப நாட்களாக காத்துனு இருந்தன்'

a) நான் உனக்காகத்தான் ரொம்ப நாள்களாக காத்துனு இருந்தன்

b) நான் உனக்குதான் நீண்ட நாட்களாக காத்துனு இருந்தன்

c) நான் உனக்காகத்தான் நீண்ட நாள்களாக காத்துக் கொண்டிருந்தேன்

d) நான் உனக்காகத்தான் ரொம்ப நாட்களாக காத்துனு இருந்தன்

e) விடை தெரியவில்லை

விடை: c

**97. கீழ்க்காணும் பேச்சு வழக்கு தொடரை எழுத்து வழக்காக மாற்றுக**

'நான் கண்முழிச்சு பாத்தா நீ அங்க இல்ல'

a) நான் கண்ணவிழித்து பார்த்த அப்போ நீ இல்லை

b) நான் கண்முழித்து பார்த்த நீ அங்கே இல்லை

c) நான் கண்முழிச்சு பார்த்த பொது நீ அங்க இல்ல

d) நான் கண்விழித்து பார்த்தபொழுது நீ அங்கே இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: d

**98. பேச்சு வழக்கு தொடர்பான தவறான கூற்று/கூற்றுகளைக் காண்க.**

I. யாரோ மரத்தோரமாக நிற்கிறார்கள்

II. இது பலாப்பழ சீசன் ஆச்சே

III. விருந்தாளி வரப்போறாங்க பாருங்க

a) II மற்றும் III

b) I மற்றும் III

c) I மட்டும்

d) I, II மற்றும் III

e) விடை தெரியவில்லை

விடை: c

**99. பொருத்துக:**

| | |
|---|---|
| (A) சேக்கை | 1) வெந்தது |
| (B) நொடை | 2) விலை |
| (C) தெங்கு | 3) படுக்கை |
| (D) வேவை | 4) தேங்காய் |

a) 3 1 2 4

b) 3 2 1 4

c) 2 3 1 4

d) 3 2 4 1

e) விடை தெரியவில்லை

விடை: d

**100. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

a) நமன்

b) காலன்

c) தமியன்

d) மறலி

e) விடை தெரியவில்லை

விடை: c